# மார்டின் லூதரின் 20

# நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்



# மார்ட்டின் லூதரின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

புலவர் என்.வி. கலைமணி எம்.ஏ.,

சாந்தி நிலையம்
புதிய எண். 126, உஸ்மான் சாலை,
தி. நகர், சென்னை-600017.

விலை : ரூ. 24-00

☐ MARTIN LUTHARIN NAMMAI MEMPADUTHUM ENNANGAL ☐ By: N. V. Kalaimani ☐ First Edition: December 2000 ☐ Price Rs. 24-00 ☐ Copy Right Holder: Bhaarathe Pathippaham, Chennai-17. ☐ Published by: SHANTHI NILAYAM New No. 126, Usman Road, T. Nagar, Chennai-600017. Phone: 4340205 P.P. ☐ Printed at: Kumar Printers, Chennai-600033. ☐

# பதிப்புரை

"நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்" என்ற தலைப்பில் உலகப் பேரறிஞர்கள் பலரது கருத்துக் களையும் நமது நாட்டில் உள்ள பல்வேறு சிறப்புக் குரியவர்களின் கருத்துக்களையும் எங்கள் நிறுவனம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

அந்த வரிசையில் தனது வாழ்வையே மக்களுக்காக அர்ப்பணித்த அஞ்சா நெஞ்சர் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த மார்ட்டின் லூதர் அவர்களுடைய எண்ணங் களை, வாழ்க்கை அனுபவங்களை இங்கு தொகுத்து வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

எமது வெளியீடுகளுக்கு மக்களிடையே உள்ள பேராதரவைப் போல அதிகமான ஆதரவு இந்நாலுக்கு கிட்டும் என்று நம்புகின்றோம். படியுங்கள்! பயன் பெறுங்கள்!

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | ஜான் ஹஸ், சவனரோலா<br>கொல்லப்பட்டது ஏன்? | 5 |
| 2. | மார்ட்டின் லூதரின்<br>தோற்றமும்-இளமையும் | 19 |
| 3. | மோசே, பவுல் போல லூதரும்<br>தத்துவ ஞானியானார்! | 25 |
| 4. | மரணம் நான்கு முறை<br>மார்ட்டினிடம் தோற்றது! | 31 |
| 5. | வீதி வீதியாக ஓடு ஏந்திப்<br>பிச்சை! தவம்! ஜெபம்! | 40 |
| 6. | இயேசு சிலுவை மரணம்<br>மறைக்கப்பட்ட மர்மம்! | 47 |
| 7. | ஏழுமலை மீதுள்ள ரோமாபுரி<br>ஒரு பூலோக நரகம்! | 54 |
| 8. | மதம் மீதுள்ள விசுவாசம்<br>கிறிஸ்து மீது பொங்கியது | 68 |
| 9. | மார்ட்டின் லூதரின்<br>வாதப்போர் புரட்சி! | 71 |
| 10. | சிங்கத்தின் குகையிலே<br>மூன்றாவது கர்ஜனை | 81 |
| 11. | லூதரைக் கொல்ல சதி!<br>புரொடெஸ்டண்டு பூ பூத்தது! | 86 |
| 12. | மார்ட்டின் லூதரின் மணம்! மரணம்! | 90 |

# மார்ட்டின் லூதரின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

## 1. ஜான் ஹஸ், சவனரோலா கொல்லப்பட்டது–ஏன்?

உலகத்தில் ஒரு கொள்கையை முதன் முதலாகக் கண்டுபிடித்து உருவாக்குபவர்கள் உண்டு! அதே இலட்சியத்தைக் கண்டு பிடித்தவருக்குப் பிறகு பின்பற்றி, அதை உலகின் மக்கள் மனதில், பரவச் செய்பவர்களும் உண்டு!

முன்னவர், இந்த உலகத்திற்கு வழிகாட்டியாக விளங்குபவர். ஏனென்றால், அவர் புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்தச் சிந்தனையாளர்! உலகம் வாழ்வதற்காக, மக்கள் அதைப் பின்பற்றுவதற்காக, அதனால், அந்த நாடும், சமுதாயமும் முன்னேறுவதற்காக தூற்றுதலையும் ஏசலையும், உடல் வேதனைகளையும், இறுதியாக, உயிரையே தனது லட்சியத்திற்கு விலையாகக் கொடுத்து மறைந்தவர்!

உலகம் உள்ளளவும், காரும் கடலும் உள்ளளவும், மண்ணும் விண்ணும் உள்ளளவும் அவரது புகழ் சாகாது; மறையாது; அழியாது; ஒருவேளை மீறி அழித்தாலும் அதனையும் மீறி எழும்புமளவுக்குச் சிந்தனை வளமும்–திறமும் உள்ளது என்பதால் அந்தச் சிந்தனாவாதி உலகுக்கு வழிகாட்டியாக நின்று வாழ்கின்றான்!

திருவள்ளுவர் பெருமான், சித்தார்த்தர், இயேசு நாதர், நபிகள் நாயகம், சாக்ரடீஸ், கன்பூசியஸ், ஆதி சங்கரர், இராமானுஜர், சித்தர்கள், காந்தியடிகள், கணியன் பூங்குன்றனார், திருமூலர், அசோகன், மார்ட்டின் லூதர், கார்ல மார்க்ஸ், ஆப்பிரகாம் லிங்கன், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, மற்றும் அறிவியல் வித்தகர்கள் போன்ற எண்ணற்ற மேதைகள் உள்ளார்கள்.

மேற்கண்டவர்கள் ஒவ்வொருவரும்-அவரவர் சிந்தனை வளம், திறன், உரனுக்கு ஏற்றபடி, உலகம் என்றும் அனுபவிக்கக்கூடிய புதிய புதிய அற்புதங்களைக் கண்டுபிடித்து, அனுபவித்து, நம்மையும் அனுபவிக்க வைத்துள்ளார்கள்.

இந்தச் சிந்தனைச் சிற்பிகளின் அறிவாற்றல்கள் என்னென்ன என்பதை விளக்குகின்ற நூலல்ல இது. ஓர் எடுத்துக்காட்டுக்காக மட்டுமே ஒரு குறிப்பு இது! அவ்வளவுதான்!

இந்த வழிகாட்டிகள் என்போர், என்னென்ன கண்டு பிடித்து உலகுக்கு வழிகாட்டியுள்ளார்கள் என்பது, ஓரளவு படித்த மக்கள் அறிவார்கள்!

வழிகாட்டிகளான மேற்கண்டவர்கள் கண்டுபிடித்த தத்துவத்தை; உலக நாடுகள் ஒவ்வொன்றும் ஏற்று, அதற்கான இளைமன்றங்கள் துவக்கி, உறுப்பினர்களை உருவாக்கி, ஊர் பரப்பளவுக்கு ஏற்றவாறு அந்தத் தத்துவத்திற்கு நிர்வாக உருவம் கொடுத்து, அதனை வழிநடத்திச் செல்பவர்களை தலைவர்கள் என்று கூறலாம்!

எடுத்துக்காட்டாக, கிறித்துவ மதத்திற்கான தத்துவ மழைகளை அவ்வப்போது நாட்டு மக்களைக் கூட்டிவைத்து பொழிந்தவர் இயேசு பெருமான்!

ரோமன் கத்தோலிக்கம், பிராட்டஸ்டண்டு இயக்கம், பெந்தெகோஸ்தே, சி.எஸ்.ஐ., சி.என்.ஐ. இன்னும் எத்

தனையோ பிரிகவுளை இயக்கங்களாக, உருவாக்கி வைத்து வளர்த்துச் சிலுவையிலே மறைந்தவர் அல்லர் அவர்!

இயேசு பெருமான் நடமாடிய காலத்து மக்களது வாழ் நிலைகளுக்கு ஏற்றவாறு, அவர் பல வியூகங்களிலே கருத்துக்களை ஞான போதனைகளாக ஏற்று, உலகு எங்கும் பற்பல கிளைகளை உருவாக்கி, ஓர் அரசாங்கம் போல நடந்து வரும் கிறித்துவத்தின் ரோமன் கத்தோலிக்க மதப் பிரிவு பாதிரியார்கள் இருக்கிறார்களே அவர்கள் அந்தக் கிறித்துவ மதத்தின் தலைவர்கள் ஆவர்!

இயேசு பெருமான் கூறியவை எல்லாம் உலகும், மக்களும் மனநிறைவு வளமோடு வாழ்ந்திடக் காட்டிய வழிகாட்டுதல் தத்துவங்களே ஆகும்? அதனால், அவர் கிறித்துவ மதத்தின், அது எந்தப் பிரிவு கிறித்துவ இயக்கமானாலும் சரி, அவற்றுக்கு எல்லாம் மூலவர், வழிகாட்டியவர் இயேசு பெருமான்தான். அதனால், அவரைக் கிறித்துவ மத வழிகாட்டி என்று கூறலாம்!

அந்த வழிகாட்டியின் இறை வழிபாட்டுக்குரிய நிர்வாகப் பணிகளைச் செம்மையாகச் செய்து வருபவர்தான், மதப் பிரிவு இயக்கத்தின் தலைவராக மதிக்கப்படுவார்! அந்தத் தலைவருக்குக் கீழே பணியாற்றும் தகுதி-தரத்திற் கேற்றவாறு, மாவட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சித் தலைவர்களைப் போல கிறித்துவத் தகுதிப் பதவிகளோடு பணியாற்றி வருவார்கள்!

வழிகாட்டி என்பதற்கும், தலைவர் என்பதற்கும் இடையே உள்ள உட்பொருள் அடிப்படை இவையே! எனவே, நாம் மேற்கூறியவர்கள் அனைவருமே உலக வழிகாட்டிகளே ஆவர்! அவர்களுக்குப் பின்னே, அவரவர் தத்துவங்களைப் பின்பற்றி மக்களுக்குத் தொண்டாற்றிப் பணிபுரிபவர்கள் அனைவருமே தலைவர்கள்தான்!

எடுத்துக்காட்டாக:

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்"
(அப். 16-30, 31)

"இயேசுவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை"
(ரோமர் 10;11)

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"
(ரோமர் 1:17)

"இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்"
(மத்:16.18)

"இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."
(லூக்கா 2:10, 11)

"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது"
(1 தீமோ 1:15)

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்"
(யோவான் 3:17)

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.
(யோவான் 3:16)

"இயேசுவுடைய உபதேசத்தை தாங்கள் கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

(யோவான் :42)

"கிறிஸ்து இயேசுவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்"

(1 கொரி. 13 :1)

"இயேசு கிறிஸ்துவால் மட்டுமே நமக்குப் பாவ மன்னிப்புக் கொடுப்பதற்கு அதிகாரம் உண்டு. பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டு"

(மத். 9 : 6)

"இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நமது சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்க வல்லது."

(1 யோவான் 1 : 7)

"ஒருவனும் மனுஷரைக் குறித்துப் பெருமை பாராட்டலாகாது. "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்"

"இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொருவரையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்"

(1 கொரி. 2 : 2)

மேற்கண்ட ஞான போதனைகளை இயேசு பெருமான் மக்களது வாழ்க்கை வளத்திற்காக உபதேசம் செய்தார். இந்த அறிவுரைகளை எல்லாம் அவருக்குப் பின் வந்த அவரது வாரிசுகள் தொகுத்து அழகான, அற்புதமான நூலாக்கி உலகுக்கு வழங்கினார்கள்.

அந்த நூலுக்கு வேதாகமம் என்றும், பைபிள் என்றும் பெயர் சூட்டி, அந்த நெறிகளைப் பின்பற்றி வருகிறார்கள். அந்த மார்க்கத்தைக் கிறித்துவம் என்று அழைத்து வருகிறார்கள்,

அந்த மார்க்கத்தைப் போதிக்கும் சபைக்குத் திருச்சபை என்றும், அதன் வழிகாட்டி; கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்றும், அதை உருவாக்கியவரும் அவரே என்றும்; அதை நடத்துகிறவரும், உயிரோட்டமும் அதன் ஆரம்பமும் முடிவும் இயேசு கிறிஸ்துவே என்றும்; முழு நம்பிக்கையோடு இன்றும் மக்கள் பின்பற்றி, வழிபட்டும் வருகிறார்கள்.

மனித ஆத்துமாக்களை இயேசு கிறிஸ்துவிடம் சேர்ப்பவன் அல்லது வழி நடத்துபவன்தான் கிறித்துவன். அந்தத் தொண்டுதான் கிறிஸ்துவ அடியார்களின் திருத்தொண்டாகும் என்பதற்காக கிறிஸ்துவர்கள் உலகிலே அருந்தொண்டாற்றி வருவதைப் பார்க்கிறோம்.

'பெண்களிடத்தில் பிறந்தவர்களில் பெரியவன்' என்று இயேசு மகானால் பாராட்டப்பட்ட பரிசுத்த யோவான் ஞானகுரு செய்த திருத்தொண்டும் இதே மார்க்கத் தொண்டுதான். அந்த ஞானி மக்களைக் கிறிஸ்துவிடம் வழி நடத்தினார். தனது சீடர்களை இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுமாறு பணித்தார்.

ஏசுவின் ஞானோபதேசங்கள் உலகிலே பெருக வேண்டும்; தான் சிறுக வேண்டும் என்றார். பரலோகத்தில் இருந்து வந்த இறைவன் இயேசு பெருமான். அவர் மனிதர் அனைவரையும் விட மேலானவர்.

"பிதாவானவர் குமாரனில் அன்பாய் இருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். குமாரனிடத்திலே விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாய் இருக்கிறான் குமாரனை விசுவாசியாதவன் ஜீவனைப் பார்ப்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலநிற்கும் என்று போதித்தவர் யோவான் என்ற ஞான குரு.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை, உலகுக்கு உரைக்க வேண்டும்; உணர்த்த வேண்டும் என்று கிறித்துவப் பெருமக்களுக்கு யோவான் கட்டளையிட்டார்.

எனவே, "இயேசு கிறிஸ்துதான் மக்களுக்கு மீட்பு; இரட்சிப்பு; அவரால் மட்டுமே நமக்குப் பாவ மன்னிப்பு வழங்க முடியும்; உலகத்திலே பிறந்த மக்களின் பாவங்களை மன்னிக்க மனித குமாரனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு

இயேசு சிலுவையில் சிந்திய ரத்தம் மட்டுமே மக்களின் சகல பாவங்களை நீக்கும்; மக்களைச் சுத்திகரிக்கும் வல்லமை அதற்குத்தான் உண்டு' என்று போதித்த யோவான் என்ற ஞானபோதகர்!

இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு எவருக்கும் பாவ மன்னிப்பு வழங்கும் உரிமை, அதிகாரம் கிடையாது. அவரவர் தங்களது பாவங்களை எண்ணி; மனம் வருந்தி; இனிமேல் செய்ய மாட்டோம் என்று மனம் மாறி; இயேசுவிடம் தன்னை ஒப்படைப்பவர்களுக்கு அந்த பெருமான் நிச்சயமாக பாவமன்னிப்பு வழங்குவார் என்ற நற்செய்தியை அறிவிக்கவே எந்த ஒரு கிறித்துவ ஞான குருவுக்கும் உரிமை உண்டே தவிர, மற்ற எந்த போப் என்ற குருவுக்கோ வேறு எந்த தீர்க்க தரிசிக்கோ அந்த அதிகாரம் இல்லை என்று அக்கால மக்கள் நம்பினார்கள்!

ஆனால், அந்தக் காலங்களில், அதாவது 'திணைந்தாம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில், பாவமன்னிப்புச் சீட்டுக்களைப் பணத்திற்கு விற்று, 'உனது பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என ஒரு சீட்டிலே போப் என்ற குரு எழுதிக் கொடுத்தாலே, தங்களது பாவங்கள் மன்னிக்கப் பட்டு விட்டன என்று மக்கள் நம்பி வாழ்ந்து கொண்டிருந்த பழக்கம் இருந்தது.

போப் என்ற ஒரு அக்காலத்தில் பாவமன்னிப்புச் சீட்டுக்களைப் பணத்திற்கு விற்றார்கள்! பாவமன்னிப்புச் சீட்டு ஒரு வியாபாரமாகவே நடந்து வரும் வழக்கமும் வழக்கில் இருந்து வந்தது. அந்தப் பாவமன்னிப்புச் சீட்டுக் களை விற்றுப் பணமாக்கிட இடைத்தரகர்கள், குத்தகை தாரர்கள் எல்லாம் போப்புக்கு வேண்டியவர்களே இருந்து வந்தார்கள்.

இடைக்காலத்தில் வாழ்ந்த மக்கள், சிலுவைப் போருக் குப் போவோருக்கு எல்லாம் அவர்கள் தங்களது பாவங் களுக்காக, இம்மையிலும்-மறுமையிலும் அனுபவிக்க வேண்டிய எல்லாவிதமான அநித்திய தண்டனைகளும்; அந்த பாவமன்னிப்புச் சீட்டுக்களை எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து வாங்கிக்கொண்டால், அவரவர்கள் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு விட்ட தாக மக்களை போப்பும் குருக்களும் நம்ப வைத்தார்கள். அதனால், பாவமன்னிப்பு வியாபாரம் பெரியதோர் வியா பாரமாகப் பெருகி வளர்ந்து வந்தன.

சிலுவைப் போருக்குப் போக முடியாத மக்கள் இருந் தால், அவர்கள் திருச்சபைக் கோயிலுக்கு ஒரு தொகை யைப் பணமாகச் செலுத்தி விட்டாலே போதுமானது. அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும் என்ற எண்ணத் தையும் போப் என்ற குருமார்கள் மக்களிடத்திலே உறுதிப் படுத்தி விட்டார்கள். இதனால் பாவமன்னிப்புச் சீட்டுக் களது வியாபாரம் பெருகியது.

இந்தப்பாவமன்னிப்புச் சீட்டுவழங்கும்-பெறும் உரிமை, நோயாளிகளுக்கும்; வயதான முதியோர்களுக்கும் மட்டுமே இந்த ஒழுங்குமுறை இருந்ததே தவிர, குருமார்கள் வரு மானம் பெறும் உரிமைக்காக அது இருந்ததில்லை.

ஆனால், குருமார்கள் இந்தச் சீட்டு விற்பனையை ஒரு வியாபார ஊற்றுக் கண்களாக்கி விட்டார்கள். இதனால்

குருமார்கள் பெரும் பணக்காரர்களாகவும், ஏகபோக ஆடம்பர வாழ்வாளர்களாகவும், உயர்வு தாழ்வு பேதம் உருவாகும் கருவிகளாகவும் மாறி வாழ்ந்து வந்தார்கள்.

சிலுவைப் போர் முடிந்தபின்பு இந்தப் போருக்குப் பதிலாக சில சிறப்பு விழாக்களை முன்னிட்டு ரோமாபுரி நகருக்குச் செல்லும் புண்ணிய யாத்திரைப் பழக்கத்தை அதே குருமார்கள் ஏற்படுத்தினார்கள்.

அந்தப் புனித யாத்திரைகளின்போது, மக்கள் பாவ மன்னிப்புச் சீட்டுக்களைப் பெறலாம்; புனிதத் திருத்தலப் பயணம் போக முடியாத சூழ்நிலையில் உள்ளவர்கள், பாவமன்னிப்புச் சீட்டுக்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு முடிவை போப்புகள் ஏற்படுத்தினார்கள்.

பாவமன்னிப்புச் சீட்டுக்களை வாங்குகின்றவர் அநித்திய தண்டனைகளில் இருந்து மட்டுமே பாவத்தை நீக்கிக் கொள்ளலாம். ஆனால், நரகத்தில் அனுபவிக்க வேண்டிய நிரந்தரமான தண்டனைகளிலே இருந்து அவர்களால் மீள முடியாது என்ற பயம் பொது மக்களிடையே இருந்தது.

இந்த பயம் அவர்களுக்குள் இருப்பதால், பாவமன்னிப்புச் சீட்டுக்களை மக்கள் அதிகவிலை கொடுத்து வாங்க மாட்டார்கள் என்பதைப் போப் போன்ற குருமார்கள் ரோமாபுரியிலே கூடி சிந்தித்தார்கள்.

நிரந்தரமான தண்டனைகளை நீக்கும் ஒரே வழி, (Confession) பாவ அறிக்கை விடுப்பது என்னும் உயரிய நெறியோடு அந்த சீட்டு வியாபாரத்தையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற அதன் சம்பந்தமான ஒரு முடிவைப் பாதிரிமார்கள் உருவாக்கி விட்டார்கள்.

திருச்சபையார் தங்களுக்கு விருப்பமான குருவிடம் சென்று பாவங்களை அறிக்கை செய்ய அனுமதிக்கும் மன்னிப்புச் சீட்டுக்களை விலைக்கு விற்க ஆரம்பித்தார்கள்.

இந்த சீட்டுக்களை விற்கும் வியாபாரிகளோடு: அவனவன் செய்யும் எல்லாப் பாவங்களையும் கரடு முரடு அற்ற நிலையில்; ஜாதகம் கணிப்பதைப் போல ஏதோ ஓர் கணக்கோடு கணித்து மன்னிக்கக்கூடிய ஒரு குருவும் உடன் செல்வார்.

அந்த வியாபாரியிடம் பொது மக்கள் சீட்டுக்களை விலை கொடுத்து வாங்கி அநித்திய தண்டனைகளிலே இருந்து விடுதலை பெற்ற பின்பு, வியாபாரியுடன் வந்துள்ள குருவிடம் பாவ அறிக்கை செய்வார்கள். பிறகு அந்த மக்கள் உடனே தங்களது நித்திய தண்டனைகளில் இருந்து விடுதலையாகி விடுவார்கள்.

உண்மையான பாவ மனஸ்தாபமும்-மனந்திரும்புதலும் இல்லாமல் செய்கின்ற ஒரு பாவ அறிக்கையும் மன்னிப்புக் கூறுதலும், திருச்சபையின் கொள்கைக்கு முழுக்க முழுக்க விரோதமானது.

ஆனால், அந்தக்காலத்தில் இந்தப் பழக்கம்தான் வழக்கமாக இருந்தது. இந்தப் போலியான பாவமன்னிப்பு வியாபாரத்தால், பாவமன்னிப்பும்-நித்திய மோட்சமும், பணத்தின் மதிப்புக்கும், தரத்திற்கும் ஏற்றவாறு மக்கள் இடையே விற்கப்பட்டு வந்தன.

இந்த பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரம் வேதாகமச் சத்தியத்திற்கு எவ்வளவு நேர் விரோதமானது என்பதை நாம் அறிவோம்.

வியாபாரிகளால் விற்கப்படுகின்ற பாவமன்னிப்புச் சீட்டுக்களை பணம் கொடுத்து வாங்கினால் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் பாவங்கள் மட்டுமல்ல; இறந்து மேலுலகில் இருக்கின்ற நமது முன்னோர்களின் பாவங்களும் சேர்ந்து மன்னிக்கப்படுகின்றன என்ற முட்டாள்தனமான மூட நம்பிக்கைகளும் அப்போது மக்களிடம் பரவி இருந்தன.

ஒரு திருச்சபைக்கு மக்களது பாவங்களை மன்னிக்கும் உரிமையைத் தந்தது யார்? எங்கே இருந்து வந்தது அந்த அதிகாரம்? என்ற கேள்வி கேட்டோருக்கு அப்போது போப் என்ற தலைமை குரு கூறிய பதில் இது:

''எங்களிடம் ஒவ்வொரு 'பக்தர்'களின் நற்செயல் கருவூலம்' (Treasury of Merit) இருக்கிறது. அந்த நற்செயல் கருவூலத்தின் புண்ணியத்தால்; ஒருவரது பாவங்களை மன்னிக்கும் உரிமையைப் பெற்றுள்ளோம்'' என்று; போப் அந்தப் பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரத்திற்குரிய அனுமதியைத் தந்து வருகின்றார்.

இவ்வாறு வியாபாரம் செய்வது வேதாகமச் சத்தியத்திற்கு நேர் விரோதமான செயல் என்று அந்தத் தலைமை குருவுக்குத் தெரியாதா என்ன? தெரியும்!

தெரிந்த பின்பும் கூட, பணம் வரும் வழியை உருவாக்கும் இந்தப் போலி பாவமன்னிப்பைக் கடவுள் பெயரால் போப் போன்ற குருமார்கள் செய்து வந்தார்கள்.

பணப் பேராசை, யாரை விட்டது? அதனால், அவர்களுக்குரிய புரோக்கர் என்ற இடைத்தரகர்கள் மூலமாக, இந்தப் போலி பாவமன்னிப்பு வியாபாரத்தைக் குத்தகை விட்டு பாதிரிமார்களே நடத்தி பணம் சம்பாதித்து வந்தார்கள்.

இந்த வியாபாரம் போலியானது; இதனால் பாவ மன்னிப்பு கிடையாது. தண்டனைகளிலே இருந்து இந்த சீட்டு மக்களை மீட்காது, தெய்வச் செயலுக்கே இது நேர் விரோதமானது என்று கேட்கும் தைரியம் அப்போது பொதுமக்களுக்கு ஏற்படவில்லை!

எல்லா அதிகாரங்களும் ஒருங்கே பெற்ற அக்கால போப், ஒரு, சக்கரவர்த்தியைப் போல மதசாம்ராஜ்யத்தை

அமைத்து உலகாண்டு கொண்டிருந்தார்! அதனால் அவரை அதட்டி அல்லது தட்டிக் கேட்கும் உரிமை அப்போதைய மக்களுக்குஇல்லை இல்லை. என்பது மட்டுமல்ல அந்த எண்ணமே அவர்களுக்கு வரவில்லை எனலாம்.

அந்த நேரத்தில்தான் இரண்டு பேர் போப் தலைமை மதச் சக்கரவர்த்தியை எதிர்த்துக் குரல் கொடுத்தார்கள். அவர்களது குரல் கம்பீரமாக, சிங்கக் கர்ஜனைகள் போல மத உலகில் கேட்டன.

யார் அந்த இருவர்கள்? என்ன குரல் கொடுத்து முழக்கமிட்டார்கள். இதோ அந்தக் குரல்: "போப் அவர்களே! என்ற வலுவான தொனியோடு, "நீங்கள் விற்கும் போலி பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரம் இறை உணர்வுகளுக்கு நேர் விரோதமானது.

"பாவ மன்னிப்புக்கு ஒரு சீட்டா? அந்தச் சீட்டில் 'உமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன' என்று நீங்கள் எழுதிவிட்டால், பாவத்தைச் செய்தவன் மன்னிக்கப்பட்டு விடுவானா? அதற்கு ஏதாவது முன்னோடி ஆதார எடுத்துக்காட்டுக்கள் உண்டா?"

பணத்திற்காக விற்கப்படும் பாவமன்னிப்புச் சீட்டுகள், திருச்சபை வேதாகமப் பணிக்கு விரோதமானது. அந்த பாவத்தை ஒரு தலைமை மதகுரு செய்யலாமா? நியாயந் தானா? மனசாட்சி உடைய மதச் செயலா இது?

பாவமன்னிப்பு அளிக்கும் அதிகாரம் இயேசு பெருமான் ஒருவருக்கே உண்டு! சிலுவையில் சிந்திய அவரது செங் குருதிக்கு மட்டும்தான் உண்டு! சாதாரணமான ஒரு மதகுருவுக்கு அந்த அதிகாரம் இல்லை. இதுவே ஒரு பாவச்செயல்" என்று ஜான் ஹஸ் (John Huss) என்பவர் வீர முழக்கமிட்டார்.

'போப் அவர்களே! பாவம் செய்பவர்கள் உன்னை

யிலேயே மனம் வருந்த வேண்டாமா? தாங்கள் செய்த செயல் பாவமானது ஆயிற்றே என்ற மனசாட்சியோடு அவர்கள் போராட வேண்டாமா?

'அந்தப் போராட்டத்தின் எதிரொலியாக அந்தப் பாவிகள் எனப்படுவோர் மனம் மாற வேண்டாமா? மனம் திருந்த வேண்டாமா? செய்த பாவச் செயல் மீண்டும் செய்ய மாட்டோம் என்ற மன உணர்வுகளையாவது இறைவன் முன் மண்டியிட்டு மன முருகக் கேட்க வேண்டாமா போப் அவர்களே!'

'இவை எல்லாம் இல்லாமல், பணத்திற்காக விற்கப் படும் போலி பாவமன்னிப்புச் சீட்டுகளுக்கு மன சாட்சி என்ற ஒன்று இருக்கும் என்று நம்புகிறீர்களா போப் அவர்களே!

'பாவ மன்னிப்பு என்ற தத்துவ வாழ்க்கையின் விவரத்தை விளக்கும் நற்செய்தியை மட்டுமே கூறுவதற்குப் போப் அவர்களுக்கு உரிமை உண்டே தவிர, பாவிகளது பாவங்களை மன்னிக்க நீர் யார்?"

மனிதனுக்கு உரிமை மட்டும்தான் உண்டு! தேவ குமாரனுக்குத்தான் அவர் சிந்திய ரத்தத் துளிகளுக்குத் தான் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டு! இந்த வேதாகமச் சத்தியத்தை ஒரு தலைமை மதகுரு மீறலாமா?

இவ்வாறு இடிபோல் இடித்து, மின்னல் ஒளி போன்ற கருத்துக்களை போப் எதிரில் புயல் மழை பெய்த தர்ஜிரோலாமோ செவானரோலா (Girolamo Savonarola) என்பவர் ஆவார்!

இந்த மிகப்பெரும் உலகத்தில் வாழ்ந்த மக்கள் இடையே; போப் குருவை எதிர்த்துக் கேட்கும் இறை யாண்மை; இந்த இரு பெரும் மனித குல நெஞ்சுரம்பெற்ற வர்களுக்கு மட்டுமே அக்காலத்தில் இருந்தது: தோன்றியது!

ஆனால், அந்த உண்மை விளம்பிகளுக்கு மதத் தலைமை பீடம் தந்த பரிசு என்ன தெரியுமா? அதைக் கேட்டால், நினைத்தால் நம்முடைய உயிரின் மயிர்க் கால்கள் எல்லாம் சிலிர்க்கின்றன.

இயேசு பெருமானின் இலட்சியத் தத்துவங்களை எவ் வித சுயநலமும் இல்லாமல் பின்பற்றிய, விசுவாசித்த அந்த வீரச் சிங்கங்கள் இருவரும், போப் என்ற மத ஆணவியால், பேராசைப் பணவெறியால்; பொய் அஞ் ஞானங்களை விலைக்கு விற்கும் மனச்சாட்சி விரோதியால் துன்புறுத்தப்பட்டார்கள். உயிர் துடிதுடிக்க அவர்களது உடலைக் கொலை செய்தார்கள்.

அறியாமையிலே உழன்ற மக்கள் அதிகமாக வாழ்ந்த அக் காலத்திலே, போப் வாக்கு அந்த மக்கள் இடையே தெய்வ வாக்காகவே மதிக்கப்பட்டது என்பதற்கான அடையாளமே, உண்மையை மத உலகுக்கு அறிக்கை விடுத்த ஜான் ஹஸ், சவனரோலா போன்ற உத்தமர்களின் சித்ரவதை உயிர்க்கொலைகளின் சம்பவமாகும்

இவ்வித போப் என்ற மதகுருவின் அக்கிரமத் தொண்டுகளை எதிர்த்து, திருச்சபை சீர்திருத்தம் செய்யப் பட வேண்டிய அவசியமும்-அவசரமும் உருவானது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் போப் ஆணவத்தை பணப் பேராசையின் பாவமன்னிப்புச் சீட்டு விற்பனையை எதிர்த்து, மதமக்களின் மனிதகுல மாமேதையான வழி காட்டியான ஞானகுரு என்பவர் ஒருவர் தோன்றினார். அவர் பெயர் மார்ட்டின் லூதர்-மார்ட்டின் லுத்தர் என்றும் அவர் அழைக்கப்படுகிறார்.

## 2. மார்ட்டின் லூதரின் தோற்றமும்-இளமையும்!

தோன்றும் எந்த ஒரு புதுமைக்கும், இலட்சியங்களுக்கும், தத்துவங்களுக்கும், அறிவியல் ஆற்றல்களுக்கும், இறையாண்மை அற்புதங்களுக்கும் ஊழியர்கள் அல்லது பயனாளர்கள் அந்தக் காலப் பரிணாம வளர்ச்சிக்களுக்கு ஏற்றவாறு தோன்றியாக வேண்டும். இது இயற்கைப் படைப்பின் இயல்பு!

இதற்கேற்ப, இயேசு பெருமானுடைய ஞான ஒளியான கிறித்துவ இறையாண்மையைப் பரப்பிக் கொண்டே பணியாற்றி வந்த பழங்காலத் திருச்சபையில், பிற ஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும், இயேசு மகான் திருப்பெயரை உலகுக்கு உரைப்பதற்காக பவுல் என்ற ஒரு தீர்க்கதரிசி தோன்றினார்.

இக் கருத்தைத்தான், கிறிஸ்துவ வேதாகமம் நூல் அப். 9:15,16 என்ற பகுதியில் அறிவிக்கின்றது. என்ன அது? இதோ அது:

"அவன் பிற ஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாய் இருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தின் நிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்றார் என்பதே அந்த வேதாகமக் கருத்து.

கிறித்துவத் தத்துவங்கள் உலகமல நனறாகப் போற்றப்பட்ட மத்தியகால ஆரம்பத்தில்; ஆப்பிரிக்க நாட்டிலே அகுஸ்தீன் என்ற ஞானபோதகர் தோன்றி அந்தப் பகுதியிலே கிறித்துவ மறையின் உணர்வுகளை விதையாக விதைத்தார்.

அதுபோலவே, அசிசி என்ற நகரத்தில் பிரான்சிஸ் என்ற அரிய மத ஊழியர் ஒருவர் பிறந்து வளர்ந்து, இயேசு பெருமானுடைய இலட்சியங்களைக் கனி மரங் களாகப் பயிரிட அரும்பாடுபட்டார்!

பதினாறாம் நூற்றாண்டின் துவக்கக் காலத்தில் இயேசு என்ற ஞானப் புனிதரின் ஞானத்தன்மை என்ற விளக்கைக் குன்றின் மீது ஏற்றிவைத்து ஒளிபரப்பும் ஊழியத்தையும், அவரது தூய்மை மிகுந்த வேதாகமத்தின் புனிதம் கெடாமல் பாதுகாக்கவும், அதை இந்த அறியாமை சூழ்ந்த மக்கள் இடையே எடுத்தோதவும் மார்ட்டின் லூதர் என்பவர் தோன்றினார்!

பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதிக் காலத்தில் ஜெர்மனி நாட்டில் ஹன்ஸ் லூதர், மார்க்கரேட் அம்மை யார் என்ற தம்பதிகளுக்கு 1483-ம் ஆண்டு, நவம்பர் மாதம் 10-ம் நாள் மார்ட்டின் லூதர் பிறந்தார்.

ஓர் ஏழைக் குடும்பம், எளிய உணவு, அல்லும் பகலும் அயரா உழைப்பு; வறுமையில் செம்மை; வேலையில் உண்மை; கல்வியில் ஊக்கம்; இசையில் இணையிலா ஆர்வம்; வாக்கில் வளம்; வன்மை; 'நா' நடனத்தின் பேச் சில் நயம், சாதுரியம்; எடுத்த பணியை எப்பாடு பட்டும் முடிக்கும் மனத்திண்மை; எந்த எதிர்ப்புக்கும் ஏறுபோல் நடமிடும் பீடு நடை; நியாயமான மனசாட்சி உண்மைக்கு உயிர் பலி; போன்ற சீரிய, அரிய, உரிய பண்புகளை உடையவர் மார்ட்டின் லூதர் என்ற இளைஞர்!

ஹன்ஸ் லூத்தர் வறுமையின் கோடை வெப்பம் தாங்காமல் பிறந்த ஊரை விட்டு, சாக்சோனிய மாவட்டத் தின் ஐஸ்லேபன் எனும் ஊரில் குடியேறி, செப்பு உலோகம் கிடைக்கும் சுரங்கங்களில் பணியாற்றும் சாதாரண ஒரு தொழிலாளியாய் வாழ்ந்தார்! இவருடைய மகன்தான் மார்ட்டின் லூதர் என்றால் அவரது வளர்ப்பு எப்படி அமைந்திருக்கும் என்பது நமக்குப் புலப்படுகிறது அல்லவா?

அதுசரி, மார்ட்டின் லூதர் என்ற பெயரை அவரது தந்தை ஏன் வைத்தார்? ஏதாவது காரணம் இருக்கும் தானே! பரிசுத்த மார்ட்டின் என்ற ஒரு கிறித்துவ திரு நாளுக்கு முன் நாளன்று மார்ட்டின் பிறந்ததால், அந்த ஆண் குழந்தைக்கு ஆசை காரணமாக மதப்பற்றுக் காரணமாக, மார்ட்டின் லூத்தர் Martin Luther என்று பெயரிட்டார்கள். உலகம் அவரை மார்ட்டின் லூத்தர் என்றும், மார்ட்டின் லூதர் என்றும் மனமார, மகிழ்வாக அழைத்து வருகின்றது.

வறுமையெனும் நெருப்பிலே வாடிய மார்ட்டின் குடும்பம், மீண்டும் வாழ்ந்த ஊரை விட்டு, மான்ஸ்பெல்டு என்ற வேறோர் ஊரிலே சென்று குடியேறியது. மார்ட்டின் தாயார் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி வந்து அதை விற்றுக் கிடைக்கும் பணத்திலே குடும்பம் ஓரளவு உணர்வுடன் வாழ்ந்து வந்தது.

லூதர் தாயார் மார்கரெட் கடும் உழைப்பாளி. அவரது தந்தையார் ஹன்ஸ், ஓயாது-ஒழியாது உழைக்கும் ஒரு தொழிலாளி; மார்ட்டின் தாயைப் போல, தந்தை மாதிரி பன்மடங்காக உழைக்கும் ஓர் உழைப்பாளியாக இளம் வயதிலே இருந்து வளர்ந்தவராவார்.

செப்புச் சுரங்கத் தொழிலாளியாகப் பணியில் சேர்ந்த ஹன்ஸ் லூதர், 'ஆக்கம் வழிகேட்டு ஊக்கமுடையவனை நோக்கி வரும்' என்று வள்ளுவர் பெருமானின் வாக்குக் கேற்ப, உண்மை உழைப்பு, ஊக்கத்தின் உயர்வு; இகழ்ச்சி யற்ற முயற்சி; அவரை ஒரு சுரங்கப் பங்காளியாக ஆக்கியது. பின்னர் அவரது செல்வாக்குப் பெருத்து, செல்வாக்கு உயர்ந்து, அந்த நகரம் மதிக்கும் உயர் மனிதராகவே வாழ்ந்தார்!

கி.பி. 149 -ம் ஆண்டு ஹன்ஸ் லூதரின் இடைவிடா பேருழைப்பு அவரை மான்ஸ்ஃபெல்டு Mansfeld என்ற

நகராட்சியின் உறுப்பினராக: அந்நகர மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டார். ஹன்ஸ் லூதர் மக்கள் சேவையை அப் பகுதி மக்களும், அந்த நகரமும் உச்சிமேல் வைத்துப் பாராட்டி மகிழ்ந்தது.

கல்வியாளர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் தொண் டாற்றும் தலைவர்கள், மதத் தொடர்புடைய ஞானர்கள், அரசு அதிகாரிகள், சீமான்கள், பிரபுக்கள் போன்றவர்கள் ஹன்ஸ் லுத்தரை அடிக்கடி வீடு தேடி வந்து உரையாடிச் செல்வதை மார்ட்டின் பார்த்து வியந்தார்.

தனது மகன் மார்ட்டினை தந்தையான ஹன்ஸ் ஏழாவது வயதாக இருக்கும்போது மன்ஸ் பெல்டின் ஊரி லுள்ள ஆரம்பப் பள்ளியில் கல்வி கற்றிடச் சேர்த்தார். இந்தப் பள்ளியில் கணிதம், இலத்தீன் மொழியில் பாடங் களைக் கற்றார்.

முதல் வகுப்பில் மட்டுமே மாணவர்கள் அவரவர் தாய் மொழியில் உரையாட அனுமதிக்கப்பட்டார்கள். அதற்கு மேல் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் இலத்தீன் மொழியில்தான் பேச வேண்டும்; பாடங்களைக் கற்றாக வேண்டும். ஆலய ஆராதனைகளில் ஞானப் பாட்டுக்கள் பாடுவதற்காக மாணவர்கள் தினந்தோறும் கிறித்துவத் திருக்கோயில்களுக்குச் சென்று வருவார்கள்.

மார்ட்டினும் தவறாமல் ஞானப்பாட்டு வகுப்புக்குச் சென்று வருவதால் அவருக்கு இளமையிலேயே இசைப் பயிற்சியில் நாட்டம் மிகுந்து, ஞானப்பாடல்கள் பாடுவதில் நல்ல பெயரைப் பெற்றார். பள்ளி வகுப்புக்கு நேரங் கழித்து மாணவர்கள் தாமதமாக வந்தால், தண்டனை என்ன தெரியுமா? மரத்தால் செய்யப்பட்ட கழுதை ஒன்றை இழுத்துக் கொண்டு தெருத்தெருவாக அலைய வேண்டும் என்பது பள்ளி தண்டனையாகும்.

"பிள்ளையைத் தண்டிக்காமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடிப்பதால் சாகமாட்டான்; நீ அவனைப் பிரம்பால் அடிப்பதனால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே"[2] (நீதி, 23: 13,14) என்ற சாலமோன் ஞானியின் நீதியை அந்தப் பள்ளி பின்பற்றி வந்தது. இதற்கேற்ப மாரிட்டினும் ஆசிரியரிடம் பலதடவை பிரம்படி பட்டிருக்கிறார்.

திருச்சபை சீரமைப்புக்கு முன்பு ஜெர்மனியில் கிறித்துவக் குடும்பங்கள் பக்திநெறி தவறாமல் கடைபிடித்து வந்தன. அதற்கேற்ப மாரிட்டின் தாயார் மார்கரெட் அம்மையார், கிறித்துவப் பக்தியிலும், அருங்குணமும், ஒழுக்க சீலமும் உடைய பெண்மணியாக இருந்தார். அதனால், தாயைப் போல மாரிட்டினும் தனது இளமை வயதிலிருந்தே தெய்வ பக்தியுடையவராகவே வளர்ந்தார்.

செப்புச் சுரங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர் அவர்களது எதிர்காலத்தில் வளமான வருவாயுடனும், செல்வப் பெருக்குடனும் வாழவேண்டும் என்ற எண்ணத்தால், பரிசுத்த ஆன் என்ற பெண் தெய்வத்தைத் தங்களது குல தெய்வமாக மதித்து வழிபட்டு வந்தார்கள். லுத்தர் குடும்பமும் அவ்வாறே வழிபட்டு வந்தது.

சிலுவை மரத்துண்டுகள் இரத்தச் சாட்சிகளின் எலும்புத் துண்டுகள், பரிசுத்த ஞானிகளின் ஆடை துண்டுகள், உரோமம், இரத்தச் சாட்சிகள்; கொலை செய்யப்பட்ட சட்டிகள், ஆணித் துண்டுகள் போன்றவற்றையும் பரிசுத்தப் பண்டங்களாக எண்ணி அவற்றையும் மக்கள் வணங்கி வந்தார்கள்.

இவ்வாறு வழிபாடுகள் செய்து வந்தால், சுரங்கத் தொழிலாளிகளுக்கு எந்தவித நோயும், ஆபத்தும், விபத்தும் வராது என்றும், பாவ ஆத்துமாக்களுக்கு அருள்

கிடைக்கும் என்ற நம்பிக்கை கொண்டவர்களாகவும் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

இத்தகைய மூடப் பழக்க வழக்கங்களுக்கு அக்கால மக்கள் ஆட்பட்டு வந்தமையால், அவர்களுக்கு கடவுளின் திருமுகத்தை அந்தப் பழக்க வழக்கங்கள் மறைந்து நின்றன.

உண்மையான தெய்வம் எது என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. கடவுளைக் கண்டு முன்னேற்றம் பெற மத்தியஸ்தர்கள் சிலர் தேவைப்பட்டார்கள்.

அதற்காகப் பரிசுத்த கன்னிமரியாள், சில பரிசுத்த வான்கள், போப் போன்ற பாதிரிமார்களது உதவி, குருக்களது நம்பிக்கை, பரிசுத்தப் பண்டங்கள், ஏழு சாக்கிர மந்துகள், குருமார்கள் விதிக்கும் புனித நியமங்கள், பாவ மன்னிப்புச் சீட்டுக்கள் ஆகியவற்றை துணையாக ஏற்று வாழ்ந்து வந்தார்கள். இவை, அக்காலத்து மக்களது வாழ்க்கைக்கு நம்பிக்கை சித்தாந்தங்களாகக் கடை பிடிக்கப்பட்டும் வந்தன.

தனி ஒரு கிறித்துவ மனிதனுக்கும்-இயேசு பெருமான் வழிபாட்டுக்கும் இடையே, திருச்சபையும், அதன் சட்டங்களும், ஆசாரங்களும் ஒரு தடுப்புச் சுவராகவே இருந்தன.

சாதாரண மக்கள் கிறிஸ்துவின் ஞானோபதேசங்கள் என்ன என்பதை அறிய முடியாத குறுக்குச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. போப் போன்ற மனிதர்களின் வாக்கே வேதவாக்காகக் கருதப்பட்டது.

வேதாகம நெறிகளை அவர்களால் உணர முடியாத நிலை. கடவுள் ஏதோ கோபமுடையவர் போலவும், அவரைச் சாந்திப்படுத்தப் பாதிரியார்களது கருணை

தேவை என்றும், மக்கள் பய நம்பிக்கையோடு அக்காலத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

இத்தகைய வாழ்க்கையிலே கிறித்தவ மக்கள் சிக்கிச் சீரழிந்து உண்மையை உணர முடியாமல், அதற்கான வழிகாட்டுவோர் ஆதரவும் இல்லாமல், சம்பாதிக்கும் பணத்தை கண்டபடி செலவுகள் செய்தும் பாழ்பட்ட வாழ்க்கையோடுப் போராடி வந்தார்கள்.

## 3. மோசே, பவுல் போல லூதரும் தத்துவஞானியானார்!

மார்ட்டின் லூதர் பள்ளியில் படிக்கும் போது, தனது ஆசிரியர் மரக் [illegible] லுவைதலை இழுக்கப் தண்டனை வழங்கியதைப் போல, மேலுலகத் தெய்வமும் கொடூரமான தண்டனையை அளிக்கும் ஒரு நியாயாதிபதியே என்ற எண்ணம் அவருக்கும் இருந்தது.

கிறிஸ்துவின் பெயரைக் கேட்ட உடனே தனக்கும் அது போன்ற ஒரு பய உணர்ச்சி ஏற்பட்டதாக ஞானியான பிறகு மார்ட்டினே கூறலானார்! அதற்கு அக்கால மக்களது நம்பிக்கையும்-வாழ்க்கையுமே ஒரு சூழ்நிலையாக இருந்தது என்று காரணமும் கூறினார்.

இதற்கிடையில் மார்ட்டின் தந்தை ஹன்ஸ் லூதர், தனது மகனை ஒரு பேரறிஞனாக்க வேண்டும் என்பதற்காக, மார்ட்டினுடைய பதினைந்தாம் வயதில், தனது ஊரை விட்டு, மக்டெபர்க் என்ற நகருக்கு அனுப்பினார்.

இந்த ஊரில் லூதர் ஓராண்டு கல்வி படித்தார்! அப்போது பெர்ன்பெர்க் நாட்டைச் சேர்ந்த வில்லியம் என்ற இளவரசன், துறவியாய் அந்த நகரிலே தங்கி இருந்ததைக்

கேள்விப்பட்டு மார்ட்டின் அவரைச் சென்று பார்த்தார்! அவர்கண்ட காட்சி என்ன தெரியுமா?

அந்த வில்லியம் என்ற இளவரசன், எந்தவித படை பரிவாரமும் இல்லாமல், தனிமனிதனாக, வெறுங்காலால் வீதி வீதியாய் நடந்து சென்று பிச்சை எடுத்துப் புசித்த புனிதத் தியாக வாழ்க்கையைக் கண்டேன்.

அந்த இளவரசர் கடுமையான தவத்தைச் செய்து, உடல் மெலிந்து, எலும்பும் தோலுமாகிக் கூனிப்போய் இருந்தார். தனக்குப் பின்னால் ஒருவனை நியமித்து தன்னைச் சவுக்காலே அடிக்குமாறு கூறியதற்கு ஏற்றவாறு அவரை ஒருவன் அடித்துக் கொண்டே இருந்தான்!"

இரத்தம் ஒழுக, ஒழுக மெலிந்த அவரது உடல் அடி பட்ட தழும்புகளால் வீங்கி இருந்த பரிதாபமான அந்தக் காட்சி; இளைஞன் மார்ட்டினுடைய மனத்தை உலுக்கி விட்டது. இந்த உருக்கமான காட்சி அவருடைய மனத்தை விட்டு அகலாமல், ஆழமாகப் பதிந்துவிட்டது.

இதனால், அவர் என்ன முடிவை மேற்கொண்டார் என்றால், மோட்சம் சென்றிட துறவி மார்க்கமே சிறந்தது என்ற எண்ணத்தை ஏற்றார். ஆனால், இதையறிந்த அவரது தந்தை தனது மகனை உடனடியாகத் துருக்கி நாட்டிலே உள்ள ஐசனாக் என்ற பெரிய நகருக்கு அனுப்பி கல்வி கற்குமாறு பணித்தார்.

ஐசனாக் என்ற நகர், இயற்கையின் அழகு கொழிக்கும் ஒரு நகராகும். நகரைச் சுற்றி மலைகளது மனங்கவர் காட்சியும், கவின் மிக்கக்காடும், மலர் செடி கொடிகளும் படர்ந்து மனதைப் பறிக்கும் நகராக அது இருந்தது. இந்தக் காட்சிகளால் மார்ட்டின் கவரப்பட்டார்.

ஐசனாக் அருகே உள்ள வர்ட்பர்க் என்ற கோட்டை ஒன்று இருந்தது. இந்த கோட்டை அருகே மார்ட்டின்

உரவினர்கள் துறவிகள் வாழும் மடம் ஒன்றை நடத்தி வந்தார்கள். அதனை அறிந்த மார்ட்டின்; தானும் ஒரு துறவியாக வேண்டும் என்ற முன்பிருந்த ஆசையே மீண்டும் தலைதூக்க ஆரம்பித்தது.

மேற்கண்ட் ஐசனாக் நகர இயற்கை எழில் கொஞ்சும் காட்சியும், மக்டபெர்க் நகரில் பார்த்த துறவி வில்லியம் பிரம்படிக் காட்சியையும் கண்டு சந்நியாசியாவதுதான் மோட்சம் அடைவதற்குரிய சரியான வழி என்ற முடிவிற்கு வந்த மார்ட்டின் லூதரை மற்றொரு காட்சியும் அவரது மனதைக் கவ்விக் கொண்டது. அந்த மூன்றாவது காட்சி என்ன?

கிறித்தவத்தை மக்களிடம் வழிநடத்தும் திருச்சபையை ஒரு கப்பலாக உவமித்து தீட்டப்பட்ட ஓவியம் அது. அந்தச் சித்திரம் என்ன?

' திருச்சபை என்ற கப்பலை இயக்கும் மாலுமி பரிசுத்த ஆவியானவர். போப், அத்தியட்சர்கள், குருமார்கள், துறவிகள் ஆகியோர் அந்தக் கப்டலிலே பயணம் புரியும் பயணிகள் ஆவர். இந்தப் பயணிகள் எல்லாரும் மோட்சம் எனும் கரையை நோக்கிச் செல்கிறார்கள்.

துறவிகள் ஆகாதவர்களுக்கு அந்தக் கப்பலில் பயணம் செய்ய இடமில்லை. அவர்கள் பாவம் என்ற பெருங்கடலின் நீரில் தத்தளித்துத் தவிக்கின்றார்கள். அதிலிருந்து தப்பித்துப் பிழைக்க அவர்களுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.

அந்த வழி என்னவென்றால், கப்பலில் இருந்து கீழே தொங்கவிடப்பட்டிருக்கும் இரட்சணியக் கயிற்று முடிச்சுக்களை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். சாதாரணச் சபையாரைவிடச் சாமியார்கள் எவ்வளவு பாதுகாப்போடு கப்பலில் இடம் பெற்றுள்ளார்கள் என்பது தான்.

எனவே, சாதாரணமான கிறித்துவர்களைவிடச் சாமி யார்கள் அதிகமாகப் பாதுகாப்புப் பேறு படைத்தவர் களாக உள்ளார்கள். மோட்சம் பெறுவதற்குத் துறவி களாக இருப்பதே சிறந்த வழி என்று மார்ட்டின் லூதர் மனதுக்குப் புரிந்தது. அதனால், தானும் சாமியாராவது தான் நல்லது என்ற முடிவு அவருக்குத் தோன்றியது.''

இவ்வாறான காட்சிகள், மார்ட்டின் லூதரைச் சாமி யாராக்கும் கருவிகளாக அமைந்தன. இருந்தாலும், அவர் வழக்கம் போல தனது படிப்பிலே நல்ல கவனத்தைச் செலுத்தி ஊன்றிப் படித்து வந்தார்.

அதே நேரத்தில் தனது ஓய்வுப் பொழுதுகளில் மார்ட் டின், இசைக்கருவிகளை வாசிப்பதிலும், இனிமையாகப் பாடி மகிழ்ச்சிப் பெறுவதிலும் வல்லவராக விளங்கினார். அவரது பாடல்களைக் கேட்டு மக்கள் பாராட்டினர். அவருடைய இசை ஞானத்தைப் பாராட்டி பலர் அவ்வப் போது பொருள் உதவிகளையும் செய்து வந்தார்கள்.

ஞானப் பாடல்களைப் பாடும்போது கிடைக்கும் பொருள் உதவிகளை, மார்ட்டின் தனது பல்கலைக் கழகப் படிப்பிற்காகச் செலவு செய்தார். இந்த நிலையில் அவரது படிப்புக்குரிய பொருளாதாரத் தட்டுப்பாடுகள் அடிக்கடி வந்தன. அப்போதெல்லாம் தன்னுடைய இசை ஞானத் தால் பாடல்களைப் பாடிப் பொருள் திரட்டும் வழக்கம் இருந்தது.

ஒரு முறை பல்கலைக்கழகப் படிப்பின் செலவுகளுக்குப் போதிய பணம் இல்லை. தனது வழக்கப்படி வீதியில் சென்று சில வீடுகள் முன்னாலே இனிய பாடல்களைப் பாடினார். மூன்று வீடுகளில் அவர் பாடிய பாடல்களை ஏன் என்று கேட்பார் இல்லை.

மூடிய கதவுகள் எல்லாம் மூடியபடியே இருந்தன. இதைக் கண்டு தனது படிப்புக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டு

விடுமோ என்று முகம்வாடி மனம் தளர்ந்தபடியே அவர் நான்காவதாக ஒரு வீட்டு முன்பு பாடினார்!

திடீரென்று அந்த வீட்டுக் கதவுகள் திறந்தன. மார்ட்டின் உள்ளம் உருகிப் பாடுவதைக் கண்ட உர்சுலா என்ற அவ்வீட்டு மாதரசி, அவரது பாடலையும் இசைஞானத்தையும் கேட்டு அந்த அம்மையார் மனம் உருகினார்!

இவ்வாறு பாடும் பாடகர் ஒருவர் தனக்கு மகனாகப் பிறந்திருக்கக் கூடாதா என்ற ஏக்கத்தோடு; வீட்டிற்கு வெளியே வந்து மார்ட்டினைக் கண்டாள்! அவரைத் தனது ஞான மகனாக ஏற்றாள். அவரின் படிப்புக்குரிய பணக்கஷ்ட நெருக்கடி நிலையைக் கேட்டு மிக வருத்தப் பட்டாள்!

பல்கலைக் கழகப் படிப்பு முடியும் வரைத் தனது வீட்டிலேயே தங்கி, உண்டு படித்து வருமாறு அந்தத்தாய் மார்ட்டினைக் கேட்டுக் கொண்டாள்! உர்சுலாவின் கணவர் உத்தமர்; தனது மனைவி கேட்டுக் கொண்டவாறு மார்ட்டின் தனது இல்லத்திலேயே தங்கிப் படித்துக் கொள்ளலாம் என்று, அவரும் தேறுதல் கூறினார்! மார்ட்டினுக்கு அந்த தம்பதிகள் கூறிய ஆறுதல் மொழிகள் ஆதரவாக அமைந்தன!

உர்சுலா வீட்டின் அன்பும்-கிறித்துவப் பக்தியும், அவரது படிப்பு முடியும் வரைத் தொய்வின்றித் தொடர்ந்தது. பல கலைகளில் அவர் நிபுணராகத் திகழ்ந்தார். கல்லூரிப் பேராசிரியர்கள், உடன் படிக்கும் மாணவர்கள் பாராட்டும்-நட்பும், அவருக்குப் பெரிய மகிழ்ச்சியைத் தந்தது.

ஓய்வு நேரங்களிலே எல்லாம் உர்சுலா வீடு ஞானநாதம் ஒலிக்கும் இசை வீடாகவே நிலவியது. வளர்ப்புத் தாயும் தந்தையாருமான உர்சுலா தம்பதியினரை மார்ட்டின்

தனது மரண நேரம் வரை மறக்காமலே நன்றியுடன் நடந்து வந்தார். இவ்வாறு ஐந்தாண்டுக் காலம் அக்குடும் பத்துடன் நீக்கமற உறவாடி தனது கல்வியை முடித்தார்.

மார்ட்டின் உலகம் போற்றும் புகழைப் பெற்றிருந்த போதும் கூட, தனது அன்பும்-அருளும்மிக்க உர்சுலா தாய் தந்தையாரை நினைத்து உளமாரப் பாராட்டி அவர்களது தொடர்பையும், நேயத்தையும் மறவாமல், இப்படியொரு பெற்றோர் பேறு தனக்குக் கிடைத்ததைப் பலரிடம் பேசி மகிழ்வார் மார்ட்டின்!

உர்சுலா இல்லத்து உதவி மட்டும் மார்ட்டினுக்கு அப் போது கிடைத்திராவிட்டால், அவர் பல்கலை வித்தகராக பல்கலைக் கழகக் கல்வியை முடித்திருக்க இயலாது. ஒரு சாதாரண எளிய மனிதரான மார்ட்டின், அக்காலத்து மக்களின் மூடப்பழக்க வழக்கங்களைக் கடுமையாக எதிர்த் திருக்க முடியாது.

ஒரு தனிமனிதனாக நின்று, போப் போன்ற குருவை யும், மன்னர்களையும், பிரபுக்களையும், அரசு அதிகார வர்க்கத்தையும், அவர்கள் உருவாக்கிய மத விரோதச் சக்தியையும் எதிர்த்துப் போராடி, அவர்களது ஆணவங் களையும், ஆர்ப்பாட்ட ஆடம்பரங்களையும், கடவுள் பெயரால் நடக்கும் வேதாகம விரோத அநீதிகளையும் மார்ட்டின் லூதரால் வென்று காட்டியிருக்க முடியாது.

எபிரேய மக்களை விடுதலை செய்வதற்கு மோசே எவ்வாறு பார்வோன் அரண்மனையுள் புகுந்து சகல கலை களிலும் வல்லவராகித் தனது மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தாரோ,

புற ஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் முன்பாக இயேசு பெருமானின் அருட் பெருமையை அறிவிக்கும் கருவியாக பவுல் எவ்வாறு தெய்வ வழிபாட்டுணர்வுகளோடு

கமாலியேல் கனைஞன் மூலமாக அரும்பெரும் கலைஞர் ஆனாரோ;

அவ்வாறே பதினாறாம் நூற்றாண்டில் சர்வாதிகாரம் படைத்திருந்த போப்பரசை எதிர்த்து, இயேசு பெருமான் ஞானப்புகழைப் பரப்பி வந்த திருச்சபையைச் சீர்திருத்தி அமைக்க; மார்ட்டின் லூதரும் மதத்துறையில் தோன்றினார் என்பதை மதவரலாறு நமக்கு இன்றும் உணர்த்துகின்றதைப் பார்க்கின்றோம்.

இந்த நிலை மதத்துறையில் நிலவிட, உர்சுலா குடும்பம் மார்ட்டின் லூதருக்கு செய்த உதவிதான் என்பதை நினைக்கும் போது அக்குடும்பத்துத் தம்பதிகளை மக்களால் பாராட்டாமல் இருக்க முடியுமா? அதற்குரிய காரணம், லூதர் தனது பல்கலைக் கழக வித்தகத்தைப் பெற்றதால் அல்லவா? உரையுளும் உணவும் அதற்கு அவசியம்தானே!

எனவே, இயேசு பெருமான் ஞானத்தைப் போற்றி வழிபட்டு வழிபாடுகளைப் புரியும் கிறித்துவ மெய்யடியார்கள் உர்சுலா குடும்பத்து மதச் சேவை மார்ட்டின் லூதர் மூலமாக உருவாகக் கர்த்தர் மணமும், மகிமையும் உண்டாக்கினார்!

## 4. மரணம் நான்கு முறை மார்ட்டினிடம் தோற்றது!

மார்ட்டின் லூதர் சிறந்த ஒரு வழக்கறிஞராக வேண்டும் என்று அவருடைய தந்தையார் விரும்பினார். அக்காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்த எர்பர்ட் பல்கலைக் கழகத்திற்கு சட்டம் கற்பதற்காக அவரது தந்தை அவரை அனுப்பி வைத்தார்.

பதினெட்டு வயதடைய லூதருக்கும் தனது அறிவை பல துறைகளில் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்ததால், அவரும் தந்தையார் ஏற்பாடு செய்திருந்த எர்பர்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்று சேர்ந்தார்.

மாணவர்களுக்குரிய திருச்சபைத் திருத்தொண்டிற்கும், நீதித்துறை சேவைக்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாகத் தத்துவ இயலும், இறை இயலும் கற்பிக்கப் பல்கலைக் கழகமாக எர்பர்ட் பல்கலைக்கழகம் இருந்ததால்; மார்ட்டினும் அதில் விருப்பமுடன் சேர்ந்து படித்தார்.

அங்கே சட்டத்துறையில் சேர்ந்து படிக்க வேண்டுமென்றால், முதல் ஐந்தாண்டுகள் இலத்தீன் மொழியைக் கற்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இலக்கியம், தத்துவம், இறையியல், சமயக்கலை போன்றவற்றைக் கற்க முடியும் என்ற விதி அங்கே இருந்தது.

ஒவ்வொரு துறையிலும் அறிவைப் பெறுவதுதானே மார்ட்டின் ஆசை. அதற்கேற்ப, இலத்தீன் மொழியிலே ஏற்கனவே ஆரம்பப்பள்ளியில் படிக்கும்போது போதிய பயிற்சிப் பெற்றிருந்த லூதர், வெகுவிரைவிலே சுலபமாக இலத்தீன் மொழியிலே தக்கப் புலமையைப் பெற்று விட்டார்.

மற்ற கலைகள் என்னென்ன அங்கே கற்பிக்கப்படுகின்றனவோ, அவற்றிலே எல்லாம் அவர் தனது முழுக் கவனத்தையும் செலுத்திக் கற்று வந்தார். அவரது கல்வி ஊக்கத்தையும், அதற்காக அவர் உழைத்தக் கடும் உழைப்பையும் கண்டு, பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், உடன் படிக்கும் மாணவர்கள், பல்கலை நிர்வாகத்துறையினர் அனைவரும் அவரைப் பாராட்டிப் போற்றினார்கள்.

பல்கலைக் கழகப் பாடங்களை அவர் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கும்போதே பாடங்களுக்குரிய

குறிப்புகளை எடுக்க, அங்கிருக்கும் நூல் நிலையம் சென்று, தனது கைக்குக் கிடைத்த நூற்களை எல்லாம் புரட்டிப் படிப்பார்! குறிப்புகள் எடுப்பார். எடுத்தக் குறிப்புக்களை நோட்டுப் புத்தகத்திலே எழுதிக்கொண்டு, அவற்றை ஓய்வு நேரத்திலே மீண்டும் மீண்டும் படித்து மனதில் பதித்துக் கொள்வதைப் பழக்கமாக்கிக் கொண்டார்.

கடுமையாக உழைக்கும் உழைப்பு மார்ட்டினுக்கு இளம் வயது முதலே கைவந்த ஒரு கலையாக விளங்கியதால், சளைக்காமல் களைக்காமல் நூல் நிலைய நூற்களைத் தேடித்தேடி படித்துக்கொண்டு வரும்போது எதிர் பாராமல் ஒரு புத்தகம் அவருக்குத் தென்பட்டது.

அந்த நூல், கிறித்துவ மார்க்கத்தைப் பற்றி விவரமாகக் கூறும் பரிசுத்த வேதாகாமம் என்ற நூலாகும். அந்த நூலைப் பார்த்ததும் அவருக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் கல்வி கற்க நுழைந்து அன்று வரை அது போல் ஒரு நூல் அங்கே அவருக்குக் கிடைக்காததால், அந்தப் புத்தகத்தை மகிழ்ச்சியுடன் எடுத்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்.

அந்த வேதாகமம் நூலில் 'அன்னாள், சாமுவேல் ஜெனம் சம்பவம்' காணப்பட்டது. திரும்பத் திரும்ப அந்த அத்தியாயத்தைப் படித்தார். அன்னாள் அழுது கொண்டே ஆண்டவரை ஜெபித்துக் கொண்டு கெஞ்சி நிற்கும் காட்சியும், சிறுவனான சாமுவேலிடம் கர்த்தர் பேச விரும்பிய நிகழ்ச்சியும் மார்ட்டின் லூத்தர் மனத்தை தொட்டது. அவரது இதயம் உருக ஆரம்பித்து விட்டது.

சிறுவனான சாமுவேல், 'கர்த்தரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்' என்று, கர்த்தராகிய இயேசு கிறித்துவைக் கேட்கும் வசனங்களை மார்ட்டின் பன்முறைப் படித்தார். அக்காட்சி லூத்தர் நெஞ்சிலே பசுமரத்தாணி போல

அப்படியே ஆழமாகப் பதிந்து விட்டது. அவரும் தன்னை யறியாமலே கண்ணீர்த் துளிகளைச் சிந்தினார்!

இந்த அன்னாள், சாமுவேல் காட்சியை மனமுருகப் படித்த சம்பவமானது. அன்று முதல் மார்ட்டினை ஒரு ஜெபமனிதனாக்கி விட்டது. அன்றிலிருந்து பல்கலைக் கழகப் படிப்பு பாதி, கர்த்தரை ஜெபம் செய்யும் இறை யியல் பக்தி பாதி என்ற நிலைக்கு லூதரைப் பழக்கம் பற்றிக் கொண்டது. அதையே தொடர்ந்த ஒரு வழக்கமாக வும் அவர் பழக்கப்படுத்திக் கொண்டார்.

தன்னையே உருக்கிக் கொண்டு, தத்துவ இயலையும், இறையியலையும் தொடர்ந்து அல்லும் பகலும் அயர்வில் லாமல் படித்து வந்ததால் மார்ட்டின் உடல் நலம் குன்றினார்.

அந்த அலுப்பு நோய் அவருக்குக் கொடிய நோயாகி உயிருக்கே அபாயத்தை விளைவிக்கும் வியாதியாக மாறி விட்டது. மார்ட்டின் நண்பர்களும், பல்கலைக்கழக நிர் வாகிகளும் அவருக்கு வந்துவிட்ட நோய்க்கு அவர் பலியாகி விடுவாரோ என்று அதிர்ச்சி அடைந்து, அவர்களால் முடிந்த சிகிச்சைகளை எல்லாம் அவருக்குச் செய்து பார்த் தார்கள்.

இந்த நோயின் மரண பயம், மார்ட்டினையும் ஆட்டிப் படைத்ததை அவர் கண்டார். இனி பிழைக்க மாட்டோம் என்ற நிலை அவருக்கும் புரிந்து கண் கலங்கிய நேரத்தில்; ஒரு முதியவர் அவரிடம் வந்து ஆறுதல் கூறினார்.

அவரிடம் மார்ட்டின், 'ஐயா நான் இன்னும் சில நிமிடங்களில் கர்த்தரிடம் செல்லுவேன்" என்று கண்ணீர் சிந்தியவாறே அவர் கூறியபோது, 'மார்ட்டின், கர்த்தரின் அருமை பக்தனே, பயப்படாதே, நீ இப்பொழுது சாக மாட்டாய், கடவுள் உன்னை வல்லமையான மனிதனாக்கு வார், நீ பலருக்கு ஆறுதலும், ஆசீர்வாதமுமாக இருப்

னாய்'' என்று அந்த முதியவர் மார்ட்டின் மனதைத்தேற்றி ஆறுதல் கூறினார்!

சான்றோரின் ஞானவாக்கு என்றும் பொய்க்காது என்பதற்கேற்றவாறு, மார்ட்டின் நேரம் ஆக ஆக தன்னை உணர்ந்து உடல் தேறிக் கொண்டே வந்தார்! லூத்தர் சுகமடைந்தார்! மரணம் தனது முதல் தோல்வியை மார்ட்டினிடம் சந்தித்தது! அவரைச் சூழ்ந்திருந்த அனைவரும் ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள்.

அன்று முதல் மார்ட்டின், அன்னாரனையும், சாமு வேலையும் விட மிக அதிகமாக ஜெபத்திலும், மார்க்கப் பக்தியிலும் ஈடுபட்டார்! கர்த்தர் தொண்டே நம்மை வாழ்விக்கும் அருள் என்று நம்பி, தொடர்ந்து இறை நெஞ்சம் கொண்டார்.

இந்த பயங்கர நோயிலே இருந்து உயிர் மீண்ட மார்ட்டின், தனது பெற்றோரைப் பார்த்துவிட்டு, சிறிது காலம் உடல் நலம் தேற்றி ஓய்வெடுத்துக் கொண்டு வரலாம் என்று தன் தாய் தந்தையர் வாழும் ஊருக்குப் புறப்பட்டார்!

அக்காலத்தில், ஊர் பயணம் செல்பவர்கள், தனது துணைக்காக, பாதுகாப்புக்காக, ஓர் உடைவாளை உடன் எடுத்துச் செல்லும் வழக்கம் உண்டு! அதன்படி மார்ட்டினும் ஓர் உடைவாளை எடுத்துக்கொண்டுச் சென்றார்!

அந்த் வாளை லூதர் கைதவறிப் பிடித்ததால், தவறி விழுந்துமார்ட்டின் கால் நரம்பை வெட்டி வீழ்த்திவிட்டது. அதனால் அவருக்கு அதிக அளவில் ரத்தம் பெருக்கெடுத்தது. உடனிருந்த நண்பன் மருத்துவரை அழைத்து வர ஓடினார்! மார்ட்டின் உடல் உபாதை அதிகமானது; ரத்தமும் நிற்கவில்லை. வலியும் தாங்க முடியாமல் அலறி அலறி அழுதார்!

இரத்தம் நிற்காமல், வந்து கொண்டே இருப்பதைப் பார்த்த மார்ட்டின்; இந்தத் தடவை நாம் நிச்சயமாகச்

செத்து விடுவோம் என்று பதறிக் கொண்டே, 'கன்னி மரியம்மாளே என்னைக் காப்பாற்று, உனது அருளால் என்னைப் பிழைக்க வையம்மா-தாயே!'' என்று கதறிக் கொண்டே இருந்தார்.

ஏன் கன்னிமரியிடம் அபயம் கேட்டார்! அக்காலத்து மக்கள் தங்களுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால், இவ் வாறு மத்தியஸ்தமாக சில புனித தேவதைகளிடம் முறையீடு செய்யும் குருட்டு நம்பிக்கை அவர்களிடம் இருந்தது.

அதே நம்பிக்கை மார்ட்டினுக்கும் சமுதாய இயக்கத் துடன் வந்துவிட்டதால், 'கன்னிமரியம்மா உன் அருளால் என்னைக் காப்பாற்று' என்று லூதரும் கதறினார்! மூட நம்பிக்கைப் பற்று அவரை அவ்வாறு ஆட்கொண்டிருந்த தற்கு இது ஒரு சான்றாகும்.

இதற்குப் பிறகுதான் இயேசு பெருமான் ஜெபப் பக்தியே அவருக்குள் ஊடுருவியது. அந்த விசுவாசமே, இரண்டாவது முறையாக மரணம், அவரிடம் தோல்வி கண்டது எனலாம். ஆண்டவர் கிருபை, அவரை அந்த ஆபத்திலே இருந்து தப்புவித்தது என்று அவர் நம்பினார்.

மார்ட்டின் லூதருக்கு மூன்றாவதாக ஒரு மரண பயம் நிகழ்ந்தது. அவருடைய அன்பு நண்பன் அலெக்ஸ் என்ப வன் திடீரென்று அவனது பகைவர்களால் கொல்லப்பட்டு அகால மரணமடைந்தான்.

நண்பனது இந்த திடீர் கொலைச் செய்தி லூதரைக் கண்கலங்க வைத்தது. அதனால் மூன்று நாட்கள் அன்ன ஆகாரம் ஏதும் உட்கொள்ளாமல் மீளாக் கவலை கொண் டார். இதே மரணம் எதிர்பாராமல் தனக்கும் ஏற்படுமோ அப்படி நேர்ந்தால் நம்நிலை என்னவோ என்ற அச்சம் அவரை மருட்டிக் கொண்டிருந்தது. அதே துயரத்தால் என்ன செய்வது என்று புரியாமல் அவர் தவித்தார்!

இந்த கொலைக்குக் காரணம், அலெக்சின் உறவினர்களே என்று கேள்விப்பட்டார்! ஆனால், தனது கருத்து ஒரு சிலருக்கு விரோதமாக இருக்கின்றதே, நாம் எந்த உண்மையை உரைத்தாலும் நம்மைச் சார்ந்தவர்களே நம்மை எதிர்க்கிறார்களே; ஊருடன் பகைத்தால் வேருடன் அல்லவா கெடுதிகள் வந்து நம்மை அழிக்கும் என்ற அச்சம் லூதருக்கும் ஏற்பட்டது! அதனால் அலெக்ஸ் மரணம் மார்ட்டினையும் கண்கலங்க வைத்துவிட்டது.

அப்படி ஒரு மரணம் தனக்கு ஏற்பட்டுவிட்டால், நியாயத் தீர்ப்பு என்ன நரக தண்டனையைத் தருமோ என்ற இறுதித் தீர்ப்பு அவரை அலைகழித்துக் கொண்டே இருந்தது! இதற்குரிய வழி என்ன என்றே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

ஒருவேளை இறை இயல் கற்று, சாமியாராகி, இறைத் தொண்டும் திருச்சபை திருத்தொண்டும் தொடர்ந்து செய்து, பொதுமக்களை மார்க்க வழிக்குத் திருப்பி, இயேசு பெருமான் ராஜ்ஜியம் பரவ ஞானத் தொண்டாற்றினால் நியாயத் தீர்ப்பு நரக தண்டனையிலே இருந்து தப்பி விடலாமோ என்ற முடிவிலே மார்ட்டின் உழன்று கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில் அவர் ஒரு கல்வி மேதை என்று எல்லோரும் பாராட்டக்கூடிய வகையில் எம். ஏ. பட்டம் பெற்றார். அதற்கடுத்து தத்துவமேதை என்பதற்கு அடையாளமாக தத்துவப் பண்டிதர் பட்டமும் Doctor of Philosophy பெற்றார். தனது தந்தையின் பேராசையான சட்டத்துறையைக் கற்று அதிலும் பட்டம் பெற்ற வித்தகரானார்.

எர்பர்ட் பல்கலைக்கழகம் எப்படி ஈடும் எடுப்பும் மற்ற கல்விக் கோட்டமாக அந்நாளில் புகழ்பெற்றிருந்ததோ,

அந்தப் பல்கலைக் கழகப் புகழை மேலும் வளர்க்கும் ஒரு பல்கலை வித்தகராக; மார்ட்டினுக்கு நிகர் எவரு மில்லையோ என்ற நற்பெயரைப் பெற்று அந்த சர்வகலா சாலைக்கு புகழைத் தேடித் தந்தார் மார்ட்டின்!

இந்த நேரத்தில் மார்ட்டினின் மாணவ வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை நிகழ்ந்தது! அதாவது; அவரது தந்தையின் அவாவுக்கு ஏற்றவாறு சட்டத்துறை பட்டம் பெற்றிருந்தும் கூட, லூதர் அதை ஏற்காமல் கிறித்துவத் தின் சேவைக்குச் சென்றிட முடிவு கட்டினார்!

இந்த திருப்பு முனைச் சம்பவம், மார்ட்டினின் வாழ்க்கைப் போக்கையே திருப்பிவிட்டது. இந்த திருப்பு முனை முடிவைக் கண்டு லூதரின் நண்பர்கள், பல்கலைக் கழகத்தவர்கள் அனைவருமே நினைக்க முடியாத ஓர் அதிர்ச்சியைப் பெற்றார்கள்.

இந்த முடிவை மார்ட்டின் தனது பெற்றோரிடம் கூறி அனுமதி பெற்று மீண்டும் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது, எதிர்பாராமல், திடீரென்று பயங்கர இடி மின்னலும் புயலும் சேர்ந்து வீசியது. அப் போது இடித்துக் கொண்டிருந்த இடி, லூதருடைய காலருகே வீழ்ந்தது அதிர்ச்சி அடைந்தார் மார்ட்டின்!

கீழே விழுந்தார்! தள்ளாடி எழுந்தார்! தன்னையு மறியாமலே தனது குலதெய்வமான 'பரிசுத்த ஆன்' என்ற பெண் தெய்வத்தை நோக்கி, அம்மையே, புனித ஆன் தாயே, என்னைக் காப்பாற்றும்; நான் சாமியார் ஆகின் றேன்' என்று அலறினார்! பயத்தால் முணு முணுத்தார்!

அப்போது அவர் ஒரு சாதாரண மூடநம்பிக்கைப் பற்றிய கிருத்துவனைப் போல அழுதார்; கதறினார். அப் போது அவரது நினைவு மண்டலத்திலே நியாயத் தீர்ப்பு, நித்திய நரக தண்டனைக் காட்சிகள் எல்லாம் அவருக்கு நிழலாடின.

இது போன்ற நினைப்பும் எண்ணமும் அவருக்குப் பலமுறைகள் ஏற்பட்டாலும், இந்த இடி சம்பவம் அவரை எப்படியும் சாமியாராக்கி விடுவது என்ற சிந்தனைத் தெளிவை உருவாக்கி விட்டது.

தனது குல தெய்வமான 'பரிசுத்த ஆன்' தெய்வத்திடம் அல்லவா உறுதி மொழி உரைத்தோம்; அதை மீறுவது பெரிய தவறு அல்லவா? பாவம் அல்லவா? என்ற குழப்பமே அவரை ஆட்டிப்படைத்தது!

தனது மகன் திருச்சபை திருத்தொண்டாற்றும் சாமியாராகப் போகிறேன் என்று இடி தாக்கும் முன்பு பெற்றோரிடம் கூறி அனுமதி கேட்டபோது, 'அவ்வாறு நீ சாமியாரானால், எங்களை விட்டுப் பிரிந்து போ, உனக்கும் எங்களுக்கும் இனிமேல் தொடர்பே வேண்டாம், நாங்கள் சாமியாராக உன்னை அனுமதிக்க மாட்டோம்' என்று கூறி கோபாவேசச் சொற்களும் அப்போது லூதர் முன்பு நின்று மிரட்டிக்கொண்டிருந்தன.

இவ்வாறு இடியின் மிரட்டலும், பெற்றோரின் கோபமும் மார்ட்டின் லூதரை ஒரு திடமான முடிவுக்கு வர முடியாமல் தவிக்க வைத்தன. என்றாலும் 'பாவத்தின் சம்பளம் மரணம்' இந்தப் பாவத்திலே இருந்து மாந்தரை விடுவித்து, இயேசு பெருமானுக்கு ஊழியம் புரிவதே இந்த பிறப்பின் கடமை என்ற முடிவுக்கு திடமாகவே வந்தார்!

இந்தத் தனது முடிவை கி.பி. 1505-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் நாள், தனது மாணவ நண்பர்களுக்கு மார்ட்டின் லூதர் ஒரு பிரிவு உபச்சார விருந்து அளித்த போது தனது நண்பர்களிடையே விளக்கிக் கூறினார்! அதற்கு எல்லா மாணவர்களும் மார்ட்டினுக்குப் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்! யாரும் அவரது கருத்தை ஆதரிக்கவில்லை!

ஆனால், மார்ட்டின் லூதர் தனது முடிவிலே இருந்து மாறவில்லை: பிரிவுபச்சார மண்டப விருந்து முடிந்த பிறகு, தனது நண்பர்களையும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், ஊழியர்களையும் விட்டுப் பிரிந்து, அன்றிரவே அகுஸ்தீனரின் சந்நியாச மடத்திற்குச் சென்று, தன்னையும் அதே மடத்தில் சாமியாராகச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினார்!

இருபத்திரண்டே வயதுடைய இளம் வாலிபரான ஒருவர்; கல்விக் களஞ்சியம் என்ற நற்பெயரைப் பெற்ற ஒரு வாலிபர்; சாமியாராகிறேன் என்று மடத்தின் கதவைத் தட்டிக் கேட்கும் போது, வேண்டாம் என்று கூறுபவர் யார்?

## 5. வீதி வீதியாக ஓடு ஏந்திப் பிச்சை! தவம்! ஜெபம்!

சாமியாரானார் மார்ட்டின் லூதர் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட அவரது பெற்றோர் வேதனைப்பட்டார்கள்! மனக் கலக்கமடைந்தார்கள்! தனது மகன் வழக்கறிஞர் ஆவானே என்றல்லவா கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தோம்; சாமியாராகி திருவோடு ஏந்த ஆரம்பித்து விட்டானே என்ற துயர நெருப்பிலே சிக்கினார்கள்!

மார்ட்டின் நண்பர்கள் நல்ல ஓர் இசைக் கலைஞன் துறவியாகி விட்டானே என்று மனம் நைந்தார்கள்! பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் எதிர்கால தத்துவ ஞானியை நாடு இழந்து விட்டதே என்று வருத்தப்பட்டார்கள்! பல்கலை நிர்வாகத்தினர், நமது கலா சாலையின் நிகரற்ற முதல்தரக் கல்வி மாணவன் கதி, இவ்வாறு சாமியாராவதற்காகவா பயன்படவேண்டும் என்று சஞ்சலப் பட்டார்கள்!

தீவிரமான அன்பை மார்ட்டின் லூதர் மீது வைத்திருந்த சில மாணவ நண்பர்கள், அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லையே என்று மனத்துயரடைந்து 'நாங்கள் சென்று மார்ட்டினை மடத்தை விட்டுப் பரபர வென்று இழுத்து வருகின்றோம் பார்' என்று சவால் விட்டு விட்டுப் பல்கலைக் கழகத்தை விட்டுப் புறப்பட்டார்கள்!

சென்ற அந்த மாணவர்க்குழு, மடத்தைச் சுற்றிச் சுற்றி வலம் வந்ததே தவிர, மார்ட்டினைப் பார்க்க முடியாதவர்களாக சோகமுற்றுத் திரும்பினார்கள். அவரைக் கண்டு கூட பேச முடியவில்லையே என்று கவலையுற்றார்கள்.

எப்படியும் மார்ட்டின் லூதரை மடத்தை விட்டு இழுத்துச் செல்லும் முயற்சிகள் நடக்கும் என்று முன் கூட்டியே யூகித்துக் கொண்ட மடத்தினர், தங்களது மடத்தின் நுழைவாசல்கள் கதவுகளை எல்லாம் நன்றாக இழுத்து மூடித் தாழிட்டுக் கொண்டு, மிகவும் பலமாகக் காவல் இருந்தார்கள்.

அந்த மடம் இத்தகையப் பலத்த காவலோடு ஒரு மாதக்காலம் மூடப்பட்டிருந்தது! லூதரைப் பார்க்க எவரும் அனுமதிக்கப்படவில்லை. பிறகு ஒரு மாதம் கழித்து, அந்த பல்கலைக் குழு மாணவர்கள் மீண்டும் வந்து மார்ட்டினைப் பார்த்தார்கள். மடத்தை விட்டுத் தங்களுடன் திரும்புமாறு கெஞ்சினார்கள்; வேண்டினார்கள்; எதற்கும் மார்ட்டின் லூதர் மனம் அசையவில்லை! அதனால் அவர்கள் பழையபடி வந்த வழியே திரும்பி சோகமயமாய் வந்து சேர்ந்தார்கள்.

சாமியார் ஆனதற்குப் பிறகு மார்ட்டின் லூதர் என்ற அவரது பெயரை அகுஸ்தீன் என்று அவர் மாற்றி அமைத்துக் கொண்டார். பெயர் மாறிற்றே தவிர, லூதர் புது மனிதராக மாறினாரா என்றால், அதுதான் இல்லை,

பழைய சுபாவமாவது லூதருக்கு மாறிற்றா? இல்லை! அவர் எண்ணியவாறு சாமியார் ஆனவுடன் மன அமைதி பெற முடியும் என்று எண்ணியபடி அமைதியாவது அவரது மனதுக்குக் கிடைத்ததா? அதுவும் இல்லை!

கல்லூரி, கலாசாலையில் எப்போதும் புத்தகப் புழுவாகவே திகழ்ந்து கொண்டிருப்பாரே, அப்படியாவது நூலறிவு பெறும் வசதியாவது அவருக்கு வாய்ந்ததா? இல்லவே இல்லை!

கற்றக் கல்வியோடு படித்த நூலறிவை ஒப்புவமைப் படுத்தி வேறுபாடுகள், முரண்பாடுகள், ஒற்றுமைகள், காலமாற்றக் கருத்துக்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்து சிந்தித்துப் பார்ப்பாரே, அந்த சிந்தனையாவது உண்டா? இல்லை; இல்லை; இல்லை; பாவம்!

பாவப் பாரம்தான் அவர் மனதை இப்போதும் அழுத்திக் கொண்டிருந்ததேயன்றி, அமைதி சுகம் அவரது மனத்துக்குக் கிட்டவில்லை என்பதுதான் உண்மை. அதற்கு மாறாக, அவர் மடத்து வேலைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அது சாமியாருக்கு அழகுமல்ல!

மடத்துவேலைகள் என்ன தெரியுமா? மடம் முழுவதையும் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும்; மடக் கதவுகளை காலையில் திறந்து மாலையில் மூடி தாழிட வேண்டும்; யார், என்ன வேலைகளைச் செய்யுமாறு கட்டளையிட்டாலும் அவற்றைச் செய்ய வேண்டும்; யார் யார் மடத்து அதிகாரிகளோ அவர்களை எல்லாம் வணங்கிப் பணியாற்ற வேண்டும்; மடத்து வேலைகளை எல்லாம் மேற்கண்டபடி செய்து முடித்த பின்பு என்னவேலை தெரியுமா?

மார்ட்டின் லூதர் திருவோடு ஏந்த வேண்டும்; அதாவது பிச்சைப் பாத்திரத்தை இரு கைகளிலும் ஏந்த வேண்டும்; தெருத்தெருவாக அலைந்து அலைந்து பிச்சைச் சோறு

அதாவது பிச்சை ரொட்டிகள் வேறு என்ன உணவுகளைப் பிச்சைக்காரர்களுக்கு மக்கள் போடுகிறார்களோ, அந்த பிச்சைகளை எல்லாம் வாங்கிவர வேண்டும்;

இவ்வாறு நமது நாட்டுக் குசேலர்களைப் போல வீட்டுக்கு வீடு பிச்சை என்ற கப்பத்தை வசூல் செய்து கொண்டு வந்தபின்பு, தெருத்தெருவாக அலைந்த களைப் பால் களைத்துப் போய் திரும்பும் மார்ட்டின் லூதர், இனி மேலாவது சிறிது அறிவுப் பிச்சை பெறலாமே என்று சன் மார்க்கப் புத்தகங்களைப் படிக்கலாம் என்று புத்தகத் தோடு உட்காருவார்

அவ்வளவுதான் அடுத்த சந்நியாசி அதைப் பார்த்து விட்டு, "இப்படி புத்தகம் படிக்கும் சாமியாரால் இந்த மடத்திற்கு கொஞ்சமும் நன்மை ஏற்படாது. வீடு வீடாய் எவ்வளவு தூரம் அலைந்து திரிந்து அதிகமாகப் பிச்சை வாங்கி வருகிறானோ, அந்த சாமியாரால்தான் இந்த மடத்திற்கு அதிகமான நன்மை ஏற்படும்" என்று எச்சரித்துக் கண்டித்துப் பேசுவார்.

மடத்தில் இப்படிப்பட்டக் கடுமையான சட்டதிட்டங் களாலும், தன்னல வெறுப்பு நெறிகளாலும் பாபவிமோசனம் கிடைக்கும் என்று லூதர் ஏற்கனவே அறிந்துதான் இந்த மடத்திலே சாமியாராகச் சேர்ந்தார். அதனால், இந்த கண்டிப்புக்களை அவர் ஒரு பொருட்டாகக் கருதாமல் பேரின்பப் பேறு பெறவேண்டுமென்ற ஆசையால் எல்லா வற்றையும் மனமாரச் சகித்துக் கொண்டே மட ஊழிய மாற்றினார்.

ஆனாலும், தனது அறிவு வளர்ச்சிக்கான நூல்களைப் படிப்பதை மட்டும் நிறுத்துவதில்லை; அடிக்கடி ஜெபம் செய்வதில் இருந்தும் தவறுவது இல்லை. உறக்கத்தைக் கெடுத்துக் கொண்டாகிலும் இந்த இரு பணிகளையும் செய்யாமல் அவர் உறங்கமாட்டார்; உண்ணமாட்டார்!

இவ்வாறு கடும் உழைப்புக்கு லூதர் உடல் ஈடுகொடுக்க இரும்பா என்ன? நாளடைவில் உடல், நலிந்து, மெலிந்து, எலும்பும் தோலுமாய்க் காட்சி தந்தார்! இந்த நிலையில் பட்டினி; பசி; பிறகு எப்படி நிம்மதியான நித்திரை வரும்?

அவர் ஓர் இருட்டு அறைக்குள் நுழைவார்; கதவுகளைத் தாழிட்டுக் கொள்வார்; தவம் செய்து கொண்டிருப்பார்; சில நாட்கள் அந்த இருட்டு நிலவறை கதவே திறவாது; லூதர் உள்ளே இருந்து ஊண்மறந்து, உறக்கம் துறந்து; இயேசு கர்த்தரையே ஜெபம் செய்வார்; பின்னர், பசி, பட்டினி, தூக்கமின்மை போன்ற ஆயாசங்களால் பிணம் போல வீழ்ந்து கிடப்பார்-மார்ட்டின்!

ஒரு நாள் மார்ட்டின் தவம் செய்து கொண்டிருந்த அறையில் எந்தவித சந்தடியும் இல்லாமல் போகவே, அவரது நண்பரான லூக்கா எடம் பெர்கர் என்பவர், அறையின் கதவைத் தட்டினார்.

எந்த பதிலும் உள்ளே இருந்து வாராமற் போகவே அவருக்கு ஒரு சந்தேகம் வந்து கதவை உடைத்துப் பார்த்தார். மார்ட்டின் பிணம் போலத் தரையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டார். எவ்வளவோ முயன்று பார்த்தும் லூதர் தன்னுணர்வு பெறாமல் பிணம்போலக் கிடப்பதை மற்ற சாமியார்களுக்கும் ஓடி உரைத்தார்!

மடத்து சாமியார்கள் எல்லோரும் ஓடி வந்து மார்ட்டின் லூதர் என்ற அருளனைச் சூழ்ந்து கொண்டு ஞானப் பாட்டுக்களைப் பாடினார்கள்; இறை இசை ஞானத்தைக் கேட்ட மார்ட்டின் கண்விழித்தார். வெகு நேரத்திற்குப் பிறகே அவர் தன்னறிவு பெற்றார்.

லூதருக்கு சரீர தளர்ச்சி மட்டுமல்ல; மனத் துன்பங்களும் மலிந்து கிடந்தன அவரிடம்; அத்துடன் ஆத்தும அந்தகாரமும் அவருக்கு அதிகரித்துக் கொண்டே இருந்தது தனது ஆத்தும ஆறுதலுக்காக அங்கே சந்நியாசிகள் கட்டப்

யட்டிருந்த பரிசுத்த வேதாகமத்தை தவறாமல் படித்து வந்தார்.

இவ்வளவு துன்பங்களையும், மனபாரத்தையும் யாரிடமாவது இறக்கிக் காட்ட வேறு யாராவது கிடைக்க மாட்டார்களா என்ற ஏக்க எண்ணத்தோடு இருந்தபோது, அந்த அகுஸ்தீன் மடத்திற்கு மேல் விசாரணைக்குழு குருவாக இருந்த ஜான் ஸ்தௌபிட்ஸ் என்னும் ஒரு பக்தன் அங்கே வந்தார்.

அவர் அந்த மடத்தைப் பார்வையிட, மேல் விசாரணை செய்ய அங்கு வந்தார்! பரந்த அறிவும், சிறந்த பக்தியும், அகன்ற அனுபவமும், ஆழ்ந்த சிந்தனையும் உள்ள குரு அவர். கிரேக்க மொழியில் வல்லவர் என்பதால் புதிய ஏற்பாடு நூலை அதன் மூல மொழியிலேயே கற்றவர்!

அந்த மேல் விசாரணைக் குழு மடத்தை மேற்பார்வை செய்து கொண்டும், ஒவ்வொரு சாமியார்களையும் சந்தித்துப் பேசிக் கொண்டும் வந்தபோது, நாரும் தோலுமாய் நலிந்து மெலிந்த உடலோடு உள்ள மார்ட்டின் லூதரையும் சந்தித்துப் பேசினார்! அவரது உடல்நிலை இவ்வாறானதற்குக் காரணம் தெரிந்துகொண்ட அக்குழு அவர்மீது தனியொரு அன்பும் அக்கரையும் கொண்டு அளவளாவினார்!

மார்ட்டின் லூதர் என்ன காரணத்துக்காக இவ்வாறு காணப்பட்டாரோ-அதே காரணத்துக்காக, இதே மதகுரு ஒரு காலத்தில் எலும்பும் கூடுமாய் உடல் மெலிந்து நலிந்து இடர்ந்ததை மார்ட்டின் லூதருக்கும் கூறித் தன்நிலை ஆறுதல் தந்தார். அதனால் தான், ஸ்தௌபீட்சுக்கு தனியான ஓர் அன்பும், அக்கரையும் அவர்மேல் காட்ட நேர்ந்தது.

"நண்பனே, உனக்கு தேவையானது ஒன்றே; நீ இயேசு கிறிஸ்துவை நம்பி நெருங்கிக் கொள்; அவருக்கு

எல்லா இசைவு நன்மைகளும் இருக்கின்றன; அவர் உன்னை நேசிக்கிறார்; நீ அவரை மேலும் நேசி! அவரைப் பற்றி மேலும் நீ அதிகமாகத் தெரிந்துகொள்" என்று அன்போடு கூறி, டண்டன் பாராட்டி, வேதாகம நூல் ஒன்றை அவருக்கு அன்பளிப்பாக அளித்துச் சென்றார்.

அன்று முதல் லூதர், வேதாகம நூலை அக்கறையுடனும், நுட்பத்துடனும் ஆழ்ந்து படித்து வந்தார். குரு அளித்த வேதாகம நூல் லூதர் மனத்துக்கு ஒரு ஆறுதலையும் இன்பத்தையும் தந்தது!

வேதாகமம் நூல் மார்ட்டின் லூதருடைய மன இருளுக்கு ஒளி விளக்காக விளங்கியது; அவரது வாழ்க்கைக் கப்பலுக்குரிய கலங்கரை விளக்கமாக இருந்தது; வறண்ட அவரது சாமியார் வாழ்க்கைக்கு கார்கால மழையெனத் திகழ்ந்தது; வேதாகம நூல் என்ற மறைச் சுரங்கத்திலே அரிய புதையலைப் போன்ற அறிவு மணிகளைத் தேடித் தேடித் தோண்டி எடுத்தார்! ஆன்ம சாந்தி பெற நினைத்த அவரது துறவு மனத்துக்கு வேதாகமம் ஒரு முழு நிலவொளியாகக் காட்சி தந்தது!

இரவும் பகலும் ஆன்ம, சமாதானத்துக்காக இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்த அவருடைய மனம், அளவு கடந்த மட பாரமும், மனக் கவலையும், மாரிக ஏக்கமும் அடைந்த காரணத்தால் உடல் சுகவீனப்பட்டார்! மீண்டும் நோய் அவரைப் பற்றிக் கொண்டது.

நான்காவது தடவையாக ஏற்பட்ட இந்த கடும்நோய் அவரை இறப்புலகம் சேர்த்துவிடும் என்று சாமியார்கள் உட்பட்ட அனைவருமே மனக் கலக்கம் அடைந்தார்கள். அந்த அளவுக்கு அவரதுநோய் அவரைப் படுமோசமாக்கி விட்டது. மார்ட்டின் லூதரும் இந்த நோய்தான் நமது வாழ்க்கைக்கு இறுதிகாலத்துக்குரிய அடையாள நோய் என்ற முடிவுக்கே வந்து விட்டார்.

இந்த நேரத்தில் மார்ட்டின் லூதரைப் பார்க்க ஒரு வயதான சாமியார் வந்தார். அவரிடம் தனது நிர்ப்பந்த மான நிலைமையைப் பற்றி லூதர் மனம் நொந்து எடுத் துரைத்து, இதற்கான வழி என்ன என்று கேட்டார்.

அதற்குப் பதிலேதும் கூற வழியில்லாத அந்த வய தானவர், கர்த்தரது விசுவாச மொழிகளை மீண்டும் மீண் டும் பக்தி உருக்கம் நெகிழ நெகிழ ஜெபித்துக் கொண்டே இருந்தார். பெரியவர் அந்த ஜெபத்தை ஜெபித்துக் கொண்டிருந்தபோது, 'பாவமன்னிப்பு உண்டென்று விசு வாசிக்கிறேன்' என்று அவர் கூறிய ஜெபவாசகம் அந்த ஜெபத்திலே எதிரொலித்தது

அந்த சொற்களை உடைய வாசகத்தை லூதர் செவி கேட்டதும், இதயத்திற்கு ஏதோ ஒரு தெம்பு, ஒரு புது உபதேசம், நம்பிக்கை ஒளிபோல் ஊடுருவியது. எனது பாவம் மன்னிக்கப்படுமா? எனக்கு ஏதாவது விமோசனம் உண்டா? போன்ற கேள்விகள் மார்ட்டின் லூதரது இத யத்தில் மோலோங்கி எழுந்தன!

"பாவமன்னிப்பு உண்டென்று விசுவாசிக்கிறேன்" என்ற முதியவரின் விசுவாசப் பிரமாண வார்த்தைகள், லூதர் இதயத்தைத் தட்டி எழுப்பியது. அந்த நம்பிக்கை தான் அவருடைய நான்காவது மரணபயத்தை வென்றது! மார்ட்டின் உடல்தேறி சுகமானார்!

## 6. இயேசு சிலுவை மரணம் மறைக்கப்பட்ட மர்மம்!

அருஸ்தீன் மடத்தில் மார்ட்டின் லூதர் இரண்டு ஆண்டுகளாக சாமியார் வாழ்க்கையிலே வாழ்ந்தார்; அப் போது லூத்தர் குருவாக உயர்ந்திடும் தகுதி பெற்றவர்

என்று மடத்து சாமியார்களும், அதனது மேல் விசாரணைக் குழு நிர்வாகமும் அறிந்து அவரைக் குருவாகத் தேர்வு செய்தார்கள்.

கி.பி. 1507-ம் ஆண்டு மே மாதம் 2-ம் நாள் மார்ட்டின் லூதர் குருவானவராக அபிஷேகம் பெற்றார். மகன் குருவானவராகும் விழாவுக்கு அவரது தந்தை ஹான்ஸ் லூதரும் வர வேண்டும் என்று விழா நடத்துவோர் அழைப்பு அனுப்பியதற்கு ஏற்றவாறு அவரும் வந்து விழாவிலே கலந்து கொண்டார்.

இருபது பிளாரின் நாணயத்தை தனது மகனுக்கு மனமுவந்து அளித்திடத் தந்தை முன் வந்தார். அதற்குப் பிறகு மடத்துச் சாமியார்கள் அனைவரும் தந்தையின் அன்புச் செயலைப் பாராட்டினார்கள். அன்று நடக்கவிருக்கும் சிறப்பு விருந்திலும் லூதரது தந்தையார் கலந்து கொள்ள வேண்டும் என்று அவரை கேட்டுக் கொண்டார்கள்; அதற்கும் ஒப்புக்கொண்டார் ஹான்ஸ் லூதர்!

மார்ட்டின் குரு பட்டம் பெற்றார்! அதனால் பேரின்ப சாந்தியா பெற்றார்? இல்லையே! மனம் சோர்ந்து மீண்டும் கவலையுற்றார்!

ஒரு காலத்தில் குருவாக வேண்டும் என்று நினைத்தார்; அதன் வாயிலாக இயேசுவின் இரட்சிப்பைப்பெற வேண்டும்; என்று ஆசைப்பட்ட லூதர், குரு என்ற தகுதியை, பட்டத்தைப் பெற்ற பின்பும் கூட, இரட்சிப்பின் உறுதிப்பாடு இல்லையே என்று மனம் வருந்தினார்.

என்ன செய்வது இதற்கு என்று அவர் சிந்தித்தபோது, மடத்தின் மேல் விசாரணைக் குருவான ஸ்டௌபிட்ஸ் அப்போது அங்கே வந்தார்! இனிமேல் லூதரை இந்த மடத்திலே வைத்திருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்.

எனவே, விட்டன்பர்க் என்ற பல்கலைக் கழகத்தில் தேவைப்படும் தத்துவப் பேராசிரியர் பணிக்கு அவரை நியமிப்பது என்று எண்ணி, 1058-ம் ஆண்டில் ஸ்தௌபீட்ஸ் விட்டென்பர்க் அகுஸ்தீன் மடத்திற்குச் சென்று தங்கும்படி கூறி அனுப்பி வைத்தார்.

அந்த மடத்திற்கு வந்தார் மார்ட்டின்! அவருக்கென இருந்த தனி அறையில் அவர் தங்கினார்; கடும் தவ வாழ்க்கையில் மீண்டும் ஈடுபட்டார்; அங்குள்ள தத்துவப் பேராசிரியர் பணியில் சேர்ந்து பணியாற்றவும் செய்தார்!

தத்துவக் கலையை மாணவர்களுக்குக் கற்பித்தார்; அதே நேரத்தில் அவற்றைத் தானும் கற்றார். வேதாகமத்திலும் நல்ல பயிற்சி பெற்றார். எபிரேயம், கிரேக்கம் மொழிகளைக் கற்றால், வேதாகம நுணுக்கங்களை மூல மொழியிலேயே கற்று நல்ல புலமை பெறலாம் என்ற நோக்கத்தோடு அந்த மொழிகளையும் கற்றார். மூல நூற்களது நுட்பங்களையும் நுணுகி ஆராய்ந்தார். இந்த அரிய பயிற்சிகளால் வேதாகமத்திலே அவரிடம் ஆய்வுப் போட்டிப் போட்டு வென்றிட முடியாத நிலையில் கிறித்துவ முறையிலே வல்லவரானார்!

'திருமறைப் பேரறிஞர்' தேர்வில் அவர் பெற்ற வெற்றியால் B.D. என்ற பட்டம் பெற்றார். இந்தத் தகுதிக்குப் பின்புதான் லூதர் திருமறைச் சொற்பொழிவுகளைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து ஆற்றுமாறு பணிக்கப்பட்டார்.

அறிவுக்கும்-ஆய்வுக்கும் வேலை கொடுக்கின்ற இவை போன்ற வேதாகமச் சொற்பொழிவுகள் தொடர்ந்து ஆற்றுவதிலேயே மார்ட்டின் ஆர்வம்கொண்டு பணியாற்றினார்! இந்த திருப்பணி அவருக்கு ஓர் அரிய வாய்ப்பு மட்டுமன்று; எப்படிப்பட்ட வேதாகம வித்தகர்கள் ஆனாலும், எளிதில் அவர்கள் மார்ட்டினை வென்றிட முடியாத அளவுக்கு அவர் உயர்ந்து நின்றார்!

மார்ட்டின் லூதரின் வேதாகமச் சொற்பொழிவுகளை கேட்ட ஸ்தௌபீட்ஸ், மிகவும் மகிழ்ந்தார்; மணற்கேணியின் ஊற்று நீரைப் போல லூதரது பேச்சுக்களும் வேதாகம ஊற்றுக் கண்களாகத் தோற்றமளிப்பதைக் கண்டு அவர் வியந்தே போனார்!

அகுஸ்தீன் திருக்கோயிலில் வேதாகமச் சொற்பொழிவு தொடர்ந்து நடத்துமாறு ஸ்தௌபீட்ஸ் லூதரைக் கேட்டு கொண்டார். ஆற்றுமடை திறந்தாற்போல லூதரின் இறையுணர்வுக் கருத்துக்கள் மக்கள் மத்தியில் குவிந்தன!

அந்த வெள்ளத்தைத் தடுத்து அந்தந்த ஊர் மக்கள் பிரசங்கங்கள் கால்வாய்கள் மூலமாக தங்களது வறண்ட வயல் என்ற மூளையுணர்வுப் பகுதிகளுக்கு அறிவெனும் நீரைப் பாய்ச்சிக் கொண்டார்கள்! அதனால் எங்குப் பார்த்தாலும் மக்கள் ஞானப் பயிர்களாக விளைந்தார்கள்!

அந்த அறிவெனும் நெற்கதிர்களை அறுவடை செய்த கிறித்துவம் என்ற விவசாயிகள், திருச்சபை என்ற ஆலை வாய்ப்பட்ட இயந்திரத்தாலே ஞானக்கோதுமை அல்லது உணவுப் பொருட்களை நாள்தோறும் அரைத்துப்பெற்று, இயேசு பெருமான் ஊழியம், ஜெபம், போன்றவற்றை அமுத உணவாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

லூதரின் அறிவாற்றல் மிக்க இவ்வகைச் சொற்பொழிவுகள் மக்கள் இடையே புதியதோர் இறைஞான நுட்பங்களைத் தோற்றுவித்து, அவரவர் சிந்தனைகளிலே ஒவ்வொரு புரட்சிப் பொறிகள் எழுந்தன.

ஏன் இப்படிப்பட்ட நிலை மார்ட்டின் சொற்பொழிவுகளால் ஏற்பட்டது என்பது சிந்திக்க வேண்டிய ஒரு பிரச்சினையாகும். மார்ட்டின் மேடையேறி வேதாகமம் பற்றிப் பேசுவதற்கு முன்பு; மக்களுக்கு வேத அறிவு ஊட்டப்படவில்லை; அவர்கள் வேதாகமப் புத்தகத்தையே கண்களால் பார்த்ததில்லை; அவர்களுடைய கைகளுக்கு.

வேதாகம நூல் கொடுக்கப்படவில்லை; அதனால், கிறித்துவ மக்களோ, பொதுஜனமோ எப்படி வேதாகம உண்மைகளை உணர்ந்து, மறைஞான உணர்வோடு பின் பற்ற முடியும்?

பின்பற்றுவது கூட ஒரு புறம் இருக்கட்டும்; தேவ வாக்கு எது? மனித வாக்கு எது? என்ற வித்தியாசத்தை மக்கள் உணர வேண்டுமானால், அவர்கள் அந்த நூலை நன்கு படித்து முழு விவரமும் தெரிந்து புரிந்திருக்க வேண்டாமா?

வேத வசனமே தெரியாத மக்களிடம், மூடப்பழக்க வழக்கங்கள், அவசியமற்ற மார்க்கச் சடங்குகள்; போலிக் கொள்கைகள் என்றெல்லாம் பேசினால் அவர்களால் எப்படி உணர்ந்து புரிந்துகொள்ள முடியும்?

நேரடியாக மக்கள் எதையும் அறிந்து கொள்ளாத வரையில், தூங்கியவன் தொடையில் திரித்ததெல்லாம் கயிறு தானே! அவர்கள் இடையே அறியாமையும், அந்த அறமும் பேயாட்டம் ஆடத்தானே செய்யும்?

எனவே, உண்மையான கிறித்துவக் கொள்கைகளுக்குப் பதிலாக, பாரம்பரியச் சடங்காச்சார ஆரவாரங்கள் ஆதிக்கம் பெற்றிருந்தன. அதனால் மக்கள் புத்தி தடு மாறி, நெறிதவறி, தறிகெட்டு அலைந்தபடியே கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையிலே மதத்தைப் பொறுத்தவரை வாழ்ந்து வந்தார்கள்.

இயேசு பெருமானை மட்டுமே தொழ வேண்டிய மக்கள், அவர்களது அடியார்களையும், போலிப் பக்தர் களையும், இரத்த சாட்சிகளுடைய எலும்புகளையும், உரோமச் சுருள்களையும், பரிசுத்தப் பண்டங்களையும், சட்டி-கத்தி போன்ற கருவிகளையும் தொழ ஆரம்பித்து விட்டார்கள்.

அந்தந்த நாட்டுடையார் அவரவர் தாம் மொழிகளிலே மனப்பூர்வமாகத் தெய்வத்தை தொழவேண்டியதை விடுத்து இலத்தீன் மொழியில் மட்டும் கடவுளை வழிபட வற்புறுத்தப்பட்டார்கள்.

உலக மக்களுக்கு வேண்டிய இம்மை, மறுமை சார்பான எல்லா நன்மைகளையு இயேசு பெருமான் தமது சிலுவை மரணத்தால் சம்பாதித்து முடித்து விட்டார். அதற்கு அடையாளமாக சிலுவையிலேயே அவரது பணி முடிந்தது. என்று மார்ட்டின் முரசு கொட்டினார்.

மனிதன் இனி செய்ய வேண்டியது; இந்த இயேசு ரட்சகரை விசுவாசத்தால் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்வது ஒன்று தான். அதுவும் எதற்காக என்றால், மனிதருக்கு வேண்டிய எல்லா இம்மை மறுமை பேறுகளும், இந்த இயேசுவுக்குள் இருக்கின்றன என்பதால்தான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவசிக்கும்போது, அவர் மக்களுக்காக சிலுவையிலே சம்பாதித்த புண்ணியங்கள் எல்லாம், நமக்கே உரிமையாகி விடுகின்றன.

இந்த சத்தியத்திற்குப் பதிலாக சுயநீதிக் கொள்கை அக்கால மக்களிடம் புற்றுநோயைப் போல புரையோடிக் கொண்டிருந்தது. இயேசுநாதர் எனும் பௌர்ணமி ஒளியில் நடப்பதற்குப் பதிலாக, போலிப் பக்தியெனும் அமாவாசை இருளில் கண்மூடித்தனமாய் அலைந்து திரியலானார்கள்.

இந்நிலையில் லூத்தருடைய கண்கள் திறப்பதற்குப் பரிசுத்த வேதாகமமே காரணமானது; லூத்தர் கண்கள் திறந்த பின்பு, அவர் தனது வேதாகமச் சொற்பொழிவுகளால் மக்களுடைய கண்களைத் திறந்தார். இந்த சேவையால் மார்ட்டின் புதுப்புதுக் கருத்துக்களை வேதாகமத்தில் ஆராய்ந்து கூறலானார்.

எவ்வளவுக்கு அதிகமாய் லூதர் வேதாகம ஆராய்ச்சியில் மூழ்கி மூழ்கி எழுந்தாரோ, அவ்வளவுக்கும் அதிகமாய் ஆன்மீக நன்மைகளைத் தொகுத்து மக்களுக்கும் வழங்கினார்-தானும் பெற்றுப் பூரித்தார்!

அதனால், மார்ட்டின் லூதரின் மார்க்க ஞான வாதங்களைக் கேட்டு ஞானம்பெற, மிக நீண்ட தூரமாயிற்றே என்றும் பாராமல் அணியணியாக மக்கள் திரண்டு வந்து கேட்க ஆரம்பித்தார்கள்.

நேருக்கு நேராக வேத வசனங்களை கேட்கும் வாய்ப்பை மக்கள் பெற்று மனம் மகிழ்ந்தார்கள். அந்த நேரத்தில், மார்ட்டினின் நாவன்மையை, செஞ்சொற் ஜாலங்களை கேட்ட ஜனங்கள் அவரை வாயார வாழ்த்தினார்கள்.

இவ்வளவு பெருமையும் புகழும் லூதருக்கு இருந்தும், பாவமன்னிப்பு என்பதின் நிச்சயம் அவருக்கு இன்னும் ஏற்படவில்லை. ரோமன் பிரிவுக் கிறித்தவர்களின் தலைமை நிலையமாக இருக்கின்ற புனித ரோமாபுரிக்கு யாத்திரை போக உறுதி பூண்டார்!

ரோமாபுரிக்குப் போய் வந்தால் பெரும் புண்ணியம் ஏற்படும் என்ற பழங்கால மக்கள், முன்னோர்கள், சமயவாதிகள், தீர்க்கதரிசிகள் கூறிவைத்துள்ள எண்ணம், மார்ட்டின் லூதர் இதயத்தில் ஆழமாகப் பதிந்துக் கிடந்தது.

அதனால், புனித ரோமாபுரி யாத்திரைக்கு எப்போது போவோமோ என்ற ஏக்கம் அவரை வாட்டி வதைத்தது. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார் மார்ட்டின் லூதர்.

## 7. ஏழுமலை மீதுள்ள ரோமாபுரி ஒரு பூலோக நரகம்!

அகுஸ்தீன் மடத்திற்கு மேல் விசாரணைக் குருவாகப் பணியாற்றிய ஜான் ஸ்தௌபிட்ஸ் என்ற பக்த சிரோன் மணிக்கும், மடச்சாமியார் ஏழு பேருக்கும் இடையே ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

அந்த மனமாச்சர்யம், இரு சாரார்களுக்கும் இடையே பெரும் பிளவை நாளுக்கு நாள் வளர்த்து விட்டது. இந்தப் பிரிவினைக் குழப்பம் மேலும் நீடிக்கக் கூடாது என்று எண்ணிய சிலர், மார்ட்டின் லூதரை நடுநிலையாளராகத் தேர்ந்தெடுத்தார்கள்

மார்ட்டின் லூதர் ரோமாபுரி சென்று இந்த இரு வேறு குழுவினரின் கருத்து முரண்பாடுகளை போப்பிடம் எடுத்துக் கூறி, எது நியாயம் என்பதைத் தெரிந்து வர அவர்கள் லூதரைத் தேர்வு செய்தார்கள்.

பழம் நழுவிப் பாலில் விழ, அது நழுவி வாயில் விழுந்த சுவைப் போல, ரோமாபுரிக்குப் போக முடியுமா என்று ஏங்கிக் கொண்டிருந்த மார்ட்டின் லூதருக்கு அகுஸ்தீன் மடத்துச் சாமியார்கள் தகராறு ஒரு நல்ல வாய்ப்பாகவே அமைந்தது.

மார்ட்டின் லூதர் கி.பி. 1510ம் ஆண்டில் ரோமாபுரிக்கு புண்ணிய பயணத்தை ஆரம்பித்தார். இந்தப் பயணத்தைத் துவக்கி, இமயமலை உயரம் போன்ற ஆல்ப்ஸ் மலை தொடரைக் கடந்து இத்தாலிய சமவெளிப் பகுதியை அடைந்தார்.

போகும் வழியில் உள்ள மடங்களில் எல்லாம் தங்கித் தங்கிச் சென்றார். சில மடங்களில் லூத்தர் கண்ட காட்சி

கள். அவர் மனதை எறிவீட்டி ஏந்தித் தாக்குவன போல இருந்தன.

பெனிடிக்தீன் என்ற ஓர் இத்தாலிய மடத்தில் லூதர் தங்கினார். அந்த மடத்து அறைகள் எல்லாம் பளிங்குக் கற்களால் அழகுபடுத்தப்பட்டு இருந்தது.

சாமியார்கள் எல்லாம் பட்டுத் துணிகளை அணிந்து கொண்டு, ஆணவத்துடனும் அகங்காரத்துடனும் அங்கும் இங்கும் ஆடம்பரமாக அலைந்து திரிவதையும் லூதர் கண்டார்! திடுக்கிட்டார்!

வெள்ளிக்கிழமை அன்று உணவுண்ணும் மேசையில் இறைச்சித் துண்டுகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்! கொதித்தெழுந்தார்! போப்பும், திருச்சபையும் செய்யும் இது போன்றச் செயல்களைக் கண்டித்து, அவற்றை விலக்கிட வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

லூதர் அந்த மடத்தை விட்டு வெளியேறினார்; மீண்டும் ரோமாபுரிப் பயணத்தைத் தொடர்ந்து போலோக்னா நகர் மடம் வந்தார் அங்கே அவருக்கு உடல் நலமின்மை ஏற்பட்டது. சுகம் பெற்ற பிறகு மீண்டும் தனது பயணத்தைத் தொடர்ந்தார். இறுதியில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் ரோமாபுரியை அடைந்தார்.

ஏழு குன்றுகள் மீதுள்ள ரோமாபுரி திருநகரைக் காலால் நடந்து சென்றே சுற்றிப் பார்த்தார்! இனிமேல் தனக்கு நற்காலம் பிறக்கப் போகிறது என்று மகிழ்ச்சி அடைந்தார்! பயபக்தியுடன், மரியாதையுடன் ரோமாபுரி நகர் திருக்காட்சியைக் கண்டுப்பூரித்துப் பரவசப்பட்டார்.

ரோமாபுரி நகருக்குள் ஒரு பக்தன் நுழைவதைப்போல உள்ளே நுழைந்தார் மார்ட்டின் லூதர். ரோமைக் கண்ட அவர் பூலோக சொர்க்கத்தைக் கண்டவர்போல வியப்பூரித்தார்.

தலைமை குருவான போப் குருவின் அரண்மனையில் அவரது காலடி பட்டபோது, ஏதோ மோட்ச வாசலுக்கு ஒருவன் சென்றால் என்ன பய பக்தியோடும், மரியாதை யோடும், பரவசத்தோடும் அடக்கமாக அமைதியாக ஒழுக் கமே உருவான உணர்வுகளுடன் செல்வானோ, அவனைப் போல மார்ட்டின் லூதரும் சென்றார்.

ஆனால், போப் அரண்மனையில் லூதர் கண்ட ஆடம் பரம், ஆரவாரம், படாடோப அலங்காரம், பணச்செருக்கு, அதிகார ஆணவம் அனைத்தையும் பார்த்த லூதருக்குப் பெரும் ஆச்சரியமே தோன்றிவிட்டது

போப் அரண்மனையிலே நடக்கும் அக்கிரமச் செயல் களைக் கண்டு திடுக்கிட்டார். ஏழைகளுக்கு அருள் பாலிக் கும் இடமா? அல்லது பணக்காரர்களுக்குப் பாதம் தாங்கும் பளிங்கு மண்டபமா என்று திகைத்துப் போனார்!

போலிப் பக்தியும், போப்பாண்டவரின் தன்லயாட்டி பொம்மைகள் ஆதிக்கமும், மக்களை ஏமாற்றும் மாய்மால வெளிவேஷமும், உயர்வு தாழ்வுப் பேதங்களின் செருக்கும் அங்கே கோரத் தாண்டவமாடினதைக் கண்டு மனம் பொருமினார்!

ரோமாபுரியில் அப்போது இரண்டாம் ஜூலியஸ் என்பவர் போப் ஆண்டவராக இருந்தார். லூத்தர் அந்த போப்பைச் சந்திக்க வந்தபோது, பிரான்ஸ் நாட்டின் மீது போப் போர் தொடுத்திருந்தார்! அதனால், மார்ட்டின் லூதர் கொண்டு வந்த அகுஸ்தீனிய மடத்தின் வழக்குகளை விசாரிக்கப் போதிய நேரமில்லை.

இருப்பினும், லூதர் கொண்டுவந்த வழக்குகளை மேல் விசாரணை செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார். அதுவரை ரோமாபுரியிலே இருந்த அகுஸ்தீனிய மடத்தில் அவர் தங்கி இருந்தார். ஓய்வு நேரங்களில் ரோமாபுரியின் முக்கிய இடங்களையும்,

அப்போஸ்தலரின் கல்லறைகளையும் பார்த்துப் பணிந்து மகிழ்ச்சிப் பெற்றார்.

போப்பாண்டவர் அரண்மனைக்கு வெளியே இருக்கும் பிலாத்துவின் படிக்கட்டுகளையும் தொழுதார். அங்கு செல்கின்ற யாத்ரீகர்கள் அந்தப் படிக்கட்டுகளைப் 'பரிசுத்த ஏணி' என்று கூறுவதின் மகிமையையும், எருசலேமில் பொருந்திய பிலாத்துவின் அரண்மனையிலே இருந்து தேவ தூதர்களால் ரோமாபுரிக்குக் கொண்டுவரப்பட்ட அற்புதச் சின்னமாகவும் அதைப் புனிதப் பயணிகள் கருதுவதால் அதனையும் பார்த்தார். அந்த ஏணியில் இருபத்தெட்டுப் படிகள் இருக்கின்றன.

இயேசு பெருமானுடைய புனிதப் பாதங்கள் பட்டு, அந்தப் படிக்கட்டுகள் பரிசுத்தமாய் இருப்பதால், ரோமாபுரி போகும் யாத்திரீகர்கள் அப்புனிதப் படிக்கட்டுகளில் முழங்கால்களால் நகர்ந்து, ஒவ்வொரு படிகளிலும் ஜெபம் செய்து பக்தி உணர்வுகளோடு ஏறிச் செல்கின்றார்கள். அவ்வாறு ஏறுபவர்களுக்கு ஒவ்வொரு படிக்கட்டுக்கும் ஒன்பது ஆண்டுகள் செய்யும் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பது அதற்கு ஐதீகமாகும்.

அந்தப் படிக்கட்டுகளின் மீது முழங்காலால் ஏறி நின்று கிறிஸ்துவின் ஜெபத்தை உச்சரிக்கும்போது, ஒவ்வொரு படிக்கட்டுக்கும் ஒரு முன் ஜென்ம ஆத்துமாவை அவன் உத்தரிக்கும் தலத்திலிருந்து விடுவிக்கப்படுவான் என்பது ரோமாபுரிச் சபையின் போதனையாகும்.

மார்ட்டின் லூதரும் இந்த போதனைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு படிககட்டையும் தனது முழங்காலால் ஏறி, கர்த்தர் மீது ஜெபம் செய்து தனது முழங்கால்கள் தேயத் தேய அதன் உச்சியை அடைந்தார்.

உச்சிமீது ஏறிய பின்பு, மார்ட்டின் லூதர் உள்ளத்தில் தால்தேய இவ்வாறு சென்றால் தனது ஒன்பது வருடத்

டாலங்சள் போய்விடும் என்றும் அவனது ஆத்துமா விடுதலை பெறும் என்பதையும் கண்டது யார்? என்ற கேள்விகள் எழுந்தது.

எனவே, இது சரியான காரணமாக இருக்காது; வேறு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும்; அப்படியானால் அந்த சரியான காரணம்தான் என்ன? என்று யோசிக்கும் போது, 'விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்' என்பது தான் அந்த சரியான வழியாக இருக்கும் என்று தனக்குள்ளே அவர் எண்ணித் தனது மனதைச் சமாதானம் செய்து கொண்டார்.

இவ்வாறு லூதர் ரோமாபுரியில் ஒரு மாதம் தங்கி அங்குள்ள பல அற்புதக் காட்சிகளைக் கண்டறிந்தார். ஆனால், அவை பற்றி அவர் நேரில் கண்ட காட்சிகளும், அவற்றுக்காகக் கூறப்படும் காரணங்களும் அவருடைய மனதைப் புண்படுத்தி விட்டன.

ரோமாபுரித் திருச்சபை அதிகாரிகளது ஆடம்பரப் போக்கு, அவர்கள் யாத்ரீகர்கள் இடையே நடந்து கொள்ளும் அசுந்த அவமரியாதை வாழ்க்கை; வெளி வேஷமாய் மாலங்கள்; போலிப் பக்தியின் செயல்கள்; அவர்களது சுய நல வருமானம்; கடமைக்காக இயந்திரம் போலச் செய்யும் சடங்குகள்; கூலிக்காக ஆண்டவனை வழிபடும் ஆராதனை போக்குகள் அனைத்தையும் லூதர் பார்த்து மனவேதனைப் பட்டார்.

புனிதமான நகரத்தில் அசுத்தமும், கேலியும், கிண்டலும் கலந்த செயல்கள்; நரித் தந்திர ஜெபவழிபாடுகள் எல்லாவற்றையும் கண்ணாரக் கண்டார். புனித பூமியா இது? என்று நொந்து போனார்!

மார்ட்டின் லூதர் ரோமத் திருச்சபையில் ஒரு பூசை நடத்திக் கொண்டு இருக்கும்போது, வேறோர் இடத்தில் மற்றொரு பரிசுத்த ஸ்தலத்தில் அதே பூசையை வேறோர்

குரு அவசரம் அவசரமாக ஏழுமுறைச் செய்து முடித்து விட்டு, லூத்தரின் காதருகே வந்து 'சீக்கிரம், சீக்கிரம்' பூசையை முடித்துவிடு வருமானம் பணம் முக்கியம் என்று கடுகடுப்புடன் கூறியதைக் கேட்டு கடுங்கோபம் கொண்டார்!

ரோமாபுரி தூய யோவான் திருக்கோயிலில் சனிக்கிழமை தோறும், எந்தத் தாயாருடைய மகன் மீசா என்னும் பூசை செய்கிறாரோ, அந்தத் தாயார் பெரும் பேறு பெறுபவளாவாள் என்ற ஒரு நம்பிக்கை அங்கே நிலவி இருந்தது.

அப்போது லூதரது பெற்றோர் உயிரோடு இருந்ததால், அவர்களைத் தமது ரோமைத் திருபூசையாலும், புனிதப் படிக்கட்டு ஜெபத்தாலும் உத்தரிக்கும் தலத்திலே இருந்து இப்படி நடை பெறுவதைப் பார்க்கும் போது நமது பெற்றோர்கள் மரணமடைந்திருக்கக் கூடாதா? என்று வருத்தமும் பட்டார்.

ரோமாபுரியிலே அவர் தங்கிய ஒரு மாத காலத்தில் அங்கே இப்படியெல்லாம் நடப்பதை நேரிலேயே பார்த்தார்! இதுதான் ரோமாபுரி என்ற புண்ணியத் திருத்தலத்தின் லட்சணமா என்று திகைத்தார்.

வழக்கம் போல வேதாகமச் சொற்பொழிவுகளை விட்டன்பர்க் தேவாலயத்தில் நடத்தி வந்தார்! அதனால் அவரது பெயரும் புகழும் சுற்றுப்புறமுள்ள நகர்களிலும், மக்களிடையேயும் பெருகியது.

விட்டன்பர்க் இளவரசனும், அந்த நகரிலுள்ள விட்டன்பர்க் பல்கலைக்கழக நியமன அதிகாரம் வகித்த தலைவருமான பிரட்ரிக் என்பவருக்கும் லூதரின் வேதாகமச் சொற்பொழிவாற்றலையும், அவரிடையே காணப்பட்ட கல்விச் சிறப்பின் மேற்கோள்களும், வாக்கு வன்மையும் அழகழகான சொற்பிரயோகங்களின் ஆழமும், தத்துவக் கலையின் நுட்பங்களும், உண்மையான ஓர் இறையியலின் உள்

உணர்வைக் கிளர்த்தக்கூடிய கருத்துக்களும் கண்ட, கேட்ட இளவரசர் வியந்து நின்றார்.

உடனே லூத்தரைப் பார்த்து, "நீங்கள் இறை இயல் Doctor of Divinity என்ற பட்டத் தேர்வுக்குப் படியுங்கள். அதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று இளவரசர் கூறினார்! அதற்கான எல்லாச் செலவுகளையும் அவரே ஏற்றார்.

லூதரின் நண்பரான ஸ்தெளபிட்ஸ் என்பவரும், இளவரசர் பணித்தபடிச்செய்யுமாறு கேட்டுக் கொள்ளவே லூதர் கி.பி. 1512ம் ஆண்டு அக்டோபர் 19ம் தேதி இறையியல் பண்டிதராகத் தேர்வு பெற்றார்.

இந்தப் பட்டத்தைப் பெற்றபின்பு, லூதர் பரிசுத்த வேதாகமத்தைப் பற்றியே சிந்தித்து, அதைப் பற்றிப் பேசுவதையே முழுநேரத் தொண்டாகவும் ஏற்று, வேதாகமச் சத்திய வாக்குகளை மக்களுக்கு எடுத்துரைப்பதையே தொண்டாகக் கருதி நடந்து வந்தார்.

ரோமாபுரியிலே தான் பார்த்த அக்கிரமங்களையும், ஆஷாடபூதி வேஷக்களையும், குருமார்கள் அங்கே செய்து வந்த அட்டூழியங்களையும் லூதர் மறந்தும்கூட வெளியில் எங்கும் பேசவில்லை; குறிப்பிடவுமில்லை; காரணம் ரோமாபுரி திருச்சபை-கிறித்துவத்தின் தாய்ச்சபை என்பதால்.

இசை வல்லுநரான மார்ட்டின் லூதர் வேதாகமத்தில் உள்ள சங்கீதம் என்ற அத்தியாயத்தின் மீதும், அதன் கருத்துக்கள் மேலும் ஒரு பற்றும் பிடிப்பும் ஏற்பட்டதால், அவற்றை அல்லும் பகலும் படித்துப் பழுத்து மன ஆறுதலுற்று, மக்களுக்கும் அதன் உட்பொருட்களை விளக்கிக் கூறலானார்.

பிரட்ரிக் இளவரசர், ஸ்தெள பீட்சை நாடெங்கும் சுற்றித் தேவாலயத்துக்கான திருப்பண்டங்களைச் சேகரிக்குமாறு உத்தரவிட்டார். அதனால் அவருடைய மேல்

விசாரணைக்குழுப் பொறுப்பு லூத்தரிடம் வந்து சேர்ந்தது. அகுஸ்தீனிய மடத்திற்கு உட்பட்ட மற்ற மடங்களை எல்லாம் கண்காணித்துச் சீர்திருத்தும் பணியும் அவரிடம் வந்தது.

இருந்தும் என்ன பயன்? இவற்றால எலலாம லூதரின் மனம் திருப்தி பெறவில்லை. சமைய வழிபாடுகளாலும், திருத்தொண்டு வாழ்க்கையாலும்; பக்தி நெறிப் பண்பாட்டாலும், ஏருத்துவச்சேவைகளாலும், மார்ட்டின் லூதருக்கு மன அமைதியோ, பாவமன்னிப்பின் உறுதிப்பாடோ கிடைக்கவில்லை.

அதனால், அவருக்கு முன்பு திருச்சபைத் தொண்டுகளை ஆற்றிய கிறித்துவ அடியார்களின் புனிதச்சேவைகளைப் பொறுப்புடன் ஆராய்ந்தார். அகுஸ்தீன் அடிகள், தாலர் அடிகள், எக்கார்ட்டு அடிகள், கெரிசன் அடிகள் போன்ற அடிகளார் அனுசரித்துக் காட்டிய அருள் நெறிகள் அவரது மனதைத் திருப்திப்படுத்தின.

'ஆண்டவர் பரிசுத்தம் உள்ளவர்; அவருக்குப் பாவம் முற்றிலும் வெறுப்பானது; பரிபூரண சுத்தரான கடவுள் பாவிகளை நேசிக்கின்றார்; அவர்களுக்கு இரங்கி கருணை காட்டுகின்றார்; அவர்கள் மனம் மாறுவதற்கு உதவியாகக் கிருபை அளிக்கின்றார்; பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார்.

'பாவியின் மரணத்தை இயேசுநாதர் விரும்பவில்லை' அவன் மனம் மாறி மீண்டும் நல்வாழ்வு வாழ்வதையே விரும்பினார்; பாவத்தில் புரளும் மனிதனுக்காக பரிசுத்தமுள்ள தெய்வமான இயேசு, தனது உயிரையே சிலுவைக்குப் பலி கொடுத்தார்.

'தேவன் நீதியுள்ளவர்; அதே நேரத்தில் கருணையுள்ளவர்; எனவே பாவியான மனிதன் நியாயமாய் பெற வேண்டிய நரகக் கட்டளையைத் தமது தலைமேலேற்றுச் சிலுவையிலே அவற்றைச் சுமந்தார்.

அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்தவர்; அவரை விசுவாசிக்கின்றவனுக்கு தண்டனை என்ற தீர்ப்பில்லை; தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் என்றும் சுகமான உயிர்வாழ்க்கை அடையுமாறு, அவரைத் தந்தருளி இந்த உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒரு விசுவாசியை அவர் தமது சொந்த நீதியால் உடுத்துவித்து, அவனைத் தமது சிலுவைப் புண்ணியத்தால் நரக தண்டனையிலே இருந்து தப்புவிக்கிறார்.

இவை எலாம் அகுஸ்தீன் தீர்க்கதரிசியின் வேதாகம அனுபவங்கள் என்று லூதர் மக்களுக்கு எடுத்துக்காட்டி உபதேசம் செய்தார். இதுபோலவே அடியார் தாலர், அனுபவங்களைத் தொகுத்துக் கூறும்போது:

''ஒரு மனிதனது பக்தி, ஒழுங்கு, கட்டுப்பாடு, வழிபாடு போன்றவற்றைவிட, ''ஒருவன், இறைவனோடு இரண்டறக் கலந்து ஒன்றும் கூட்டுறவே பெரிது'' என்று எடுத்துரைத்தார்.

கெர்சன் என்ற பேரறிஞன் அனுபவத்தை லூதர் விளக்கினார். ''ஒருவனைத் தேடி வருகின்ற கேடுபாடு -ன் மிகவும் நல்லது; காரணம், மனிதன் இறைவனால் சோதிக்கப்படுவது மிகவும் நன்மை பயப்பது; சோதனை என்பது இல்லாவிட்டால் ஆன்மா எப்படி வளர்ச்சி பெறும்? என்றானும், நாம் அனுபவிக்கும் துன்பம், துயரங்கள் மூலமாக கர்த்தரின் கரத்தைக் காணலாம்; கர்த்தர் சோதிக்கப்பட்டவர். ஆனால், சோதனைகளை வென்றவர்!"

''பாவ மரணத்தின் மீதும், பேய், பிசாசு உலகத்தின் மீதும் கர்த்தர் வெற்றி பெற்றவர். அவரை நாடும் இயேசு அடியாருக்குச் சோதனையில் வெற்றி வந்து சேரும். தொல்லைகளின் ஊடே கடவுளின் கருணையைக் காண

லாம்.'' என்பன போன்ற சொர்சனின் அனுபவமொழிகள் நமக்கெல்லாம் பெரும் ஆறுதல்களாகும் என்று லூதர் தமது சொற்பொழிவில் கூறி கேட்பவர் மனத்தை ஊக்கப்படுத்துகிறார்.

லூதர் சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் ஒரு பெரிய உண்மையை உணர்ந்தார்கள். அதாவது, மனிதன் ரட்சிக்கப்படுவது சன்மார்க்கத்தால் அல்ல; பக்திநெறி உணர்வுகளாலும் அல்ல; இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கும் நம்பிக்கையால் மட்டும்தான் என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

## 8. மதம் மீதிருந்த விசுவாசம் கிறிஸ்து மீது பொங்கியது!

மார்ட்டின் லூதர் விசுவாசம் ரோமாபுரி செல்லும் வரை மார்க்கம் மீது இருந்தது; அதாவது மதம் மீது இருந்தது. ரோம் நகரிலே கண்ட காட்சிகளுக்குப் பிறகு அந்த விசுவாசம் இயேசு பெருமான் மீது பொங்க ஆரம்பித்தது; ஏங்கத் துவங்கியது.

இதற்கு அடிப்படைக் காரணம், வேதாகமத்தில் கூறப்பட்டிருந்த சத்திய வாக்கான, ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்'' என்ற தேவ மொழிதான்! இந்த இறையியல் தத்துவம் லூதருக்குள் ஒரு புது தெளிவை, புத்துயிரை, புது திருப்பத்தை புகுத்தியது என்று கூறலாம்.

இந்த மேற்கண்ட இறையியல் கோட்பாடு, போப் என்ற தனி மனிதனின் ஆணவக் கோட்டையை அடித்துத் தூள் தூளாக்கும் சம்மட்டியாக மாறியது. இந்த தத்துவம்,

லூத்தரது அகத்தினில் நெஞ்சில் சாந்தியைப் பெருக் கெடுக்க வைத்தது.

இந்த இறையியல் லட்சியம் லூதருக்குச் சமாதான ஊற்றுக் கண்ணாக மாறியது; பேரின்பப் பேறு என்னும் இறைவழிபாட்டு வெள்ளத்தைப் பெருக்கியது; அந்த வெள்ளம் கிறித்துவப் பழக்கவழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்த மக்களது மத வயலுக்குரிய வளமான நீராக மாறியது.

கிறித்துவைக் கண்ட மார்ட்டின் லூதர், இரட்சிப்பை யும் கண்டார்! அமைதி, சாந்தி என்பவற்றையும் மத நெஞ்சங்களிலே கண்டார்! சமாதான வாழ்வைக் கண்டார்! நித்திய ஜீவனையும், நித்திய பேரின்பப் பேற்றினையும் கண்டார்.

தனக்குத் தேவையான இறையியல் ஞானமெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்பதாக அவர் எண்ணி இதயம் பூரித்தார்! மகிழ்ந்தார்! அதனால், கதிரவனைக் கண்ட கமலம் போல மனம் பூத்து மலர்ந்தார்.

தனக்கு தனிமனித ஆதிக்கம் தேவையில்லை; அதனைப் போலவே இறைவழிப்பாடு இயற்றும் மக்களுக் கும் தேவையில்லை. இயேசு கிறிஸ்து ஒருவரே அவர்களுக் கும் தனக்கும் தேவையானவர் என்ற அடையாளத்தை லூதர் கண்டு கொண்டார்!

இந்த உலகில் எதைக்காண வேண்டும் என்று ரோமா புரிக்குப் புனித யாத்திரை புறப்பட்டாரோ, அந்த புனித சக்தியை அவர் விட்டன் பர்க் தேவாலய சிறை வழிபாடு களிலும், வேதாகம அருள் மொழிகளிலும் கண்டார்! அதைப் பெற்றார்?

'விசுவாசத்திலே நீதிமான் பிழைப்பான்' என்ற வேதாகம இறை ஞானம் லூதரது உள்ளத்திலே பதிந்தவுடன் இறைவன் இயேசுவே அவரது இதயமலரிலே வீற்றிருப்பதாக நம்பினார்! நம்பினோர் என்றும் கைவிடப்படுவது இல்லையல்லவா-இறைவனால்? எனவே, அவரது இறைத்தொண்டு வாழ்வில் தினந்தோறும் ஞானஒளி படர்ந்தது! அது மக்களிடமும் பரவியது!

லூதர் இயேசுவுக்குள் புது வடிவம் பெற்றார்; தான் பெற்ற பேரின்பம் இந்த வையகமும் பெற வேண்டும் என்று துடித்துத் தொண்டாற்றி வந்தார். அவருடைய செயல்கள், சொற்கள், சிந்தனைகள், கனவுகள் நனவுகள் எல்லாமே இயேசு திருவுருவானது

'இனி நானல்ல; கிறிஸ்துவே என்து இதய தாமரையில் சிம்மாசனமிட்டு கொலுவேறியுள்ளார். நான் இப்போது இறைச்சி, தோல், எலும்புகளால் பிழைத்திருக்கிறேனோ என்றால், எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே நான் பிழைத்திருக்கிறேன்.

'நான் தேவனுடைய கருணையை வீணாக்குவது இல்லை; அக் கருணை ஒளி மக்கள் மீதும் படர வேண்டும் என்று, மார்ட்டின் லூதர் தனது மார்க்க மழைப் பொழிவுகளிலே எல்லாம் பெய்து மக்களை இறைஉணர்வெனும் நீரால் நனைய வைத்தார்!

இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமே அவருக்குரிய மூச்சும் பேச்சுமாகி விட்டது; அதனால் அவர் உரையாடல்கள் எல்லாமே கிறிஸ்து இயேசு ஞானமாகவே பொங்கி வழிந்தன! அவர் எழுதும் எழுத்துக்களிலே எல்லாம் இயேசு மணமே வீசியது.

பரிசுத்தர் கர்த்தர் ஒருவரே! பாவம் அவரிடத்தில் இல்லை; எனவே, மரணத்துக்கு அவர் உரியவர் அல்லர்.

எனினும், மனிதர்பால் அவர் கொண்டுள்ள மட்டற்ற அன்புக் கிருபையால் மனிதருடைய பாவ மரணத்தைத் தம் தலைமீது சுமந்து கொண்டார். நமக்காக அவர் செத்தார் அவரது சிலுவைப் புண்ணியத்தால் நாம் பிழைத்துக் கொண்டோம்.

நமது பாவ மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அவரது புண்ணியத்தால் அவருடைய பரிசுத்தத்தையும், நித்திய ஜீவனையும் நாம் பெற்றுக் கொண்டோம் அவர் நமக்காக பாவமாக்கப்பட்டார். நாம் அவரது ரத்தப் புண்ணியத்தால் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளோம். நமது பாவத்தின் நிமித்தம் அவர் பிதாவினால் கைவிடப்பட்டார். அவருடைய தயவினாலே நாம் மீண்டும் தேவனோடு சேர்த்துக் கொள்ளப்பட்டோம்.

நமக்காக அவர் சாபமானார்! அவருடைய அருளால் நாம் ஆசீர்வாதம் பெற்றோம். நம்முடைய பாவத்தின் நிமித்தம் அவர் மரித்தார். நாம் அவரது இரக்கத்தால் பாவத்தினின்று மீட்கப்பட்டுள்ளோம். இயேசு கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்.

இந்த இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதனால் மட்டுமே நாம் ரட்சிக்கப்படுகிறோம். இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே மனிதர் வாழ்வு பெறுகிறார்கள். 'விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்'. நான் இவ்வளவு காலம் இந்த விசுவாசத்தைப் பற்றி அறியாதவனாக இருந்தேன். இப்பொழுது இயேசு கிறிஸ்துவே அவரைப் பற்றும் விசுவாசத்தை என் நெஞ்சிலே ஊற்றெடுக்கச் செய்தார்.

கி.பி. 1516-ம் ஆண்டு திருச்சபை வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு. ஏனென்றால், இந்த ஆண்டில்தான் மார்ட்டின் லூதர்

இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரைத் தமது உயிருக்குயிராகக் கொண்டார்.

எனவே, லூத்தரது வாழ்வு மலர்ந்தது; மாபெரும் மகத்தான திருப்பமும் ஏற்பட்டது; திருச்சபை போக்கிற்கே ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் கொண்டு வருவதற்குக் கர்த்தர் அதனைப் பயன்படுத்தினார்.

திருச்சபை மலர்ச்சியுற்றது; புத்துயிர் பெற்றது; சடங்காச்சாரத்தில் மூழ்கி மடிந்து கிடந்த திருச்சபைக்கு உயிர் மீட்சி வந்தது

ரோமர் நிருபத்தைத் தியானிக்கையில் கடவுள் கிருபையாகத் தனக்கு வெளிப்படுத்தச் சித்தங்கொண்ட இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் அருமை பெருமைகளைப் பற்றி; மார்ட்டின் லூத்தர் தான் எழுதிய ரோமர் நிருப வியாக்கியான முன்னுரையில் விவரமாகக் காட்டியுள்ளார்.

இந்தவிசுவாச விளக்கவுரையை வாசித்த எத்தனையோ மக்கள் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் ஆகியுள்ளார்கள். அவர்களுள் ஜான்வெஸ்லியும் ஒருவர்.

மார்ட்டின் லூதரது கிறிஸ்துவைப் பற்றும் விசுவாச மார்க்கத்தால், அந்தக் காலத்து ரோமச் சபையில் அநேக புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டு, புத்துயிர் பெற்று பல புதுச்சபைகள் ஆரம்பமாயின.

அக்காலத்து ரோமச்சபை கிறிஸ்தவர்கள் இரட்சண்ணியத்தைச் சம்பாதிப்பதற்குத் தங்கள் வாழ்நாள் எல்லாம் புண்ணியக் கிரியைகளைச் செய்தும், இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளாது தவித்தார்கள்.

மார்ட்டின லூதர் பார்த்துப் பரவசப்பட்ட கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாச நெறி; அவர்களுக்கு ஒரு புத்துயிரையும், புது நம்பிக்கையையும், புது வாழ்வையும் அளித்தது

மார்க்க சடங்காச்சார இருளில் நடந்தவர்கள், கிறிஸ்து வாகிய பேரொளியைக் கண்டு மகிழ்ந்தார்கள். இந்த தெய்வ ஒளியைப் பற்றிச் சாட்சி பகர தெய்வம் மார்ட்டின் லூதரை எழுப்பினார் எனலாம்!

இறைவன் இயேசுவை நேரிடையாக அடைந்து கொள்ள விடாமல், மக்களைத் தடுத்து நிறுத்தின தடுப்புச் சுவர் போன்ற மார்க்க ஆசாரம், புண்ணியச் செயல்கள், சுயநீதி, பரிசுத்தப் பண்டம், பரிசுத்தவான்களின் மத்தியஸ் தம், பாவமன்னிப்புச் சீட்டுக்களின் கொடுமை போன்றவை அடியோடு தகர்த்து எறியப்பட்டன.

மார்ட்டின் லூதரும், தான் இலவசமாய் பெற்ற ரட்சிப்பை மற்றவர்களுக்கும் அள்ளி வழங்க ஆரம்பித்தார். விட்டன்பர்க் பல்கலைக் கழகத்தில் ஒரு முறை ரோமர் நிருபத்தைப் பற்றி லூதர் பேசும்போது:

''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்'' என்ற இறைவாக்கை, அமுதவாக்காக அனைவருக்கும் அள்ளி வழங்கினார். அவர்களது உள்ளம் உருக உரைத்தார். கல்லும் கரையும் நிலையில் கனிந்துரைத்தார். அதைத் தமது அனுபவ சாட்சியாக பசுமரத்தாணி போல மனத்தில் பதியவைத்தார்.

கிறித்துவ மார்க்கத்தின் அடிப்படைச் சத்தியம் என் பவை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

எதைக் காணவேண்டும் என்று அவர் நினைத்தாரோ அதை இவ்வுலகில் அவர் கண்டு கொண்டார் என்ற கண் ணோட்டம் அவரது விழிகளிலே விளங்கியது. அவரது தோற்றத்திலே ஒரு புதிய பளபளப்பு ஒளிர்ந்தது.

பழைய பக்தன் மார்ட்டின் லூதரை இப்போது எவரா லும் பார்க்க முடியவில்லை; ஒரு புதிய இயேசு பெருமான் விசுவாசியான மார்ட்டின் லூதரையே எல்லா மக்களும் பார்த்துப் பரவசமடைந்தார்கள். அவர் கிறிஸ்துவுக்குள்

ஒரு புதிய மனிதராக எல்லோருடைய பார்வையிலும் தோற்றமளித்தார்.

இந்த பண்பு மாற்றம், ஒழுக்க ஓம்பல், அன்பு பரி மாற்றம்; நாவினது பணிவான சொற்கள், உறுப்புக்களின் அடக்க ஒழுக்கச் சாயல்கள், கண்களிலே காட்சி தரும் கருணை ஒளி; இவற்றை எல்லாம் புதிதாகக் கண்ட மக்கள் இவர் மார்ட்டின் லூதரா? என்று கேட்டு வியப்படைந் தார்கள்!

மார்ட்டின் லூதர் இந்த உலகத்தில் எவருக்காகவும் வாழவில்லை; அவர் தனக்காகவும் வாழவில்லை; இயேசு பெருமான் ஒருவருக்காக மட்டுமே வாழ்கிறவர் போல காட்சி தந்தார்.

இயேசுகிறிஸ்து, மார்ட்டினின் வாழ்க்கைப்போக்கையே மாற்றிவிட்டாரோ என்று விட்டன்பர்க் மாணவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அந்த மாணவர்களுள் பிற்காலத் தில், சுவீடன் நாட்டைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்த உலாவுஸ் பெட்ரி Olavus Petry என்பவரும் ஒருவராவார்.

அகுஸ்தீன் மடங்களை மேற்பார்வை அதிகாரியாக இருந்த ஸ்டீதளபீட்ஸ், இளவரசர் பிரட்ரிக் உத்தரவிட்ட பணிகளைப் பார்க்கச் சென்று விட்டதால், அந்தப் பொறுப்பும் மார்ட்டின் லூதரிடமே வந்து சேர்ந்தது என்று குறிப்பிட்டிருந்தோம் அல்லவா?

அவர் தமது ஆதினத்திற்குட்பட்ட மடங்களை எல்லாம் பார்வையிட்ட பிறகு, தான் சாமியாரான எர்பர்ட் மடத்துக்கு மீண்டும் வந்தார். இந்த மடத்திலேதான் அவர் ஒரு சேவகனைப் போலவும், தெருத் தெருவாகப் பிச்சை எடுத்து வரவும், பிணம் போல மயங்கி வீழ்ந்து

கிடந்ததும் போன்ற நிலைகளிலே லூதர் இங்கு முன்பு இருந்தார்.

இப்போது பல மடங்களுக்கு மேல் விசாரணை அதிகாரியாகவும், மத குருவாகவும், தத்துவ போதகராகவும், மத சம்பந்தப்பட்ட இறையியல் பட்டதாரியாகவும், பெரும் தத்துவப் பேச்சாளராகவும், ரோமாபுரி சென்று மீண்ட ஒரு புனித யாத்ரீகராகவும் இந்த மடத்தைப் பார்க்க வந்துள்ளார் என்பதை மடத்துச் சாமியார்கள் எல்லாம் புரிந்துகொண்டு அடக்க ஒடுக்கத்தோடு மார்ட்டினின் முன்பு வந்து நின்றார்கள்.

இப்போது மார்ட்டின் லூதர் உலகத்துக்கு ஒரு நற்செய்தியைக் கூறவே இம் மடத்துக்கு வந்துள்ளார். அந்த நற்செய்தி என்ன? "உலகுக்கு நற்செய்தியானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே" என்ற செய்தியை உலகுக்குப் பறைசாற்றி அறிவித்தார்.

கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் மேன்மையை அந்த மடத்துச் சாமியார்களுக்கும் ஜெபக் கூட்டத்தில் திரண்டிருந்த மக்களுக்கும் எடுத்துரைக்கும்போது, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற தெய்வ வாக்கின் பெருமைகளை விவரித்து எடுத்துரைத்தார்.

தனது அதிகாரத்துக்கு உட்பட்ட அகஸ்தீன் நெறி மடங்களை எல்லாம் ஆறுவார காலமாகச் சுற்றிப் பார்த்த பின்பு, அந்த சாமியார்களுக்கும் கிறித்துவைப் பற்றும் விசுவாசத்தை எடுத்துரைத்தார். பல சாமியார்கள் லூதரது ஞானத்தைக் கேட்டு மனந் திரும்பினார்கள்.

விசுவாசத்தால் கிறிஸ்துவை தங்களது சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள் மடத்துத் துறவிகள். இந்த நற்செய்தியை பிறருக்கும் பறைசாற்றினார்கள். இதன் வாயிலாக இக்காலம் சீர்திருத்த விடிவெள்ளிக் காலமாகவே மக்களுக்கும் பிற கல்வியாளர்களுக்கும் தோன்றியது.

## 9. மார்ட்டின் லூதரின் வாதப்போர் புரட்சி!

'யார் இந்த மார்ட்டின் லூதர்? போப் ஆண்டவரை எதிர்த்துப் பேசிட என்ன தைரியம் இந்த லூதருக்கு? எவன் கொடுத்தான் இவருக்கு அந்த அதிகாரத்தைத்? போப்புக்கு எதிராகப் பேசும் எந்த அதிகார ஆணைகளையும் தீயிட்டுச் சுட்டெரிப்பேன்' என்று கொக்கரித்த தெத்செல் என்பவனின் நெருப்புமிழும் சொற்களைக் கேட்ட மார்ட்டின் எதற்கும் அஞ்சவில்லை.

'நான் படித்த வேதாகமச் சத்திய போதனை நெறிகளைக் காப்பாற்றிட நெருப்பிலே என்னைச் சுட்டெரிக்கப் படுவதானாலும் அஞ்சேன்! முன் வைத்தக் காலைப் பின் வைக்கமாட்டேன், எதற்கும் தயார்!'

'ஒருவனது பாவங்கள் போப்பாண்டவர் விடுத்துள்ள பாவமன்னிப்புச் சீட்டுக்களால் அல்ல; இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த ரத்தத்தால் மன்னிக்கப்பட்டன என்ற அனுபவ சத்தியத்தைக் கற்றவன் நான்!'

'இந்த வேதாகமத்தின் உண்மையை மறுதலிக்கும் தெத்செலின் மிரட்டல் என்னை ஒன்றும் செய்ய முடியாது மக்களை ஏமாற்றிப் பாவமன்னிப்புச் சீட்டுக்களை விற்றுப் பணம் சம்பாதித்த தெத்செலின் மோசடிச் செயலை, பாதகச் செயலை மக்கள் மன்றத்தின் முன்போ, போப் அதிகாரம் பெற்ற விசாரணைக் குழு முன்போ அம்பலப் படுத்தியே தீருவேன்.'

'பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரம் வேதாகமச் சத்தியத்திற்கு நேர் விரோதமானது; தெத்செலின் பாவ மன்னிப்புச் சீட்டு ஓர் உண்மையான போலிச் சீட்டு; அது மக்களுடைய பாவங்களை மன்னிக்கும் தகுதி அற்றது!

இயேசு கிறிஸ்துவின் ரத்தமே மக்களது பாவங்களை மன்னிக்கும் தகுதி உடையது' என்று மார்ட்டின் லூதர் விட்டன்பர்க் தேவாலயத்திலே கூடியிருந்த மக்களிடையே வீர முழக்கமிட்டார்.

தெத்செலிடம் பணம் கொடுத்துப் பாவமன்னிப்புச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டதாலேயே, வாழ்க்கை முழுவதும் நீங்கள் என்ன பாவம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று இறுமாந்திருக்கின்ற கிறித்துவ மக்களே, ஏமாந்து போகாதீர் என்று எச்சரிக்கின்றேன். நான் எச்சரிப்பது உங்களது பணத்தைப் பாதுகாக்கவே என்று நம்புங்கள்.

உண்மையாக நீங்கள் மனந்திரும்பி, கிறித்துவிட மிருந்து பாவமன்னிப்புப் பெற்று புனித வாழ்க்கை வாழா விட்டால், வருத்தப்பட்டுக் கூறுகிறேன். நீங்கள் அழிந்தே போவீர்கள் என்று கூடியிருந்த எல்லா மக்கள் முன்பும் அறை கூவலிட்டுக் குரல் கொடுத்தார் லூதர்!

தேவாலயத்தில் வீர முழக்கமிட்டு எதிர்த்ததோடு நிற்கவில்லை மார்ட்டின் லூதர்! பரிசுத்த வேதாகமத்தில் இருந்த வாசகங்களைத் தொகுத்து எழுத்து மூலமாய் எல்லா மக்களுக்கும் தெய்வ வாக்கை எழுதி அனுப்பினார்.

1517-ம் ஆண்டு, நவம்பர் மாதம் முதல் நாளன்று எல்லா பரிசுத்தவான்களின் திருநாளைக் கொண்டாடும் விழாவை உடனே நடத்துமாறு தனது மேற்பார்வையிலே உள்ள மடங்களுக்கு கட்டளை பிறப்பித்தார்;

மக்கள் திரள் திரளாகக் கூடினார்கள்! ஏன் தெரியுமா? அன்றுதான் மடங்களின் பழைய மேல் விசாரணை அதிகாரியாக இருந்த ஸ்தெளபீட்ஸ், நாடெங்கும் சுற்றி, தான் சேகரித்து வந்திருந்த எல்லாப் பரிசுத்தப் பண்டங் களையும் அன்று பொது மக்களது தரிசனத்திற்காகப் பொன், வெள்ளிப் பேழைகளில் வைக்க இருக்கின்றார்.

அதைப் பார்க்கவும் மக்கள் ஆர்வத்தோடு அன்று கூடினார்கள்.

பொதுமக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடுகின்ற இந்த விழா நாளன்று, விட்டன்பர்க் தேவாலயத்தில் பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரம் வேத சத்தியத்திற்கு எவ்வளவு விரோதமானச் செயல் என்பதை அந்த மக்கள் அறிய வேண்டும், என்பதற்காகவே அந்த பரிசுத்தவான்களின் திருநாளைக் கொண்டாட மார்ட்டின் திட்டமிட்டுச் செயலாற்றினார்.

பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரம் செய்வது எத்தகைய ஒரு மோசடிச் செயல், தவறான முன்னுதாரணக் காரியம்; என்பதற்குரிய நியாயங்களை எழுதி வெளியிட்டு, அதனை எதிர்ப்போர் இருந்தால், எதிர் நியாயம் பேசலாம்; அவர்கள் என்னிடம் வழக்காடலாம் என்றும் சவால் விட்டு எழுதிய அறிக்கைகளை முக்கியமான இடங்களிலே ஒட்டி வைத்தார் மார்ட்டின்.

ஒரு பொருளைப் பற்றி நியாயம் தேட அக்காலத்திலே ஒரு வழக்கம் உண்டு. நியாயம் கேட்கும் அறிஞர்கள் அந்தப் பொருளைப் பற்றிய நியாயக் குறிப்புக்களை இலத்தீன் மொழியிலே எழுதி வெளியிட்டு, அதற்கு எதிர் நியாயம் கூற விரும்பும் அறிஞர்களைத் தர்க்கமிட அழைக்க வேண்டும் என்பது மரபு.

இந்த மரபு முறையை மார்ட்டின்லூதரும் மீறாமல், சகல பரிசுத்தவான்களின் திருநாளுக்கு முன்நாளான 1517-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3 -ம் நாளன்று பிற்பகலில் தனது தர்க்கமிடும் நாளை வைத்துக் கொண்டார்.

தேவாராதனைக்காக கூடிவரும் அரண்மனை ஆலயத்தின் வடபுறத்துக் கதவில், பண்டிதர்களுக்குத் தெரிந்த லத்தீன் மொழியில், பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரத்தை

எதிர்த்து மார்ட்டின் கூறும் 95 நியாயங்களைக் கொண்ட ஓர் அறிக்கையை ஒட்டி ஆணியறைந்து வைத்தார்.

மார்ட்டின் லூதர் இவ்வாறு செய்த வீரதீரச் செயல் ஜெர்மன் நாடெங்கும் பரவிவிட்டது. அதனால் கல்வி யாளர்களிடம், மாணவர்களிடம், வேதகுருமார்களிடம், பொது மக்களிடம், கிறித்துவமக்களிடம் பெரும் பரபரப்பு எழுந்தது.

ஜெர்மன் நாட்டிலே ஏற்பட்ட இந்த பரபரப்பு; அதிர்ச்சி; வியப்பு, ரோமாபுரி திருச்சபையை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. ரோமாபுரி எங்கும் மார்ட்டின் சவாலைப் பற்றியே பேச்சு பரபரப்புடன் பேசப்பட்டது. போப்பை எதிர்த்துச் சவாலா? போப்புக்கு எதிர்வாக்கா? எவ்வளவு தைரியமான செயல்? யார் அந்தபுண்ணியவான் மார்ட்டின்? என்ற பேச்சு மக்களிடையே எழுந்தது!

ரோமாபுரி மட்டுமல்ல; ஐரோப்பிய நாடுகள் பலவற் றிலும், மார்ட்டின் லூதரின் ஆண்மை மிக்க அறிவுவாதப் போர் என்ற காட்டுத்தீ பரவிவிட்டது. எல்லா நாடுகளும் விட்டன்பர்க் தேவாலயத்தின் வடபுறத்துக் கதவைப் பற்றியே பேச ஆரம்பித்தன! மக்களும் சாரி சாரியாகத் திரண்டு அந்த 95 நியாயக்குறிப்புக்களைப் படித்தார்கள்.

அந்த 95 நியாயக் குறிப்புக்களை யாரோ ஓர் அனாம தேயப் பேர்வழி எழுதினார் என்ற கோழைத்தன ஈனம் தனக்கு வந்து சேர்ந்து விடக் கூடாது என்று எண்ணிய மார்ட்டின் லூதர் அந்த ஆணியடித்து ஒட்டிய அறிக்கை யின் கீழே:

"இந்த நியாயங்களை வேத சாஸ்திர பண்டிதஞானி மார்ட்டின் லூதராகிய நான் எழுதியுள்ளேன். இவற்றைப் பற்றிப் பகிரங்கமாக வாதாட அல்லது தர்க்கம் செய்ய விரும்புவோர் என்னிடம் நேரில் வந்து வாதாடலாம்.

தர்க்கம் செய்யலாம்'' என்று எழுதி கையொப்பமும் போட்டிருந்தார்.

1517-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் நாளன்று, விட்டென் பர்க் தேவாலயம் ஆராதனைக்கு மக்கள் வெள்ளம் போல் பெருகிக் கூடி விட்டார்கள்.

மார்ட்டின் லூதர் எழுதியிருந்த 95 நியாயக் குறிப்பு கள் ஆணியறைந்து ஒட்டப்பட்ட இடத்தில் ஒரே நெருக் கடி; மக்கள் பலாப்பழத்தை மொய்க்கும் ஈக்களைப் போல பரபரப்புடன் கூடி ஒருவரை ஒருவர் நெட்டி முட்டிப் படித்துக் கொண்டிருந்தார்கள்!

இலத்தீன் மொழி படியாத பொதுமக்களுக்கு, பல்கலைக்கழக மாணவமணிகள் சிலர் அந்த நியாயக் குறிப்புக்களை ஜெர்மன் மொழியிலே மொழி பெயர்த்துத் தனித்தனி கூட்டங்களிலே கூறிக் கொண்டிருந்ததையும் கூடியிருந்தவர்கள் கேட்டார்கள்.

நேரமாக ஆக மக்கள் கூட்டம் பெருத்த ; அதனால் பல மாணவர்கள் தனித்தனிக் கூட்டமாக மக்களைக் குரல் கொடுத்து அழைத்து, அந்த நியாயக் குறிப்புக்களை ஜெர்மன் மொழியிலே கூறினார்கள்.

ஒரு மாணவன் கூடியிருந்த மக்களிடம் கனத்தக் குர லெடுத்துப் பேசிக் களைத்து விட்டான், அவன் இருந்த இடத்திலே வேறோர் மாணவன் வந்து அந்தப் பணி யினையே தொடர்ந்து செய்தான்! இவ்வாறு பல தனிக் கட்டங்களில் ஆங்காங்கே குழுமி கேட்ட வண்ணமிருந் தார்கள் மக்கள்.

மக்கள் வெகு ஆர்வத்தோடும், கருத்தோடும், விழிப் புணர்வோடும், பரப்பரப்போடும் மாணவர்கள் மொழி பெயர்ப்புகளைக் கேட்டு, அதிர்ச்சியும், ஆச்சரியமும், இகைப்பும், திணறலுமாகக் கூடியிருந்தார்கள்.

திடீரென்று சில மாணவர்கள் ஜெர்மன் மொழியிலே மார்ட்டினின் 95 நியாயக் குறிப்புகளையும் அச்சடித்துக் கொண்டு வந்து துண்டறிக்கை போல கூட்டத்திலே வீசிக் கொண்டிருந்தார்கள்; அதையும் மக்கள் கூட்டம் விட வில்லை. முண்டியடித்துப் பொறுக்கிப் பொறுக்கிப் படித்தார்கள்.

பாவமன்னிப்புச் சீட்டுக்களைப் பணம் கொடுத்து வாங்க வந்தவர்கள், பாவமன்னிப்புச் சீட்டுக்களைக் கண்டித்து எழுதிய துண்டறிக்கையின் நியாயக் குறிப்புக்களைப் படித்து அதனை எழுதி நகல் எடுத்துக் கொண்டு, அவரவர் வீடுகளுக்குக் கொண்டு சென்று, பொறுமையுடனும் பொறுப்புடனும் ஒவ்வொரு குறிப்பை யும் படித்து, உண்மை என்ன என்பதைச் சிந்தித்தார்கள்- மக்கள்;

மார்ட்டின் லூதருடைய எண்ணங்கள் நியாயமான கருத்துக்கள்தான் என்ற முடிவுக்கு வந்த கல்வியாளர்கள் அவற்றை அவர்கள் அச்சிட்டு அவரவர் ஊர்களிலே பரப்பி னார்கள்! அக்கம், பக்கம் உள்ள ஊர்களிலே எல்லாம் பறையறைந்தார்கள்.

அச்சடிக்கப்பட்ட இந்த 95 நியாயக் குறிப்புகள், சில மாதங்களுக்குள் ஜெர்மனி முழுவதும் பரவியது மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளிலே எல்லாம், முழுவதுமாகப் பரவி விட்டன! ஒரு தீப்பந்தம் போதாதா ஊர் முழுவதையும் கொளுத்திச் சாம்பலாக்கிட!

இவ்வாறு பரவும் வேகத்தைக் கண்ட ஒருவர், தேவ தூதர்களே தபால்காரர்களாக மாறி, நாடெல்லாம் பரப்புகிறார்களோ என்று சமையச் சாயம்பூசி எல்லாரிட மும் பேசி அவரும் பரப்பிக் கொண்டிருந்தார் மார்ட்டின் கருத்துக்களை!

ஓராண்டு கழிந்த பின்பு, மார்ட்டின் லூதர் தனது 95 நியாயங்களுக்கும் அவர் விளக்கமளித்து ஒரு கடிதத்தைப் போப்பாண்டவருக்கு அனுப்பினார்! அதையே பத்தாம் போப் லியோவுக்கு அர்ப்பணம் என்று அச்சிட்டு மக்களுக்கும் வழங்கினர்.

பிராண்டன் பர்க் அத்தியட்சருக்கும் அந்த அச்சிட்டப் பிரதி ஒன்றை அனுப்பி வைத்தார். மறுபடியும் லூதர், தனது நண்பரான ஸ்தெளபிட்ஸ் மூலமாக மீண்டும் ஓர் விளக்கப் பிரதியை போப்புக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் போப்புக்கு ஒரு கடிதமும் அனுப்பினார். அந்த கடிதத்தில்:

இந்த மண்ணுலகில் கிறித்துவின் பிரதிநிதிப்பதவி ஏற்றுள்ள பரிசுத்தத் தந்தையே! நான் எழுதினவைத உங்களால் மறுதலிக்க முடியாது. உமது விருப்பப்படி எனது உயிரை எடுத்தாலும் சரி, கொடுத்தாலும் சரி, என் அறிக்கையை ஏற்றுக்கொண்டாலும் சரி, மறுத்தாலும் சரி; என்ன செய்தாலும் சரி, அது உமது விருப்பம்'' என்று எழுதியிருந்தார்.

எழுதுவாரா போப் பதில்? உண்மை நெருப்புப்போல சுடும் அல்லவா? எனவே, போப் அதற்கு எந்த பதிலும் எழுதாமல் மௌனமாகக் கொலுவீற்றிருந்தார். ஆனால், அதற்குப் பதிலாக, போப் ஆண்டவரை நேரில் கண்டு எழுதிய வேதப் புரட்டுகளுக்கு மார்ட்டின் லூதர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று திருச்சபை மூலமாக மார்ட்டின் அழைக்கப்பட்டார்

பிரட்ரிக் இளவரசர் நியாயம் அறிந்தவர்; நீதி என்ன என்று புரிந்தவர்; எல்லாரிடமும் அன்பு காட்டும் பண்பாளர்; நியமுகப் பிரபுவான அந்த இளவரசருக்கு, மார்ட்டின் அழைக்கப்பட்டது நியாயமாகத் தோன்றவில்லை.

அவர் நேராகவே போப் பாண்டவரிடம் சென்றார். இந்த வழக்குப் பற்றி இருவருக்கும் கலந்துரையாடல் நடந்தது. முடிவாக இளவரசர் கூறும்போது, இந்த வழக்கு ரோமாபுரியில் அல்ல; ஜெர்மனி நாட்டிலேதான் நடக்க வேண்டும்; விசாரிக்கப்பட வேண்டும்'' என்று போப்பிடம் மன்றாடினார்.

இளவரசர் எடுத்த முயற்சியின் விளைவாக, போப் தன் சார்பில் கயத்தான் Cajetan என்னும் ஒரு பிரதிநிதியை அனுப்பி, மார்ட்டின் லூதரை ஆக்ஸ்பர்க் என்னும் இடத்தில் விசாரணை செய்யுமாறு ஓர் ஒழுங்குக் கட்டளையைப் பிறப்பித்தார்.

மார்ட்டின் லூதர் எதற்கும் அஞ்சாமல் போப் கட்டளையை ஏற்றார்! அக்டோபர் மாதம் ஏழாம் தேதி லூதர் கால் நடையாகவே நடந்து ஆக்ஸ்பர்க் என்ற இடத்திற்கு வந்தார்.

போப் பிரதிநிதியான கயத்தான், தனது புகழ் பெற்ற வேவுகாரன் உர்பன் என்பவனை அழைத்து, மார்ட்டின் லூதரிடம் அனுப்பி, அவனது முழுத் திறனையும், அறிவையும், சாதுர்ய தந்திரங்களையும் காட்டி, லூதரை எப்படியாவது அவர் விடுத்துள்ள அறிக்கையை மறுதலிக்குமாறு செய்யச் சொன்னான்.

உர்பன் என்ற வேவுகாரன் மார்ட்டின் லூதரைச் சந்தித்தான்; அன்பாக வாதாடினான்; ஆசைகாட்டி வாதாடினான்; நயவஞ்சகமாகத் தாக்கினான்; இறுதியாக அச்சமூட்டிப் பேசினான்; மறுதலிக்கிறேன் என்று ஒரு வார்த்தையைக் கூறினால் போதும் என்று கெஞ்சினான்.

விசுவாச வீரச் சிங்கமாகிய மார்ட்டின் லூதர், அவனுடைய அச்சுறுத்தலுக்கோ, அன்புக்கோ, ஆசைச் சொற்

களுக்கோ, மிரட்டல் உருட்டல்களுக்கோ என் மூக்களவும் இடம் கொடுக்க மறுத்து விட்டார்.

அது மட்டுமன்று; நான் விடுத்த அறிக்கை சத்தியம் சத்தியமே! நான் கூறியது சத்தியத்திற்கு விரோதமானது என்று சத்திய வேதாகமத்தைக் கொண்டு நிரூபித்துக் காட்ட முடியுமா? என்று கடல் கொந்தளிப்புத் தொனியிலே எழுந்து நின்று குரல் கொடுத்தார்.

உர்பன் உடனே உர்ரென்று கோபம் கொண்டு, "எல்லோராலும் கைவிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டகல் உன் கதி என்ன தெரியுமா? உனக்கு அடைக்கலம் தருபவர் யார்? அதைப் பார்க்கிறேன்" என்று அவன் கோபமாய் கொக்கரித்தான்.

உடனே மார்ட்டின் லூதர் அவன் எதிரிலேயே, விண்ணுலகைச் சுட்டிக காட்டி, விண்ணுலகக் கர்த்தர் எனது அடைக்கலமும், கோட்டையுமானவர், என்றார்.

இதைக் கேட்ட உர்பன், மார்ட்டின் லூதர் இருந்த இடத்தை விட்டு சட்டென போனான்! மார்ட்டின் லூதருக்கு அரசனிடமிருந்து உயிர்க்காப்பு உறுதிச் சீட்டு வந்தது லூதர், லிங் என்ற பண்டிதருடன் கயத்தானிடம் சென்றார்.

எதிரியை எதிரி சந்திக்கும் போது, முறைப்படி ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்ளும் மனிதநேய வழக்கப்படி, வாழ்த்திக் கொண்டார்கள். பின்னர், நெடுநேரம் வரைக் கயத்தான் லூதரோடு ஏதும் பேசாமல் ஊமையாக இருந்தான். அதனால், மார்ட்டின் தானாகவே கயத்தானிடம் பேசலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

'நான் எழுதி வெளியிட்டுள்ள நியாய அறிக்கை சம்பந்தமாகப் போப்பானவரின் தீர்ப்பை அறிய வந்திருக்கிறேன்' என்று மார்ட்டின் லூதர் எழுந்து கேட்டார்.

வாயைத் திறந்தான் சயத்தான்! "நீ, போப்பானவரை மகா சபை மிக்க பரிசுத்த தந்தையாக ஒப்புக் கொண்டால், நான் கூறும் வார்த்தைகளைக் கவனமாக, கூர்ந்து கேட்டு நிதானமாகப் பதில் கூறி கௌரவிப்பாயாக:

● நீ, வெளியிட்டுள்ள புரட்டுக்களை மறுதலிக்க வேண்டும்,

● நீ, இனிமேல் உனது சொந்த அபிப்ராயங்களை எக்காரணம் கொண்டும் வெளியிடக் கூடாது.

● நீ, திருச்சபையின் சமாதானத்தைப் பங்கப் படுத்தக் கூறிய எல்லாவற்றையும் விலக்க வேண்டும்.

—என்று சயத்தான் கூறியதைக் கேட்ட மார்ட்டின் லூதர், 'நான் செய்த தவறுகள் எவையென்று சுட்டிக் காட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

சயத்தான் என்னென்ன குற்றங்களைச் சுட்டிக் காட்டினானோ, அதற்கெல்லாம் மார்ட்டின் லூதர் எதிர் நியாயமாக, வேதாகமத்தில் இருந்தே ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார்.

லூதர் கூறிய வேதாகமச் சாட்சியைக் கேட்ட சயத்தான் மௌனமாகவே காட்சி தந்தான்!

உடனே சயத்தான் ஸ்தௌபிட்ஸ் பண்டிதரைப் பார்த்து, "நான் இனி இந்த லூதர் என்ற மிருகத்தோடு தர்க்கம் செய்ய முடியாது; அவனது கண்கள் கூர்மையானவை; அவன் அறிவு ஆச்சரியமானது; ஆழமானது; மிக மிகப் பெரியது" என்றான்.

இருந்தாலும் அவன் போப் பால் அனுப்பப்பட்ட பிரதிநிதி அல்லவா? அதனால், தனது கௌரவத்திற்கு இழுக்கு நேர்ந்திடக் கூடாது என்பதற்காக, அதிக ஆணவத்தோடு

மார்ட்டின் லூதரைப் பார்த்து, "நீ மறுதலித்து விடு; இல்லையானால் நீ மீண்டும் இங்கே என்னிடம் வர வேண்டாம்" என்று பொங்கும் கோபத்தோடு பேசினான்.

'வேதாகமத் தர்க்கத்தில் மார்ட்டின் லூதரைத் தோற்கடிக்க வேண்டுமானால், நான் இன்னும் அதிக நுட்பமாகத் திருமறையை வாசித்து ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று அதே ஸ்தௌபிட்ஸ் என்பவரிடம் கூறினான்.

## 10. சிங்கத்தின் குகையிலே மூன்றாவது கர்ஜனை!

வோர்ம்ஸ் நகர் வந்த மார்ட்டின் லூதர், அரச சபை கூடியிருந்த மாபெரும் மகத்தான தர்க்க வாதம் புரியும் மண்டப வாசலை அடைந்தார்! அவரை வரவேற்க மக்கள் மாபெரும் கூட்டமாகக் கூடி நின்றார்கள்! லூதரை பார்த்ததும் ஆரவாரக் கோஷமிட்டார்கள்.

சிங்கத்தின் குகையிலே சிறுநரிகளை இரை கொள்ளச் செல்லும் மார்ட்டின் லூதர் என்ற சிங்கமே; என்று கேயோர்க் புருண்ட்ஸ்பூர்க் என்ற புகழ் பெற்ற வாள் வீரர் மார்ட்டினைக் கைகொடுத்துக் குலுக்கியபோது கூடியிருந்த மாணவர்களும், மக்களும் ஆரவாரமிட்டு மகிழ்ச்சி பொங்கினார்கள்.

சிங்கங்கள் புடைசூழ, ஐந்தாம் சார்லஸ் மன்னன் அமர்ந்துள்ளான்! அந்த மண்டபத்தில் அதிகாரச் செருக்கும், அகம்பாவ கிறுக்கும், ஆணவ முறுக்கும், ஐயா இவர்கள் இடையே ஒரு விகவாசியா என்று உருக்கமுமான இதயம் கொண்ட இரக்கங்களும் அந்த முந்நூறு பேரில் இருந்தன! வெளியே மக்கள் கூட்டம் ஆரவாரமிட்டன!

ரோம் போப் பிரதிநிதிகள், "மார்ட்டின் லூதர் இங்கே எதுவும் பேச வேண்டாம். அவரது பிரயங்கமும் தேவையில்லை. இரண்டே இரண்டு கேள்விகள் கேட்போம். அதற்கு ஆம், இல்லை என்று பதில் கூறினாலே போதும்" என்று ஆணவக் குரலோடு ஆர்பரித்துப் பேசினார்கள்.

அவர்களது குரலொலி போக்கையும், அவையின் சலசலப்பையும், ஒரு புற அமைதியையும், மன்னன் சார்லசின் மமதையையும் மார்ட்டின் லூதர் கவனித்துப் பார்த்தார்.

அவ்வேளையில் போப் பிரதிநிதி: இதுதான் முதல் கேள்வி; 'இந்தப் புத்தகங்களை எல்லாம் எழுதினது நீங்கள் அல்லவா?' என்றபோது, லூதர் 'ஆம்' என்று கூற எழுந்தபோது,

லூதரது நண்பர் ஒருவர் திடீரென்று குறுக்கிட்டு, "போப் பிரதிநிதி ஆலெண்டர் அடுக்கி வைத்திருந்த புத்தகங்களின் தலைப்புகளை வாசித்துக் காட்ட வேண்டும்" என்று குரலெழுப்பினார்;

அவையில் அந்த புத்தகங்களின் தலைப்புகளை எல்லாம் படித்துக்காட்ட அதிக நேரம் ஆனது. அதற்குள் லூதர் சிறிது ஒய்வு எடுத்துக் கொண்டு, தனது பதற்றத்தை முற்றிலும் கலைத்தார்! கணீர் கணீர் என்று பதில் பேசிடும் குரலில் தயாரானார்.

புத்தகங்களின் பெயர்களை எல்லாம் படித்து முடித்த பின்பு அந்த புத்தகங்கள் எல்லாம் தன்னால் எழுதப் பட்டதுதான் என்ற நோக்கில் 'ஆம்' என்று தலை அசைத்தார்!

இரண்டாவது கேள்வியை, மார்ட்டின் லூதரிடம் ஏற்கனவே ஒருமுறை வாதம் செய்து தோற்றுப்போன

எக் என்பவன் கேட்ட போது, 'இந்தப் புத்தகங்களிலே நீ எழுதி உள்ள புரட்டுகளை மறுதலிக்கச் சம்மதம் தானா? என்றான்.

இந்தக் கேள்வி லூதருக்குப் பெரும் வியப்பை விளை வித்தது. அவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பு இதழில் இது பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

அந்தப் புத்தகங்களில் எழுதப்பட்டவை எல்லாம் இரட்சிப்புக்கு இன்றியமையாதவை என்று மார்ட்டின் லூதர் அறிந்திருந்ததால், அவனது கேள்விக்கு 'இல்லை' என்று கூறி அன்றைய விசாரணையை முடித்துக் கொள்ள அவர் விரும்பவில்லை

நல்ல சூழ்நிலையில், மறுநாள் இந்த இரண்டாவது கேள்விக்குப் பதில் கூறலாம் என்று நினைத்த லூதர், 'இந்த கேள்விக்கு விடை கூறத் தவணை தேவை என்று, சபையாரை நோக்கிக் கேட்டார்.

அவருக்கு மறுநாள் கூறலாம் என்ற தவணை சபை யிலே கிடைத்தது. அன்று இரவு மார்ட்டின் லூதர், ஜெபம் செய்தார்; ஆண்டவன் அருளை வேண்டினார்; மிக உருக்கமாகத் தவம் புரிந்தார்! இரவெல்லாம் வேதாகம வசனங்களிலே ய மிதந்து கொண்டிருந்தார்.

வல்லமை பொருந்திய இந்த ஜெபத்தை லூதர் உருக்கமாகச் செய்து ஓதிக் கொண்டிருந்த போது, தெய்வா தீனமாக அடுத்த அறையிலே இருந்து கேட்டுக் கொண்டி ருந்த ஒருவர், அந்த பிரார்த்தனை வசனங்களை அவர் அப்படியே எழுதி வைத்திருந்தார்.

1521-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 18-ம் தேதியாகிய மறு நாள், இரண்டாம் நாளாக, மீண்டும் அரசர் மாமன்ற

மண்டபத்தில், மார்ட்டின் லூதர் மாபெரும் கிறித்துவ விசுவாச வீரச் சிங்கமாய் வெற்றி முழக்கமிட்டார்.

கிறித்துவைப் பற்றும் விசுவாசத்தை, மேன்மையை, அருமையை, முக்கியத்துவத்தை விளக்கினார்.

மனிதனல்ல; மனிதனாலும் அல்ல; மனித முயற்சியாலும் அல்ல; மனிதச் செயல்களாலும் அல்ல: இறைவன் இயேசு கிறித்துவால் மட்டுமே மனிதன் இரட்சிக்கப்படுகிறான் என்ற சத்தியத்தைப் பற்றி ஏறத்தாழ இரண்டு மணி நேரம், லத்தின் மொழியிலும், ஜெர்மன் மொழியிலும் அருளுரை ஆற்றினார்.

இந்த வீர முழக்கமிட்டப் பேச்சைக் கேட்டு எக் என்பவன், லூதரைப் பார்த்து, "உமது பிரசங்கத்தை நிறுத்து; இரண்டில் ஒரு பதிலை மட்டுமே கூறு. நீர் எழுதியவைகளை மறுதலித்து விடச் சம்மதமா? இல்லையா என்றான்.

அப்போது மார்ட்டின் லூதர் ஆணித்தரமாகச் சபையைப் பார்த்து "நான் எழுதியவை சத்திய வேதாகமத்திற்கு விரோதமானவை என்று உங்களில் யாராவது ஒருவர் நிரூபித்துக் காட்டினால், எனது புத்தகங்களை நானே உங்கள் முன்பு மீண்டும் சுட்டெரிக்கத் தயார். நான் எழுதியவை எல்லாம் சத்திய வேதாகம உண்மையை ஆதாரமாகக் கொண்டவை."

"நான் மனித வாக்கை ஆதாரமாகக் கொண்டு எனது நூல்களை எழுதவில்லை. கிறித்துவின் ஆவியானவராலும், கிறித்துவின் வசனத்தாலும் ஆண்டு, நடத்தப் படாத போப் வாக்கையோ, சங்கங்களின் தீர்ப்பையோ நான் ஏற்கத் தயாராக இல்லை."

"போப்பும், அவரது சங்கங்களும் பல தடவைகளில் தவறி வீழ்ந்து மாறுபாடு செய்துள்ளதை எல்லாம் நாம்

அறிவோம். போப்பும் பொதுச்சங்கங்களும் முன் சொன்ன வற்றை பின் மாற்றி இருப்பதும் நாம் தெரிந்த காரியமே! எனவே, அவர்களை மட்டும் நான் எப்படி நம்ப முடியும்?"

"தேவ வசனத்திற்கும், கிறிஸ்துவின் ஆவியானவரால் வழி நடத்தப்படும் எனது மனச் சாட்சிக்கும், கட்டுப்பட்ட வனாய் இந்தப் புத்தகங்களை எழுதியுள்ளேன். இவை சத்திய வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட சத்தியம். ஆலெண்டர் தனது விருப்பப்படி, எந்த தீர்ப் பும் கூறப்படுவதற்கு முன்பே அவர் எனது நூற்களைச் சுட்டெரித்தார்! இது அவருக்குள்ள போப் கோபத்தின் எதிரொலிச் சம்பவம். இதை உலகம் உதாசீனம் செய்தே தீரும்.

எனது எழுத்திலுள்ள ஒரு வார்த்தையையும் கூட நான் மறுதலிக்கவோ, மாற்றவோ மாட்டேன். நான் இங்கு விசுவாச சத்தியத்திற்காக நிற்கிறேன். கிறிஸ்துவே எனக்குத் துணை! ஆமென்." என்று லூதர் வெற்றி முரசு கொட்டினார்.

மார்ட்டின் லூதரின் இந்த வீர முழக்கம், திருச்சபை வரலாற்றில் ஓர் பொன்னேடானது. இந்த பேச்சு திருச் சபை சரித்திரத்தில் ஒரு புதிய திருப்பமானது! இதனால், திருச்சபை போக்கும் மாற்றப்பட்டது.

திருச்சபை சீர்திருத்தம் உருவானது! விசுவாசத் திருச்சபைகள் புதிதாகத் தோன்றின! சடங்காச்சார போப்பு மார்க்கக் கோட்டை சடசடவென சரிந்தது! மறுக்கும் கிறிஸ்துவ விசுவாச சபை Protestant Church உலகெங்கும் உருவாகின!

உலகெங்கும் கிறிஸ்துவ சுவிசேஷமும், வேதாகமமும் வழங்கப்படும் புதிய எழுச்சி பிறந்தது! 'கிறிஸ்துவைப்

பற்றும் விசுவாசமே உலகத்தை வெல்கின்ற ஜெயம்" என்ற இயேசு பெருமான் வாக்கு நூற்றுக்கு நூறு பலித்து விட்டது. இயேசுவின் திருப்பெயர் வாழ்க என்ற புது உணர்ச்சிக் குரல் உலகிலே ஒலித்தது.

## 11. லூதரைக் கொல்ல சதி

## புரோடெஸ்டண்டுப் 'பூ' பூத்தது!

ஐந்தாம் சார்லஸ் மன்னனது ஆட்சிக்கு உட்பட்ட வோர்ம்ஸ் நகரில், ரோம் போப்பை எதிர்த்து இரண்டு நாட்கள் நடைபெற்ற வேதாகமத்தின் சொற்போரில் மார்ட்டின் லூதர் வெற்றி பெற்றது உலக நாடுகளுக்கு ஓர் ஆச்சரியமாகவே இருந்தது. போப் ஆட்கள், லூதரைக் கொல்ல சதித் திட்டம் போட்டார்கள்.

மார்ட்டின் லூதர் வாதப்போரில் வெற்றி முரசு கொட்டிய பின்பு, மறுபடியும் விட்டன்பர்க் நகர் போகும் வழியில், போப் சதித் திட்டத்தை முன் கூட்டியே யூகத்தால் உணர்ந்துவிட்ட லூதரது நண்பர், அவரைப் பலவந்தமாகக் கடத்திவிட்டார்

வர்ட்புர்க் என்ற ஒரு கோட்டைக்குள்ளே லூதரை மாறுவேடம் போட்டு அடைத்து வைத்துவிட்டார்கள். அவரது குருப்பட்ட தலை அடையாளமான உச்சி மொட்டையில் Tonsure உரோமம், அத்துடன் தாடியும் மீசையும் திரண்டு செறிந்து அடர்ந்து வளரும் வரை, லூதர் வர்ட்புர்க் கோட்டையிலேயே ஒரு போர் வீரன் வேஷத்தில் தங்கி இருந்தார்.

லூதர் அடைத்து வைக்கப்பட்ட இடம் மிகவும் ரகசியமாக இருந்ததால் மக்கள் இடையே பெரும் பரபரப்பு

உருவானது ஜெர்மனி நாடு அதனால் மிகவும் துயரம் கொண்டு அவரை நாலாப் பக்கங்களிலும் தேடிக் கொண்டே இருந்தது;

ஆல் பிரெக்ட்டுரர் என்ற ஒரு கலைஞர், லூதர் எங்கே என்று தேடினார்! மற்ற ஆட்களையும் அனுப்பித் தேடவைத்தார். எங்கு தேடியும் லூதர் கிடைக்காமல் போகவே, போப் ஆட்கள் அவரை போகும் வழியில் கொலை செய்து விட்டார்கள் என்று கண்கலங்கி, ஒரு செய்தியைப் பரப்பிவிட்டார்.

துக்கம் தரும் அந்தத் துன்பச் செய்தியை அவர் பரப்பியதோடு நில்லாமல், 'பக்தர்களே உண்மைக்காகப் போராடிய மாவீரன் மார்ட்டின் லூதரை யாரோ கொலை செய்துவிட்டார்கள். அவர் இறந்து போனதைப் பற்றி நாம் கண்ணீர் சிந்துவோம். கர்த்தர் வேறு ஒரு பரிசுத்த விசுவாசியை அனுப்புமாறு ஆண்டவரை வேண்டுவோம் "வாருங்கள்" என்று வருத்தப்பட்டார்.

வொர்ம்ஸ் நகரில் கூடிய அரச சபை தீர்மானத்தின் படி மார்ட்டின் லூதர் ரோமாபுரி திருச்சபைக்கும், கிறித்துவ சமூகத்திற்கும் புறம்பானவர் என்று கூறப்பட்டு விட்டதால், வோறொரு சுவிசேஷ கிறிஸ்துவ திருச் சபையை உருவாக்குவதே உலகுக்கு நல்லது என்று லூதர் உணர்ந்தார்.

அதற்கான ஆக்கப் பணிகளை ஆற்றுவதிலே தீவிரம் காட்டினார். வர்ட்புர்க் கோட்டையிலே இருந்தவாறே சுவிசேஷ திருச்சபைக்கு உயிர் அச்சாணியாக, புதிய ஏற்பாடு என்ற வேதாகமத்தை ஜெர்மன் மொழியிலே ஆக்கம் செய்தார்!

உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் கிறித்துவ வேதாகம நூலை அவரவர் தாய் மொழியிலே வாசித்தால்தான்

உண்மை நெறிகளை உணருவார்கள் என்று நம்பினார். அதனால், அவரவர் தாய்மொழியிலே வேதாகமத்தை மொழிப் பெயர்த்து அச்சிட ஆவன செய்தார். ஒவ்வொரு நாட்டுத்தாய் மொழிப்பற்றையும் உணர்ந்தார்; போற்றினார்; மதித்தார்! அதனால் அவரது கொள்கைகள் பிற நாடுகளிலும் விரைவாக, சுலபமாகப் பரவியது.

மார்ட்டின் லூதரின் இந்த தாய்மொழிப்பற்று அவரவர் தாய்மொழிப் பற்றுக்கு ஊக்கமும் உயர்வும் அளித்தது. அது மட்டும் அல்லாமல் நாடெங்கும் சுவிசேஷத் திருச்சபை தோன்றுவதற்கும் ஓர் அடிப்படைக் காரணமாகவும் அது அமைந்தது.

கிறிஸ்துவ வேதாகமம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. இதனால் மக்கள் சத்தியத்தைத் தெரிந்து கொண்டார்கள். இறைவன் இயேசு கிறிஸ்து அவர்களுக்கு சடங்காச்சார அடிமை வாழ்விலே இருந்து விடுதலை அளித்தார்.

கிறிஸ்துவின் ரத்தம், அவர்களுக்கு இலவசமாய் பாவ மன்னிப்பு அளித்தது. கிறிஸ்துவின் கருணையால் மக்கள் சாந்தியும், சமாதானமும், பேரின்பமும் கிடைக்கப் பெற்றார்கள்.

இதன் பயனாக, ஜெர்மனி, சுவீடன், பின்லாந்து, நார்வே டென்மார்க், ஐஸ்லாந்து போன்ற நாடுகளிலே எல்லாம், பிறகு அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்ரிக்கா இந்தியா போன்ற நாடுகளிலே எல்லாம் சுவிசேஷ கிறிஸ்துவ விசுவாச சபைகள் எழும்பின!

வர்ட்புர்க் கோட்டையிலே தலைமறைவாக இருந்த மார்ட்டின் லூதர், தன் உயிரே போனாலும் பரவாயில்லை என்ற வீரத்தோடு கோட்டையை விட்டு வெளியே

வந்தார். நாடெங்கும் சுவிசேஷ திருச்சபையை நிறுவுவ தில் முனைந்து நின்று உழைத்தார்.

விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்ட மக்கள் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் புண்ணியத்தை உளம் மகிழ்ந்து உருகிப் போற்றிப் பாடித் துதிப்பதற்குரிய ஞானப்பாடல் களை எழுதிக் கொடுத்தார்.

கிறிஸ்துவைப் பின்பற்றக் கூடிய புத்கங்களை எழுதி; அன்பிலும், அறிவிலும் அவர்கள் வளர்ந்திட வழிகாட்டி னார். கிறிஸ்தவைப் பின்பற்றக் கூடிய நெறிகளை எடுத் துரைக்கும் சொற்பொழிவுகளுக்குப் பயிற்சி கொடுத்தார்! தனது வாழ்க்கையை இயேசு பெருமான் நெறிகளுக்காக உழைப்பதற்கே தத்தம் செய்து விட்டார்!

ஐந்தாம் சார்லஸ் மன்னன் அரச சபையினர் லூதரை ஒழித்துக் கட்ட ஆக்ஸ்பர்க் என்ற நகரில் 1530-ம் ஆண்டு கூடினர். அவ்வாண்டு ஜூன் மாதம் 25-ம் நாள் மாநாடு ஒன்றை நடத்தினார்கள்.

அந்த மாநாட்டில், பெரும்பான்மையினரான ரோம் போப் சபையினருக்கும், தங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன என்பனவற்றை உடனடியாக, சுருக்க மாக எழுதித்தர வேண்டும் என்று லூதர் பிரிவினரைக் கேட்டுக் கொண்டார்கள். சார்லஸ் மன்னன் இதற்காக ஓர் ஆணையினையே பிறப்பித்தான்.

இந்த அரசன் ஆணைக்கேற்றவாறு லூதர் சபையினர், பல மகான்களது உதவியால் தங்கள் விசுவாச அறிக்கையை தயாரித்து ஆக்ஸ்பர்க் நகர் அரச சபைக்கு வழங்கி னார்கள்.

அந்த ஆக்ஸ்பர்க் விசுவாச அறிக்கை, சத்திய வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்ததால், அந்த அறிக்கை உலகப் புகழ் பெற்றுவிட்டது.

இதனைக்கண்ட ரோம் நகர் போப் சபையினர் என்ன செல்வது என்று புரியாமல், எப்படியாவது மார்ட்டின் லூதரைக் கொன்று விடுவது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அந்த நேரத்தில் துருக்கி நாட்டுக்கும், பிரான்ஸ் நாட்டுக்கும் போர் ஆரம்பமாகும் நெருக்கடி இருந்ததால், லூதரின் சுவிசேஷ கிறித்துவ இயக்கத்தை வேரறுக்க அவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. மன்னன் ஐந்தாம் சார்லசும் லூதர் விஷயத்தில் அவ்வளவாக அக்கறை காட்டாமல் அலட்சியப்படுத்தி விட்டான்.

மார்ட்டின் உயிரோடு வாழ்ந்தவரையில் அந்தப் போர் மூளவில்லை. இதனால் லூதரின் சுவிசேஷ திருச்சபைக்கு ஏற்பட இருந்த பேராபாயம் நேராமலேயே போய்விட்டது.

'இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமே உலகத்தை வெல்கின்ற ஜெயம்' என்பது மார்ட்டின் லூதரின் தொண்டினால் உண்மையானது; உறுதியானது!

## 12. மார்ட்டின் லூதரின் மணம்! மரணம்!

மார்ட்டின் லூதர், இடைவிடாத விசுவாசத்தால் தனது சொந்த ரட்சகரான இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பு அவருக்கு உலகம் போற்றும் பெரும்புகழும் கிட்டியது. எனவே, கிறித்துவப் பாதிரியாராக ஒருவர் மாறினால் கூட அவருக்கு ரட்சிப்பு கிடைக்காது. சத்திய

வேதாகமத்தின் நம்பிக்கையும், அதைக்கூட கடை பிடிக்கும் ஒழுங்கு முறையும், அதற்கேற்ற மன உரமும் இருந்தால்தான் இயேசு பெருமான் இரட்சிப்புக் கிடைக்கும் என்பதை அவர் உலகுக்கு நிரூபித்துக் காட்டினார்.

அதனைப் போலவே, கடவுளால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த விவாகத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்று இந்த உலகுக்கு ஒரு முன்மாதிரியான சிறந்த கிறிஸ்தவ இல்லற வாசியாகவும் அவர் விளங்க விரும்பினார் ஆனால், அப்போது இவருக்கு வயது நாற்பத்திரண்டு ஆகி விட்டது.

இந்த நிலையில் ரோமாபுரி போப் ஆட்களால், எந்த நேரமும்தான் கொல்லப்படலாம் என்ற உயிர் நெருக்கடியும் அவர் மனத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட நேரத்தில் திருமணம் என்ற ஒன்று தேவை தானா என்று சிந்திக்கலானார்.

கிறித்தவ மார்க்கத்தின் சீர்திருத்தத்திற்காகத் தனது உயிரையே பணயம் வைத்த மார்ட்டின் லூதரை, இப்போதும் கூட எந்த நேரத்திலும் போப் ஆட்களால் கொல்லப்படலாம் என்ற அபாயம் உள்ள மார்ட்டின் லூதரை, நாம் திருமணம் செய்து கொண்டு அவருக்கு முடிந்த அளவு உதவி செய்யலாமே என்ற எண்ணத்தால்; அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்து பணிவிடையாற்ற முன்வந்தாள் ஒரு பெண்மணி. அவள் பெயர் கத்ரீனாள் வொன்போரா.

ரோமாபுரிச் சபை சந்நியாசிகளைப்போல், கன்னியா ஸ்திரீகளில் பன்னிரெண்டு பேர் லூதரது சுவிசேஷ கிறிஸ்துவ நெறியினைக் கேட்டு, ரோம் மடத்தை விட்டு வெளியேறி லூதரது சுவிசேஷத் திருச்சபையில் சேர்ந்து பணியாற்றிட முன்வந்தார்கள். அவர்களுள் ஒருத்திதான் Catherine Von Bora என்ற மாதரசி,

நான் திருமணம் செய்து கொண்டால் சீர்திருத்தச் சிங்கமான மார்ட்டின் லூதரையே மணம் செய்வேன். வேறு எவரையும் மனத்தாலும் நினையேன் என்று முடிவு செய்திருந்தாள் அந்த உத்தமப் பெண்மணி.

மார்ட்டின் லூதர் ஆண்டவரை நோக்கி ஜெபித்து, அவருடைய சம்மதம் பெற்ற அதே வாரத்தில், 1525-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் நாள், கத்தரீனாள் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

திருமணம் முடிந்து வழக்கமாக நடைபெறும் கல்யாண விருந்து விழாவில், லூதரது தாயாரும் தந்தையாரும் வந்து கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி, ஒரு வெள்ளிக் கிண்ணத்தைப் பரிசளித்தார்கள்.

அந்தக் கிண்ணம், இப்போது கிரீட்ஸ்வெல்ட் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மணமக்கள் விட்டென்பர்க் நகரிலுள்ள அகுஸ்தீனிய துறவிகள் மடத்தில் குடியேறினார்கள். அந்த மடத்தைக் காவிசெய்து அரசன் மேற்பார்வையாளர் லூதர் தம்பதிகளுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

லூதர் மனைவியான கத்தரீனாள், அவரது திருச்சபைச் சீர்திருத்தப் பணியில் மும்முரமாக, முழு பலத்தோடு முழு மனத்தோடு அவருடன் இணைந்து பணியாற்றி, திருச்சபைகள் பல தோன்றிடக் காரணமாக இருந்தார்.

மார்ட்டின் லூதருக்கு ரோம் போப்புவால் பல துன்பங்கள் வந்தபோது அவருக்கு ஆறுதலும், தேறுதலும் கூறி முன்னைவிட மிகத் தீவிரமாக அவரைப் பணி புரியுமாறு தக்க உதவிகளை கத்தரீனாள் செய்தார். அதனால் அந்த பெண்மணியின் புகழும் நாட்டில் வளர்ந்து பெருமை பெற்றது.

ஒரு குழந்தை தன் தந்தையோடு நேருக்கு நேராய் பேசி மகிழ்வதைப் போல, லூதர் ஜெப நேரங்களில் தனியாக அமர்ந்து இயேசு பெருமானிடம் பேசுவது போல ஜெபம் செய்யும் பழக்கம் உடையவர். அதுபோலவே, மக்களுக்கும் அவர் வேதாகமத்தில் உண்மைகளை எடுத்து விளக்கும்போதும் மக்களிடையேயும் பேசி ஜெபம் செய்து மகிழ்வார்.

லூதர் தனது, சுவிசேஷ திருச்சபைகளைப் பற்றியும், இயேசு பெருமானைப் பற்றி வேதாகமத்தில் கூறியுள்ள அருள் மொழிகளை அடிப்படையாகக் கொண்டு ஏறத்தாழ முன்னூற்றைம்பது நூல்களுக்கு மேல் எழுதிக் குவித்தார்.

பரிசுத்த வேதாகமத்தை தனது தாய் மொழியான ஜெர்மன் மொழியில் திறம்பட மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்த ஒரு திருத்தொண்டே அவருக்கு உலகம் உள்ளவரை நல்ல பெயரைத் தேடித் தந்து வருகிறது.

இந்த ஒரு தொண்டு மட்டுமல்ல; இயேசு பெருமான் உபதேசங்களைத் தொகுத்து இறவாப் புகழ் படைத்த ஞானோபதேச வினா-விடை என்ற நூலொன்றையும் எழுதி உலகுக்கு அளித்துள்ளார். அந்த நூலுக்கு Cate chism என்று பெயர் சூட்டினார்.

இசைத் துறையில் மிக வல்லுநரான லூதர், இறைவனைத் தொழுதிட, உள்ளம் உருகிப் போற்றிட, ஞானப் பாடல்கள் என்ற ஞானப் புதையலையும் திரட்டிப் புனைந்து ஞானக் கோவையாக கிறித்தவ ஞானத்துக்கு வழங்கியுள்ளார்.

போப் மார்க்கத்தார், 1529-ம் ஆண்டில் ஸ்பையர் என்ற பெருநகரில் மாநாடு ஒன்று நடத்தினார்கள். மார்ட்டின் லூதரின் கொள்கையைப் பின்பற்றும் விசுவாச மக்களுக்கு 'எதிர் மறுப்போர்' Protestant என்ற பெயர் அந்த மாநாட்டினர் சூட்டித் தூற்றினார்கள்.

'எதிர் மறுப்போர்' என்ற பெயரை போப் பிரிவினர் ஏன் லூதர் பிரிவினருக்குச் சூட்டினார்கள்? ஸ்பையர் என்ற நகரில் போப் பிரிவு கிறித்தவர்கள் நடத்திய மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களை மார்ட்டின் லூதர் பிரிவினர் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தைரியமாய் மறுத்துவிட்டார்கள்.

லூதர் பிரிவினர், தங்களது கிறித்துவ வேத சத்தியங்களை விட்டுக் கொடுக்க மாட்டோம். எங்களது வேத சத்தியங்கள் கூறும் நெறியில் உறுதியாய் இருப்போம் என்று கூறி, போப் கொள்கைகளை, அதில் சில மாறுதல்களை ஏற்க மறுத்து விட்டார்கள்.

அதனால் போப் பிரிவினர், லூதர் பிரிவினரை 'புரொட்டஸ்டண்டு' என்று பெயரிட்டு அடையாளங் காட்டினார்ர்கள். புரொட்டெஸ்ட் Protest என்ற சொல்லுக்கு 'மறுப்பு' என்று பொருள். அத்துடன் அந்த சொல்லைக் கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால், ஒன்றை சாதித்து உறுதிப்படுத்துதல் என்ற பொருளும் உண்டு.

அதற்குப் பின்னர், ஆக்ஸ்பர்க் விசுவாச அறிக்கையால், கிறிஸ்துவ வேதாகம விசுவாச சத்தியங்களை மார்ட்டின் லூதர் பிரிவினர் உறுதியாக, உண்மையாக, போலித்தனமின்றி, பக்திநெறியோடு உறுதியாய் சாதித்து நின்றார்கள்.

இந்த மகத்தான விசுவாச சாதனைக்காக எத்தனையோ பேர் மரண தண்டனைக்குப் பலியானார்கள்; அநேகம் பேர் சித்தரவதைகளுக்கும் ஆளானார்கள். இவர்கள் வரலாறு மதவரலாற்றுக்குரிய தியாக வேதமாய் இன்றும் நின்று மக்கள் இடையே பேசிக்கொண்டு இருக்கின்றது.

'மார்ட்டின் லூதர்' மெலாங்கோன், ஸ்பாலாத்தீன், துரிங் ஆகிய விசுவாச வீரர்கள் ஒன்று கூடி, ஜெர்மனிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் சென்று சுவிசேஷ சபைகளை நிறுவினார்கள். இந்த சுவிசேஷ மார்க்கம் இன்று

உலகெங்கும் ஆல்போல் தழைத்து விட்டது, உலகமெலாம் சுவிசேஷத் திருத்தூதர்கள் சென்று, இயேசு பெருமான் அருள்மொழியான, "நீங்கள் உலகமெங்கும் சென்று, சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்பதற்கு ஏற்றவாறு சுவிசேஷ அருளொளியை ஏந்தி ஊழியம் செய்து வருகின்றார்கள்.

1706-ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் தேதி சீகன்பால்க் என்ற பாதிரியும், புளூட்சோ என்ற பாதிரியும் லூதர் கிறித்துவப் பிரிவு சார்பாக, லுத்தரன் மிஷனெரியாக தமிழ்நாட்டிலே உள்ள தரங்கம்பாடியில் வந்திறங்கினார்கள்.

தமிழ்நாட்டுப் பண்பாடுகளை ஆழமாக ஊன்றி அறிந்து தமிழ்கற்று தங்கள் பெயர்களோடு ஐயர் என்ற சொல்லை சேர்த்து சீகன்பால்க் ஐயர், புளூட்சோ ஐயர் என்றும் பெயர் மாற்றி, இங்குள்ள மக்களுக்கு இயேசு பெருமானை பற்றிப் பிரச்சாரம் செய்து, தமிழர்களையும் கிறித்தவர்களாக மாற்றினார்கள்.

தமிழ் மக்களுக்குப் பரிசுத்த வேதாகமத்தை தமிழ் மொழியிலே மொழி பெயர்த்து அச்சிட்டு வழங்கிய பெருமை லூதரது திருச்சபைக்கும் அதன் திருத் தொண்டர்களுக்குமே சாரும்.

மார்ட்டின் லூதரது, கத்தரீனாள் தம்பதிகளுக்கு மூன்று ஆண்களும், மூன்று பெண்களும் பிறந்தனர். இவர்களில் இரண்டு பெண் குழந்தைகள் இறந்து விட்டார்கள். மற்ற நால்வர்களும் மார்ட்டின் லூதருக்குப் பிறகும் உயிர் வாழ்ந்து சிறந்த கிறிஸ்தவ விசுவாசிகளாக திகழ்ந்தார்கள்.

லூதர் தான் பிறந்த ஊரான ஐஸ்லோமுவைப் பார்க்க விரும்பினார். கொடிய குளிர்காலம் என்றும் பாராமல், பிறந்தகத்துக்கு அவர் பயணம் செய்ததால், அவருக்குக் கொடிய காய்ச்சலும், குளிரும் பற்றிக் கொண்டது.

அவருக்குத் திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டது. கத்தரீனாள் ஓடிப்போய் வெந்நீர் கொண்டு வந்து, அந்தக் கூட்டை அவரது இதயத்திலே ஒற்றடம் செய்தார். பின்னர்; இருமலும்-மூச்சுத்திணறலும் இணைந்து அதிக ரித்துப் பெருமூச்சு ஏற்பட்டது.

உடனே' 'இயேசு சாமீ உனது பாதத்தில் எனது ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்ற குவறிய சொற்களோடு, 1546-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் நாள் அதிகாலை 2-45 மணிக்கு தமது 63ம் வயதில் ஒரு கிறிஸ்துவ உண்மை விசுவாசியாய் பரலோகத்துக்கு மீளாப் பயணமானார்!

மார்ட்டின் லூதரது உடல் அவரது பிறந்த ஊரான ஐஸ்லோமூவிலிருந்து அவரது சுவிசேஷத் திருச்சபை அலு வலகம் இருந்த விட்டன்பர்க் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மக்கள் திரளாகக் கூடி அவரது உடலுக்கு மரியாதை செய்தார்கள்! ஜெபம் செய்தார்கள்!

ஏறத்தாழ முப்பது ஆண்டுகட்கு முன்பு, 95 நியாயங் களை எழுதி ஒட்டி கிறித்துவ விசுவாச சுவிசேஷ சொற் பொழிவை எங்கே வீர முழக்கமிட்டாரோ, அதே விட்டன் பர்க் தேவாலயப் பிரசங்கப் பீடத்தின் அடியில், உயிர் தெழுதலின் நாள் மட்டும் இளைப்பாறுதலுக்கென கிறிஸ். தவ விசுவாச வெற்றி மகிமையின் உடல் வீர அடக்கம் செய்யப்பட்டது.

புருஷிய மன்னனான மூன்றாம் வில்லியம் 1821-ம் ஆண்டில் மார்ட்டின் லூதரது திருவுருவச் சிலையை எழுப்பி, அந்த புகழ்மிக்க தத்துவ வேதாகமப் புலவனைப் பெருமைபடுத்தியுள்ளான்.

★